# தமிழரசு

16-7-76 50 காசு




# அரசு - மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெணட தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

**ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்**

## அரசு - வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16



# பெருந்தலைவருக்குப் பெருமை சேர்த்த விழா!

தமிழகத்தின் முதலமைச்சராகவும்—அகில இந்தியத் தலைவராகவும் திகழ்ந்த திரு. காமராஜ் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15 அன்று அவரது உருவம் பொறிக்கப்பட்ட அஞ்சல் தலையை வெளியிட்டு அவருக்குச் சிறப்புச் செய்துள்ளது இந்திய அரசின் அஞ்சல் துறை.

கலைவாணர் அரங்கில் ஜூலை 15-ந் தேதி காலை 10 மணிக்கு நடைபெற்ற அவ்விழாவிற்கு மேதகு தமிழக ஆளுநர் மோஹன் லால் சுகாதியா அவர்கள் தலைமை ஏற்றார்கள். தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. கார்த்திகேயன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.




தலைமைச் செயலாளர் அவர்கள் தமது வரவேற்பு உரையின் போது குறிப்பிட்டதாவது:

'' தலைவர் காமராஜ் அவர்கள் அரசாங்க நிர்வாகத்தில் குறுக்கிட்டதோ, தலையீடு செய்ததோ,

தமிழரசு

மலர்: 7 16—7—1976 இதழ்: 2

சிபாரிசு செய்ததோ கிடையாது. அவர், அதிகாரிகளை கௌரவித்து வந்தார். அதிகாரிகள் தவறு செய்தாலும் அதை நுணுக்கமான முறையில் எடுத்துக் காட்டி, அவர்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவார். அவர் உழைப்பின் உருவமாக விளங்கினார். உழைப்பதற்கு அவர் அஞ்சியது இல்லை. அப்படிப்பட்ட உயர்ந்த தலைவருக்கு அவரது பிறந்த நாளில் நினைவு அஞ்சல் தலை வெளியிடும் இந்த விழாவில் பங்கு கொள்ளும் அனைவரையும் வரவேற்கிறேன்.''

வரவேற்புரைக்குப் பின்னர், ஆளுநர் மோஹன் லால் சுகாதியா அவர்கள் தலைமையுரை ஆற்றினார். உரையில் ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டதாவது :

''காமராஜ் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். சாதாரணத் தொண்டராக இருந்து சிறந்த நாட்டுப் பற்றினாலும், உண்மையான உழைப்பினாலும், தமிழ் நாட்டின் முதலமைச்சராகவும் தேசத் தலைவராகவும் திகழ்ந்தார்.

தமிழ் நாட்டின் முதலமைச்சராக அவர் பணி புரிந்த போது, தொழில் துறையின் வளர்ச்சிக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் பலமான அடிப்படையை உருவாக்கினார். இலவசக் கல்வித் திட்டத்தையும், மதிய உணவுத் திட்டத்தையும் அவர் கொண்டு வந்தார்.

''ஏழை எளிய மக்களுடன் அவருக்கு எப்போதும் தொடர்பு இருந்தது. அவர்களுக்காகவே பாடுபட்டார். மாற்றுக் கட்சியினராலும் மதிக்கப்பட்ட தலைவராகத் திகழ்ந்தார். அவர் நினைவாகத் தபால் தலை வெளியிடுவது சிறப்பானதாகும்.''

அஞ்சல் தலையை வெளியிட்ட அஞ்சல் மற்றும் தந்தித் துறைத் துணை அமைச்சர் திரு. ஜகந்நாத் பகாடியா தம் உரையில் குறிப்பிட்டதாவது :

''காமராஜ் கடைசிவரை எளிய வாழ்க்கை வாழ்ந்து காட்டினார். செல்வாக்கு மிக்க தலைவராகத் திகழ்ந்தார். திட மனத்துடன் நாட்டுக்காக உண்மையுடன் உழைத்தார்.

''சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கவும், வறுமை, வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும் அரும்பாடு பட்டார். அவரது சேவைகளை நினைவு கூரும் வகையில் இந்த அஞ்சல் தலை வெளியிடப்படுகிறது.''

தமது உரையை முடித்து, அஞ்சல் தலையை வெளியிட்டு வைத்த அஞ்சல் துறைத் துணை அமைச்சர் திரு. பகாடியா அவர்கள், காமராஜ் உருவம் பொறிக்கப்பெற்ற அஞ்சல் தலைகள் கொண்ட ஆல்பத்தை, ஆளுநர் சுகாதியா அவர்களிடம் வழங்கினார்.

விழாவின் இறுதியில், மாநில அஞ்சல் துறைத் தலைமை அலுவலர், திரு. ஜானகிராமன் அவர்கள் நன்றி கூறினார்.

''அஞ்சல் துறை, காமராஜ் அவர்களுக்கு நினைவு அஞ்சல் தலை வெளியிடுவதன் மூலம் தனது மரியாதையைச் செலுத்தி உள்ளது''. —இவ்வாறு நன்றி உரையில் அவர் குறிப்பிட்டார்.

காமராஜ் அஞ்சல் தலையை விற்பனை செய்வதற்குக் கலைவாணர் அரங்கத்தில் அன்றைய தினம் மட்டும் திறக்கப்பட்டிருந்த தனி நிலையத்தில் ஏராளமான பொது மக்கள் வரிசையில் நின்று, ஆர்வத்துடன் அஞ்சல் தலைகளை வாங்கிச் சென்றனர்.

பெரும் புகழ் பெற்ற அகில இந்தியத் தலைவருக்குப் பெருமை செய்யும் வகையில் அமைக்கப்பட்டிருந்த அஞ்சல் தலை வெளியீட்டு விழா நிகழ்ச்சி, சிறப்பாக அமைந்தது மட்டுமல்ல, பொது மக்களின் உள்ளங்களில் தக்க வகையில் இடம் பெற்று விட்டது என்றும் சொல்லலாம்.

## உடல் ஊனமுற்றவர்களுக்கு இரயில் பயணக் கட்டணச் சலுகைகள்!

உதவிக்கு ஒரு நபரை அழைத்துக் கொண்டு இரயில் பயணம் செய்யும் உடல் ஊனமுற்றவர்களுக்கு இரயில் பயணக் கட்டணத்தில், இரயில்வேக்கள் சலுகைகளை அளிக்கின்றன. பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த உடல் ஊனமுற்ற நபர்களுக்கும் இந்தச் சலுகைகள் கிடைக்கின்றன.

உடல் ஊனமுற்ற நபரும், அவருக்கு உதவியாக வரும் நபரும் இரண்டாம் வகுப்பு டிக்கட் ஒன்றை வைத்துக்கொண்டே இரண்டாம் வகுப்புப் பெட்டியில் பயணம் செய்யலாம்.

முதல் வகுப்பில் பயணம் செய்தால் உடல் ஊனமுற்ற நபர் ஒருவரிடமிருந்து அடிப்படைக்கட்டணத்தில் 15 சதவிகிதம் வசூலிக்கப்படமாட்டாது. அவருடன் உதவிக்குப் பயணம் செய்யும் நபர் தனியாக டிக்கட் வாங்க வேண்டும்.

கண்பார்வையிழந்த ஒருவர், இரயில் டிக்கட் கட்டணத்தில் கால் பாகத்தை மட்டும் செலுத்தி, இரயில் பயணம் செய்யலாம்.

உடல் ஊனமுற்றதற்கான, அல்லது கண் பார்வை இழந்ததற்கான சான்றிதழின் பேரில் இரயில் நிலைய அலுவலர் இத்தகையோருக்கான சலுகை டிக்கட்டுகளை வழங்குகிறார்.



# வளமான எதிர்காலத்திற்கு வழி வகுக்கும் கல்வித் திட்டம்!


சி. ஜி. ரெங்கபாஷ்யம் ஐ. ஏ. எஸ்.,

செயலாளர்,

கல்வித்துறை,

தமிழ்நாடு அரசு.


கல்வித் துறையில் சில பல முக்கியமான வளர்ச்சிப் பணிகள் தொடங்கியுள்ள நேரம் இது. எனவே, சில ஆண்டுகளில் நம் தமிழ்நாட்டு அரசு செயல்படுத்த இருக்கும் 10 + 2 + 3 ஆண்டுக் கல்வி வரம்பு பற்றி முதலில் சில சொல்லலாம் என்று நினைக்கிறேன். தற்பொழுது பதினொரு ஆண்டுகள் படித்தபின் 'எஸ்.எஸ் எல். சி' எழுத வேண்டும். பின்னர் ஓராண்டு புகுமுக வகுப்பு. கல்லூரிப் பட்ட படிப்பு அதாவது 'பி.ஏ.' 'பி.எஸ்சி.,' 'பி. காம்' ஆகியவை மூன்றாண்டுகள். புதிய முறை வந்த பின்னரும் கல்லூரிப் பட்டப் படிப்பு மூன்றாண்டுகளாக நீடிக்கும். பள்ளிப் படிப்பு பத்தாண்டுகளாகக் குறையும். அதாவது பத்தாண்டுகளில் 'எஸ். எஸ்.எல்.சி' பெறலாம். 1977-78-ஆம் ஆண்டில்-அதாவது அடுத்த ஆண்டு-பத்தாவது வகுப்புக்கு வரும் மாணவர்கள்தான் அநேகமாகப் பத்தாண்டு 'எஸ். எஸ். எல். சி'.யின் முதல் அணியினராக இருப்பார்கள். அவர்கள் 1978 மார்ச்சில் 'எஸ் .எஸ். எல். சி.' எழுதுவார்கள். முன்னர் பதினொரு ஆண்டுகளில் பயின்ற விஷயங்கள் அனைத்தும் புதிய முறையில் பத்தாண்டுகளுக்குள் கற்பிக்கப்பட்டுவிடும். எனவே, பதினோராண்டு 'எஸ். எஸ். எல். சி.' 'பத்தாண்டு எஸ். எஸ். எல். சி' இரண்டின் தரமும் ஒன்றுபோல் தான் இருக்கும்.

புதிய ஆண்டு வரம்பில் முக்கியமான பகுதி, நடுவிலுள்ள இரண்டு ஆண்டுகள்தான். அதுதான் 'ஹையர் செகண்டரி' கல்வி எனப்படும். ஓராண்டு புகுமுக வகுப்பு, கல்வித் தரத்துக்கு உகந்ததல்ல என்பது, அது தொடங்கிய ஆண்டாகிய 1956-57 முதல், கல்வி வல்லுநர் அனைவரும் ஒத்துக் கொண்ட ஒன்றாகும். அதற்குப் பதிலாக புதிய முறையில் இரண்டு ஆண்டு 'ஹையர் செகண்டரி' கல்வி பயில வேண்டும். தமிழ்நாடு அரசு இதுபற்றி ஒரு வல்லுநர் குழு அமைத்தது. 'ஹையர் செகண்டரி' சில உயர் நிலைப் பள்ளிகளில்தான் இருக்க வேண்டும் என அக்குழு பரிந்துரைத்தது. மைய அரசு அமைத்துள்ள கல்வி வல்லுநர் குழுக்களின் கருத்தும் அதுதான். தற்பொழுது தமிழ்நாட்டிலுள்ள சுமார் 3,000 உயர்நிலைப் பள்ளிகளில் சுமார் 400 பள்ளிகளை 'ஹையர் செகண்டரி' பள்ளிகளாக உயர்த்த வேண்டுமென்று நம் அரசு அமைத்த குழுவின் பரிந்துரை. முதல் ஐந்து ஆண்டுகளுக்கு மட்டும் தற்பொழுதுள்ள 190 கல்லூரிகளும் இரண்டாண்டு 'ஹையர் செகண்டரி' வகுப்புகளை நடத்த அனுமதிக்கப்படும்.

## தற்போதைய கல்வி முறையில் உள்ள குற்றச்சாட்டு

தற்போதைய கல்வி முறையின் மீதுள்ள ஒரு பெரும் குற்றச்சாட்டு அது வேலைவாய்ப்பு அளிப்பதாக இல்லை என்பதேயாகும். நம்நாடு விடுதலை அடைந்த 1947-ஆம் ஆண்டில் தற்போதைய தமிழ்நாட்டுப்





பகுதியில் இருந்த கலை அறிவியல் கல்லூரிகள் 24; அவற்றில் பயின்ற மாணவர்கள் 17,000 பேர். தற் பொழுது உள்ள கல்லூரிகள் சுமார் 190; அவற்றில் பயிலும் மாணவர்கள் சுமார் 2 இலட்சம் பேர். 1975, டிசம்பர் 31-ஆம் தேதிய நிலவரப்படி, தமிழ்நாட் டில் உள்ள வேலைவாய்ப்பு அலு வலகங்களில் வேலை தேடிப் பதிவு செய்திருந்த பட்டதாரிகள் 64,000 பேர்கள். அவர்களுள் ஐயாயிரம் பேருக்குமேல், 'எம்.ஏ., முதலிய பட்ட மேற்படிப்பு படித்தவர்கள். புதிய கல்வி முறை இப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் நோக்கில் வகுக்கப்படும்.

### வேலைவாய்ப்புக்கு வகைசெய்யும் புதிய கல்வி முறை

புதிய முறையில் 'ஹையர் செகண்டரி' கல்வி இரண்டாண்டு களில் வேலைவாய்ப்புக்கு வகை செய்யும் படிப்பு முறைகள் பல வும் புகுத்தப்படும். இதுபற்றி அரசும், கல்வித்துறையும் தீவிர மாக ஆய்வு செய்து வருகின்றன.

### கல்வி வளர்ச்சிக்கு 170 கோடி ரூபாய்!

ஆண்டுதோறும் அரசு பட் ஜெட்டில் கணிசமான பகுதி கல்விக்கு ஒதுக்கப்படுகிறது. 1976-77-ஆம் ஆண்டு தமிழ் நாட்டு அரசின் மொத்தரெவின்யூ கணக்குச் செலவு ரூ. 588 கோடி. அதில் ரூ. 127 கோடி, கல்வி மானியத்தில் மட்டும், கல்விக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 1975-76ல் ஒதுக்கப்பட்ட ரூ. 118 கோடியை விட இது ரூ. 9 கோடி அதிகம். மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, அரிசன நலத்துறைப் பள்ளிகள் போன்றவற்றுக்கு வேறு மானியங்களின் கீழ் பணம் ஒதுக்கப்படுகிறது. அவ்வகைக் கல்விகளுக்காக, வேறு மானியங் களில் 1976-77-ல் ஒதுக்கப்பட்டி ருக்கும் தொகையையும் சேர்த் தால் மொத்தம் சுமார் ரூ. 170 கோடிக்குமேல் ஆகும். ஆக அரசு பட்ஜெட்டில் சுமார் 30 விழுக் காடு கல்விக்காகச் செலவிடுகிறது.

### அன்றும் இன்றும்!

கல்விக்காக ஆகும் செலவு உறு பயன் விளைப்பதாக இருக்க வேண் டும் என்பதில் அரசு இடைவிடாத நாட்டம் கொண்டுள்ளது. 1947-ஆம் ஆண்டில் தற்போதைய தமிழ்நாட்டுப் பகுதிகளில் இருந்த தொடக்கப் பள்ளிகள் 15,000. அவற்றில் பயின்ற மாணவர்கள் 15 இலட்சம். அப்பொழுது இருந்த உயர்நிலைப் பள்ளிகள் 440. அவற்றில் பயின்ற மாண வர்கள் இரண்டு இலட்சம் பேர் தான்.

தற்பொழுது தமிழ்நாட்டில் உள்ள தொடக்கப் பள்ளிகள் சுமார் முப்பத்து மூன்றாயிரம். சுமார் ஆறாயிரம் உயர் தொடக்க பள்ளிகளுட்பட-அவற்றில் பணி செய்யும் ஆசிரியர்கள் ஒன்றே முக்கால் இலட்சம் பேர்; பயிலும் மாணவர்கள் அறுபத்தொரு இலட்சம் பேர். உயர்நிலைப் பள்ளிகள் மூவாயிரத்தில் பணி செய்யும் ஆசிரியர்கள் முக்கால் இலட்சம் பேர். பயிலும் மாண வர்கள் 17 இலட்சம் பேர். ஆக பள்ளி மாணவர்கள் எழுபத் தொரு இலட்சம் பேருக்கும் தர மான கல்வி அளிக்க வேண்டும் என்பதையும், ஆசிரியர்கள் இரண்டரை இலட்சம் பேரையும் சிறந்த கல்விப் பணி செய்திட ஊக்குவிக்க வேண்டும் என்பதை யும் பள்ளிக் கல்வித் துறையும், அரசும் அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளன.

### அறிவியலுக்கு முக்கியத்துவம்

அறிவியல் கல்வித்தர மேம் பாட்டுக்காகப் பல திட்டங்கள் செயல்படுகின்றன. உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்படுகின்றன. உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக் கருவிகள் வாங்கப்படுகின்றன. இவ்வாண் டுடன் புதிய பாடத் திட்டம் 10-ஆம் வகுப்பு முடிய அமலுக்கு வந்துவிட்டது. அதில் அறிவியலுக்கு முதன்மைஅளிக்கப் பட்டு வருகிறது. அறிவியல் ஆசிரியர்கள் அனைவருக்கும் தக்க மறுபயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### இருபது அம்சத் திட்டத்தால் மாணவர் பெற்ற பயன்கள்

நமது பாரதப் பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தில் ஒரு அம்சம் பாடநூல்களும், நோட் டுப் புத்தகங்கள் போன்றவையும்






மலிவு விலையில் மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதாகும். தமிழ்நாட்டில் 1-3 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுள் மூன்றில் ஒரு பங்கினருக்கு அதாவது ஆண்டுக்குச் சுமார் 12 இலட்சம் பேருக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இது தவிர அனைத்துப் பள்ளிகளிலும் புத்தக வங்கிகள் நிறுவிடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மைய அரசு கண்ட்ரோல் விலைக்குத் தரும் பேப்பரைக் கொண்டு மலிவு விலையில் நோட்டுப்புத்தகங்களைத் தயாரித்து விற்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கல்லூரி மாணவர்களுக்கும் இந்த மலிவு விலை நோட்டுப் புத்தகங்கள் கிடைக்கும்.

பள்ளி, கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு உணவு போன்ற பொருள்கள் அனைத்தும் மலிவு விலைக்கு கிடைக்கும்படி செய்ய உணவுப்பொருள் வழங்கு துறை போன்றவை மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுவும் இருபது அம்சத் திட்டத்தின்கீழ் செய்யப்படும் மற்றொரு பணியாகும்.

தமிழ்நாட்டில் தற்பொழுது 6-11 வயதுச் சிறுவருள் 90 விழுக்காடு பேரும், 11-14 வயதுச் சிறுவருள் 52 விழுக்காடு பேரும், 14-17 வயதுச் சிறுவருள் 33 விழுக்காடு பேரும் பள்ளிக்குச் செல்கின்றனர். இன்னும் பள்ளிக்குச் செல்லாமல் இருக்கும் சிறுவர் சிறுமியருக்குக் கல்வியளிப்பதை அரசு தனது முதன்மையான கடமையாகக் கருதுகிறது. நம்நாட்டில் கல்விப் பணி முழுமையடைய வேண்டுமானால் அது மாற்று முறைக் கல்வி (Non-formal Education) மூலம்தான் இயலும் என்பது இப்பொழுது அனைத்து மட்டத்திலும் உணரப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மாற்று முறைக் கல்விவளர்ச்சிக்கென ஒரு தனி இயக்குநரை நியமித்துள்ளோம். இவ்வாண்டு இம் மாநிலத்தில் உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களில், ஒவ்வொன்றிலும் ஒரு மாற்றுமுறைக் கல்விநிலையம் அமைக்கப்படும். ஏழ்மை காரணமாகவோ, பிற காரணங்களினாலோ பள்ளி வயதில் பள்ளிக்குச் செல்ல இயலாது போனவர்கள், சில வகுப்புகள் படித்த பிறகு நின்று விட்டவர்கள் போன்றவர்கள் எல்லாம், வயதாகி விட்ட போதிலும் மாற்று முறைக்கல்வி வகுப்புகளில் சேர்த்து கல்வி பெறலாம்.



### வளமான எதிர்காலமே நமது குறிக்கோள்!

நாட்டு முன்னேற்றத்துக்கும், சமுதாய முன்னேற்றத்துக்கும் கல்வி வளர்ச்சி முதன்மையானதொரு கருவியாகும். நம் நாட்டு மக்களுக்கு நிலையான—வளமான எதிர்காலத்தை உருவாக்கச் சமுதாய, பொருளாதாரத் துறைகளில் பல மாபெரும் திட்டங்களை உருவாக்கி, தீவிரமாகச் செயல்படுத்தி வரும் காலகட்டம் இது. கல்வித் துறையிலும் அவற்றுக்கு இசைந்த மாற்றங்களை ஆங்காங்கு செய்து கொண்டு நம் நாட்டின் வளமான எதிர்காலத்தைக் குறிக்கோளாகக் கொண்டு, அரசு, கல்வித் துறையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகிய அனைவரும் கல்வி வளர்ச்சிப் பணியில் ஊக்கமாக தீவிரமாக ஈடுபடுவோமாக! வணக்கம்.

**(சென்னை வானொலியில், 20-6-'76 அன்று தமிழ்நாடு அரசின் கல்வித்துறைச் செயலாளர் திரு. சி. ஜி. ரெங்கபாஷ்யம் அவர்கள் ஆற்றிய உரையின் தொகுப்பு.)**



# நாட்டிற்காக நாமும் நம்மால் இயன்ற அளவு உதவிடுவோம் !

—ஆர். பாலசுப்பிரமணியம்,
துணை மண்டல இயக்குநர்,
தேசிய சேமிப்பு இயக்ககம்.

நம் பிரதமரின் 20-அம்சத் திட்டத்தின் சாதனைகள் நாடறிந்த உண்மை. உலகமே கண்டு வியக்கும் வண்ணம், பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டு, அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்தும் நியாயமான விலையில், தேவைக்கு ஏற்ற அளவில் கிடைக்கும் உண்மை நிலையை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. நாட்டு மக்களிடையே கடமை உணர்வும், கட்டுப்பாடுடன் செயல்படும் செயலாக்கமும் ஏற்பட்டுள்ளன. மக்கள் எல்லாரும் எல்லாமும் கிடைக்கப் பெற்று, பொருளாதார மேம்பாடுடைய வாழ்வை உருவாக்கிட, 20 அம்சத் திட்டத்தின் மற்ற அம்சங்களும் விரைந்து செயல்படுத்தப்பட வேண்டும். மூலதனப் பற்றாக்குறை, முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக அமைந்திடுவதை நாம் அனுமதிக்கக்கூடாது. நம் பிரதமர் கூறியதுபோல கடின உழைப்பு, உழைப்புக்கு ஏற்ற ஊதியம், அளவறிந்து வாழும் சிக்கன மனப்பாங்கு, சேமிப்பைச் சிறந்த வழியில் முதலீடு செய்யும் தீர்க்க தரிசனம் இத்தகைய மன உறுதியுடன் நாம் செயல்பட்டால்தான் நம் இலட்சியங்கள் நிறைவேறும்.

''அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல இல்லாகித் தோன்றாக் கெடும்'' என்ற வள்ளுவன் வாய்மொழியை மக்களிடையே பரப்பிடும் நோக்கத்தோடு 1948-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மத்திய அரசின் தேசிய சேமிப்பு நிறுவனம், தனக்கிட்ட பணியினை இயன்ற அளவு வெற்றிகரமாக நிறைவேற்றி வந்துள்ளது என்பதைப் புள்ளி விவரங்கள் தெளிவுபடுத்துகின்றன.

முதல் 5 ஆண்டுத் திட்டகாலத்தில் சிறுசேமிப்பு மூலமாக 242 கோடியும், இரண்டாம் திட்ட காலத்தில் 401 கோடியும், மூன்றாம் திட்ட காலத்தில் 574 கோடியும் திரட்டப்பட்டுள்ளது. இவ்வளவு பெரும் தொகையைச் சேமித்து, அதை அரசின் சிறு சேமிப்புத் திட்டங்கள் வாயிலாக நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு அர்ப்பணித்திருப்பது திட்ட முன்னேற்றத்தில் மக்களுக்கு உள்ள ஈடுபாட்டையும், நம்பிக்கையையுமே காட்டுகிறது.

வசதி படைத்தோரும், வசதி அற்றோரும் பங்குபெறும் வகையில் பலதரப்பட்ட சிறுசேமிப்புத் திட்டங்கள் உள்ளன.

மாத ஊதியம் பெறும் அலுவலக ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களிடையே ''சம்பளப்பட்டியல் சேமிப்புத் திட்டம்'' மிகவும் பிரபலமாகியுள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மாதச் சம்பளம் பெறும் 13 இலட்சம் ஊழியர்களில் ஏறக்குறைய 8 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் இத்திட்டத்தின் வாயிலாக ஒவ்வொருமாதமும் 5, 10, 15,20 ரூபாய் என்ற வகையில் ரூபாய் 60 இலட்சத்திற்கும் அதிகப்படியான தொகையைச் சேமித்து வருகிறார்கள்.

இதேபோன்று பள்ளிகளில் மாணவர்களுக்காக மாணவர்களாலேயே நடத்தப்படும் 'சஞ்சாயிகா' ( Sanchayika )என்றழைக்கப்படும் பள்ளிச் சேமிப்புத் திட்டம் தமிழ்நாட்டிலே 1,650 பள்ளிகளில் இப்போது நடத்தப்பட்டு வருகின்றது. 5 இலட்சத்துக்கு மேற்பட்ட மாணவ மாணவியர் இத்திட்டத்தில் இதுவரையில் பங்கு பெற்றிருக்கிறார்கள். அவர்கள் சேமித்து வைத்திருக்கும் தொகை ரூ. 13.5 இலட்சத்திற்கும் அதிகமே. பள்ளிப் பருவத்திலேயே சேமிக்கும் பழக்கத்தில் ஈடுபடுவதால் சிக்கனத்தைக் கற்றுக்கொள்வதோடு, பணத்தை வைத்து நிர்வாகம் செய்யும் திறனையும் பெறுகின்றார்கள். இவர்கள் நாளை பெரியவர்களாகி, சம்பாதிக்க ஆரம்பிக்கும்பொழுது சிக்கனப் பழக்கத்தைக் கடைப்பிடித்து வரவுக்குட்பட்ட செலவு செய்து, தங்கள் வீட்டிலும், நாட்டிலும் சுபிட்சத்தை நிலவச் செய்ய உதவுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

குறைந்த வருவாயுள்ளவர்கள் கூட, தங்களால் இயன்றபோது இயன்ற அளவில் சேமிக்க அஞ்சலக சேமிப்பு வங்கி பயன்படுகிறது. இந்தக் கணக்கில் ரூபாய் 200-க்குக் குறையாமல் 6 மாதங்கள் வரை வைத்திருப்பவர்களுக்கு ஆண்டுக்கு 2 முறை நடக்கும் பரிசுக்குலுக்கலில் ரூ. 50 முதல் ரூ. 1 இலட்சம் வரை பரிசு பெற வாய்ப்புள்ளது.

பணவீக்கத்தைக் குறைக்கவும், விலைவாசியின் உயர்வைத் தடுக்கவும் அரசினர் மேற்கொண்ட பல நடவடிக்கைகளில் ஊதியம் மற்றும் அகவிலைப்படி முடக்க நடவடிக்கையும் (Impounding of additional wages and Dearness allowances) ஒன்றாகும். இதன் விளைவாக இன்றையதினம் அத்தியாவசியப் பொருள்களின் விலை வீழ்ச்சியடைந்திருப்பதைக் காண்கிறோம்.

நம் இந்திய அரசு இப்பணியில் கண்ட வெற்றியை, பல வெளிநாட்டினர் புகழ்ந்துள்ளார்கள்! "விலைவாசி உயர்வு" எனும் வியாதியைப் போக்க, கொடுக்கப்பட்ட மருந்துதான் ஊதியமுடக்க நடவடிக்கை. மருந்து மிகக் கசப்பாக முதலில் இருந்தாலும் வியாதி விரைவில் குணமடைந்து விட்டதால் மருந்தின் தன்மையை சகித்துக் கொண்டோம். 'பொருள் விலையேற்றம்' என்ற வியாதி மீண்டும் நம்மைத் தாக்காதிருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்கிறோம்.

1974-75 ஆண்டுகளில் ஊதியம் மற்றும் அகவிலைப்படியை முடக்கி வைத்ததன் மூலம் இதுவரை ரூபாய் 1,000 கோடிக்கும் மேலாகச் சேர்ந்திருக்கிறது. இத்தொகையை ஏற்கெனவே வாக்களித்தபடி 5 ஆண்டுத் தவணைகளில் திருப்பித் தரவிருக்கிறார்கள். முதல் ஆண்டு தவணையாக ஜூலை மாதம் சுமார் 270 கோடி ரூபாயைப் பலதுறைகளில் பணி புரிவோர் ஒவ்வொருவரும் சுமார் ரூ. 40- முதல் ரூ. 500 வரை பெற இருக்கின்றார்கள். இவ்விதம் கிடைக்கும் அவ்வளவு பணத்தையும் வீணாக விரயம் செய்யாமல் அதில் குறைந்தபட்சம்பாதித்தொகையையாவது சிறந்த வகையில் முதலீடு செய்து வைத்தோமானால் நமது அவசர, அவசியத் தேவைக்கு, பின்னர் உபயோகப்படுத்த உதவும்.




அஞ்சலக 5 ஆண்டுத் தொடர் வைப்புத் தொகைத் திட்ட (**Recurring Deposit**) வாயிலாகச் சேமிப்பது பல வகையிலும் இலாபகரமானது. 60 ரூபாய் அல்லது 120 ரூபாயை அதாவது மாதம் 5 ரூபாய் அல்லது 10 ரூபாய் வீதம் ஓர் ஆண்டுக்கான மொத்தத் தொகையையும் 'அட்வான்ஸ் டெபாசிட்'டாகச் செலுத்தி விடலாம். இப்படிச் செய்வதன் மூலம் எந்த ஒரு நல்ல காரியத்துக்கும் பயன்படாமல் வீணுகப் பணம் செலவாவதைத் தடுக்கவும், 5 ஆண்டுகளுக்குப் பிறகு நம் குடும்பங்களில் நடக்கவிருக்கும் நல்ல பல காரியங்களுக்கு உபயோகப்படுத்தவும் முடிகிறது.

தொடர்வைப்புத் திட்டக் கணக்கில் போடும் பணத்துக்கு 9.25 சதவிகித வட்டி தரப்படுகிறது. மேலும் கணக்கை ஆரம்பித்த தேதியிலிருந்து ஓர் ஆண்டுக்குப் பிறகு எப்போது வேண்டுமானுலும் அவசரத் தேவைக்குச் சேர்ந்திருக்கும் மொத்தப்பணத்தில் பாதியை உடனடியாகக் கடனுகப் பெறவும் வசதியிருக்கிறது. வாரிசு நியமனம் மற்றும் வேறு ஊருக்கு கணக்கை மாற்றிக் கொள்ளும் வசதியும் உள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக 2 ஆண்டு வரை தொடர்ந்து பணம் செலுத்திய பிறகு, கணக்கு வைத்திருப்பவர் தெய்வாதீனமாக இறக்க நேரிட்டால், அவரின் வாரிசுதாரருக்கு உடனடியாக 5 ஆண்டு முடிவில் கிடைக்கும் மொத்தத் தொகையும் கிடைக்கிறது. அதாவது மாதம் 5 ரூபாய் வீதம் சேமிப்போருக்கு 375 ரூபாயும், 10 ரூபாய் வீதம் சேமிப்போருக்கு 750 ரூபாயும் கிடைக்கிறது. இத்தகைய பாதுகாப்புடைய சேமிப்பு, மற்ற எந்த பாங்குகளிலும் நடத்தப்படும் தொடர்வைப்புத் திட்டக் கணக்குகளில் கிடைப்பதில்லை.

இந்த அஞ்சலகத் தொடர் வைப்புத் திட்டம், தமிழ்நாட்டிலுள்ள பல அலுவலகங்களில் பணிபுரியும் மாதாமாதம் சம்பளம் வாங்குவோருக்குப் புதிதல்ல! இந்தக் கணக்கிலேதான் தமிழ்நாட்டில் சுமார் 8 இலட்சம் பேர் அவரவர்கள் சக்திக்குத் தகுந்தபடி மாதாமாதம் 5, 10, 15, 20 ரூபாய் என்ற வகையில் சம்பளப்பட்டியலில் பிடித்தம் செய்வதன் மூலம் சேமித்து வருகிருர்கள். 5 ஆண்டு முடிவில் கணக்கு பூர்த்தியானவுடன் மொத்தத் தொகையையும் அவரவர்கள் பணிபுரியும் அலுவலகத்திலேயே அஞ்சல் நிலைய அலுவலர்களால் பட்டுவாடா செய்யப்படுகிறது. அஞ்சலகத்திற்குப் போய்ப் பணம் பெறத் தேவையில்லை. இதன் காரணமாக மேலும் ஒரு புதிய கணக்கைத் தொடர்ந்து சேமிக்கவும் இதுவரை இத்திட்டத்தில் சேராதோர் புதிய கணக்கை ஆரம்பிக்கவும் முற்படுகின்றனர்.

தொடர் வைப்புத் திட்டம் தவிர, ஒன்று, இரண்டு, மூன்று, ஐந்து ஆண்டு அஞ்சலகக் கால வரை வைப்புத் திட்டங்களிலும் (Time Deposit) முதலீடு செய்யலாம். இதற்கு 8 முதல் 10 சதவீத வட்டி தரப்படுகிறது.




என்னுடைய பணிவான வேண்டுகோள் என்னவென்ருல் ஜூலை மாதத்தில், முடக்கப்பட்ட திருப்பிப் பெறவிருக்கும் ஊதியம் மற்றும் அகவிலைப்படியை (**Refund of Impounded wages and dearness allowances.**) ஒவ்வொரு நபரும் இப்போதே அவரவர்களுடைய நிர்வாகத்தினருக்கும் தங்களுக்குக் கொடுக்கவிருக்கும் தொகையிலிருந்து ஒரு குறிப்பிட்ட பகுதியைப் பிடித்தம் செய்துதங்கள் பெயரில் அஞ்சலகத் தொடர்வைப்புத் தொகைக் கணக்கிலோ ஒன்று, இரண்டு, மூன்று, ஐந்து ஆண்டுக் காலவரை வைப்புத் தொகைக் கணக்கிலோ அல்லது 7 ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரத்திலோ முதலீடு செய்யும்படி விண்ணப்பம் கொடுத்து விடவேண்டும். இதற்கிணங்க, நிர்வாகத்தினர், விண்ணப்பத்தில் குறிப்பிட்டபடி தொகையைப் பிடித்தம் செய்து அஞ்சலகத்தில் முதலீடு செய்து உதவுவார்கள். இல்லையெனில் கையில் மொத்தப் பணத்தையும் பெற்ற பிறகு முதலீடு செய்யலாமென்றிருந்தால், அது அவ்வளவு சாத்தியமாகாது. முதலீடும் நடக்காது.

இது குறித்து மத்திய, மாநில அரசு உயர் அலுவலர்களும், தனியார் துறை நிர்வாகிகளும், Chamber of Commerce, South India Mill Owners Association, L.I.C. ஆகியவையும், மேலும் பல தொழிற்சங்கத் தலைவர்களும் மற்றும்பலரும் அவரவர்களுக்குச் சம்பந்தப்பட்ட துறையில் பணிபுரிவோருக்கு அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். இதன் விளைவாக ஆயிரக்கணக்கானேர் தங்களுக்கு ஜூலை மாதத்தில் கிடைக்கவிருக்கும் முடக்கத் தொகையிலிருந்து ஒரு பகுதியை அஞ்சலகத்தில் முதலீடு செய்ய, பிடித்தம் செய்து கொள்ளும்படி தாமாகவே விண்ணப்பித்துக் கொண்டு வருகிருர்கள்.

இவ்விதம் ஊதிய முடக்கத் தொகையில் ஒரு பகுதியை முதலீடு செய்வதன் மூலம், நமக்கென, அத்தியாவசியமான நேரத்தில் உதவ ஒரு கணிசமான தொகை எப்போதுமே தயாரான நிலையில் இருப்பதோடு, பொருள்களின் விலையேற்றம் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டு, அதனிலும் மேலாக நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு நம் சேமிப்பு தற்காலிகமாகப் பெரும் துணையாக அமையும். எல்லாவற்றுக்கும் மேலாக, நாடு நமக்கு என்ன செய்தது என்று கேளாமல், 'நாட்டிற்காக, நாமும், நம்மால் இயன்ற அளவு உதவினேம்' என்ற மன நிறைவும் ஏற்படும்.

# சென்னை, எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலையின் சாதனைகள்



கடந்த ஓர் ஆண்டுக் காலத்தில் நாட்டில் தொழில் துறை உற்பத்தி பொதுவாக உயர்ந்து வந்த போக்குக்கு ஏற்ப சென்னை, எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலையும் (Madras Refineries) எண்ணெய் தூய்மைப்படுத்தும் பணியை 2 இலட்சம் டன் அதிகரித்து 27 இலட்சம் டன்னாக உயர்த்தியது. இதற்கு முந்தைய ஆண்டில் 25 இலட்சம் டன் கச்சா எண்ணெய்யை இந்நிறுவனம் தூய்மைப்படுத்தியது. அதே போன்று சமையல் எரி வாயு உற்பத்தியும் மும்மடங்கு அதிகரித்தது. 19.5 இலட்சம் சிலிண்டர், சமையல் எரிவாயு உற்பத்தி செய்யப்பட்டது. இதற்கு முந்தைய ஆண்டில் 6.5 இலட்சம் சிலிண்டர், சமையல் எரிவாயு தான் உற்பத்தி செய்யப்பட்டது. கடந்த ஆண்டில் ஆஸ்ஃபால்ட் உற்பத்தியும் 80,000 டன்னிலிருந்து 2,40,000 டன்னுக்கு அதிகரித்தது.

1969-70-இல் இந்நிறுவனத்தின் மொத்த விற்று முதல் 27 இலட்சம் ரூபாய்தான். ஆனால் 1975—76-இல் இது ரூ. 250 கோடியாக அதிகரித்தது. ஆண்டு மொத்த விற்றுமுதல் அடிப்படையில் பார்க்கும்போது முதல் 10 அரசுத் துறை நிறுவனங்களில் 7-வது இடத்தை வகிக்கிறது சென்னை எண்ணெய். தூய்மைப்படுத்தும் நிறுவனம்.

அந்நியச் செலாவணியை ஈட்டுவதிலும் இந்நிறுவனம் சிறந்து விளங்கியுள்ளது. 35,000 டன் உயர் ரக ஆஸ்ஃபால்ட் ஏற்றுமதி செய்து 35 இலட்சம் அமெரிக்க டாலர் மதிப்புக்கு அந்நியச் செலாவணி பெற்றது இந்நிறுவனம். இரயில்வேக்களுக்கு 13,660 மெட்ரிக் டன் மசகெண்ணெய் வழங்கி ரூபாய் 1.56 கோடிக்கு அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது.

நிர்வாகத்தில் தொழிலாளர்களும் பங்கு கொள்வதை ஊக்குவிப்பதற்காக சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலையில் உற்பத்தி மட்டத்தில் கூட்டுச் சபைகளும், பல்வேறு மட்டங்களில் செயற் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. சிறந்த முறையில் பணியாற்றுவதால் இந்நிறுவனத்தின் உற்பத்தி அதிகரித்துள்ளது. எல்லாத் துறைகளிலும் சிக்கனமும் கடைப்பிடிக்கப்படுகிறது. எரிபொருளைச் சிக்கனப்படுத்தியதன் மூலம் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் மிச்சப்படுத்தப்பட்டுள்ளது. அன்றாடம் உபயோகிக்கப்படும் தண்ணீர் அளவும் 3 இலட்சம் காலன்களிலிருந்து 26 இலட்சம் காலனாகக் குறைந்துள்ளது.

சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை, மற்ற எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை ஊழியர்களுக்கும், எண்ணெய் தூய்மைப்படுத்துதல் சம்பந்தப்பட்ட மற்ற நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் தொழில் நுட்பப் பயிற்சி அளித்து வருகிறது. ஐ.நாவின் சிறப்புத் திட்டங்களின்படி வெளிநாடுகளுக்கும் நிபுணர்களை அனுப்புகிறது இந்நிறுவனம். தொழில் பயிலுநர் திட்டத்தின்படி 80 தொழில் பயிலுநர்கள், பொறியியல் பட்டதாரிகள், டிப்ளமோதாரர்கள் ஆகியோர் தொழில் பயிற்சி பெறுகின்றனர். குறியளவில் இத்தகையோரின் எண்ணிக்கை இரு மடங்காகும்.

சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்கப்படாமல் இருக்கப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்த ஆலைப் பகுதியில் 1,35,400 சதுர அடி நிலப்பரப்பில் புல்வெளி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஆலைப் பகுதியில் சுமார் ஆயிரம் செடிகள் நடப்பட்டுள்ளன. அவை விரைவில் வளர்ந்து மரங்களாகி அப்பகுதியை அழகுறச் செய்யும். இந்த நிறுவன ஊழியர்கள் வீட்டு வசதிக்காக 1975—'76-இல் 38 இலட்சம் ரூபாய் கடன் பெற்றுள்ளனர். இது வரை வீட்டு வசதித் திட்டங்களுக்காக இந்நிறுவன ஊழியர்களுக்குக் கிட்டத்தட்ட ரூ. 1.20 கோடி வழங்கப்பட்டுள்ளது.

## வளரும் தமிழகத்தில்

# தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்

**ஆர். சண்முகம்,** ஐ.ஏ.எஸ்.,
நிருவாக இயக்குநர்,
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்.

'டான்சி' என்ற பெயரில் நாட்டு மக்களுக்கு நன்கு அறிமுகமாகியுள்ள தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்திற்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. பொதுத் துறை நிறுவனங்களுள், பலதரப்பட்ட தொழில்களை ஒருங்கிணைத்துத் திறம்படச் செயல்படுத்தும் ஒரே நிறுவனமாக 'டான்சி' செயல்பட்டு வருகிறது. 57 உற்பத்திக் கூடங்களை மாநிலத்தில் பலப்பல இடங்களில் நிறுவி, செம்மையாகச் செயல்படும் 'டான்சி' நிறுவனம் 1965-ஆம் ஆண்டு துவக்கப்பட்டதாகும். அகில பாரதத்தின் ஆக்கப் பணிகளுக்காக அயராது பாடுபடும் நமது பாரதப் பிரதமர் அவர்கள், நாடு முன்னேற—நாட்டு மக்கள் நல்வாழ்வு பெற நல்ல பல திட்டங்களை உருவாக்கி அவற்றை விரைவில் நிறைவேற்ற எடுத்துள்ள நன் முயற்சிகள் அனைத்தையும் நாம் அறிவோம். நம் தமிழ் நாட்டில் அந்த நல்ல திட்டங்களை விரைந்து நிறைவேற்ற சமீப காலமாக அரசுத் துறையினர் எடுத்துக் கொண்ட துரித நடவடிக்கைகளின் விளைவாக, தமிழகத்தில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றங்கள் பல காணப்பட்டுள்ளன. தொழில் துறையில் குறிப்பாக தொழில் தகராறுகள் (Industrial Disputes) வெகுவாகக் குறைக்கப்பட்டு, தமிழகத்தில் தொழில் அமைதி நிலவுவதை நாம் நன்கு காணுகின்றோம்: நம் பாரதப் பிரதமர் நமக்கு அளித்துள்ள திட்டங்கள் பலவற்றைத் தமிழக அரசுத் துறை நிறுவனங்களுள் ஒன்றான "தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்" எவ்வாறு மேற்கொண்டு, நாடு வளர, மக்கள் நல்வாழ்வு பெறச் சேவை செய்து வருகின்றது என்பதை விளக்கிட விழைகின்றேன்.

ஆரம்பக் காலத்தில் ஆண்டொன்றிற்கு சுமார் ரூ. 400 இலட்சம் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்து வந்த இந்த நிறுவனம், தனது உற்பத்திக் கூடங்களைப் பொருளாதார ரீதியில் வலிமையுள்ளதாக ஆக்கி, இடைப்பட்ட இன்னல்கள் பலவற்றையும் கடந்து, உற்பத்தியைக் கணிசமான அளவு உயர்த்தி, சில உற்பத்திக் கூடங்களை வேறு அரசுத் துறை நிறுவனத்திற்கு மாற்றிய பிறகுங்கூட, சென்ற 1975-76 நிதி ஆண்டில் ரூ. 1,100 இலட்சம் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்யுமளவிற்கு அரியசாதனைகள் புரிந்திருக்கிறது. மேலும், உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் தொழிலாளிகளுக்கு ஊக்க ஊதியம் அளிக்கும் திட்டங்கள் இந்நிறுவனத்தின் வார்ப்படத் தொழிற்சாலைகள் மற்றும் முலாம் பூசும் தொழிற்சாலைகளில் செயல்படுத்தப்படுகின்றன.

"'டான்சி'யின் கீழ் இயங்கி வரும் தொழிற்சாலைகள் பல வகைப்பட்டவையாகும். அவை பெரிய கட்டுமானத் தொழிற்சாலைகள், பொறியியல் தொழிற்சாலைகள், இரும்பு பர்னிச்சர் தொழிற்சாலைகள், மர பர்னிச்சர் தொழிற்சாலைகள், கருவிக் கூடங்கள், இரும்பு வார்ப்படத் தொழிற்சாலைகள், விவசாய உபகரணங்கள் செய்யும் தொழிற்சாலைகள், தோல் தொழிற்சாலைகள், 'மோபெட்' தொழிற்சாலை ஆகும்.



**மத்திய இரயில்வேயினருக்காக 'ஜான்சி' என்ற இடத்தில், 'டான்சி' நிறுவியுள்ள 100 மீட்டர் உயரமுடைய 'மைக்ரோ வேவ்' கம்பங்கள்.**

பெரிய கட்டுமானத் தொழிற்சாலைகள் (Structural Works) 'டான்சி' யின் ஓர் ஆண்டின் மொத்த உற்பத்தியில், கால் பங்கு உற்பத்தியைத் தருகின்றன. இத்தொழிற்சாலைகள் சென்னை அம்பத்தூரிலும், திருச்சி மாவட்டத்தில் திருவெறும்பூரிலும், சேலம் மாவட்டத்தில் மேட்டூர் அணையிலுமுள்ளன. மேட்டூர் அணையில் உள்ள தொழிற்சாலையில் கட்டுமான வேலைக்கான வசதிகளுடன், தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிதாக உள்ள முலாம் பூசும் அறையும் உள்ளது. இரயில்வேயினருக்காக இந்தத் தொழிற்சாலையில் செய்து தரப்பட்ட "மைக்ரோவேவ்" கம்பங்கள் அனைத்திந்தியப் பாராட்டைப் பெற்றுள்ளன. இதே முறையில் தபால் தந்தி துறையினருக்கும் வானளாவிய கம்பங்கள் பலவற்றை 'டான்சி' கட்டிக் கொடுத்துள்ளது. இவற்றில் ஒன்று நம் நாட்டினர் விண்வெளியில் அனுப்பியுள்ள செயற்கைக்கோள் ஆர்யப்பட்டாவிடமிருந்து வரும் சமிக்ஞைகளை ஈர்த்து அளிக்கின்றது.

அந்தந்த மாவட்டங்களின் பொறியியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக டான்சியின் பொறியியல் தொழிற்சாலைகள் (Engineering Works) திருப்பாச்சூர், செம்பரம்பாக்கம், விழுப்புரம், மாயவரம், கரூர், திருப்பூர், நாமக்கல், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, விருதுநகர், வள்ளியூர், தூத்துக்குடி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

டான்சியின் கீழ் இயங்கிவரும் இரும்பு பர்னிச்சர் தொழிற்சாலைகள் வேலூர், கும்பகோணம் பழனி, ராஜபாளையம் ஆகிய நான்கு இடங்களில் உள்ளன. அலுவலகங்களுக்கும், அழகிய இல்லங்களுக்கும், பலவகைத் தொழிலகங்களுக்கும் தேவைப்படும் மேஜை, நாற்காலி, அலமாரி, கட்டில் போன்ற பர்னிச்சர் வகைகளை 'டான்சி' திறம்பட உற்பத்தி செய்கின்றது. மருத்துவமனைகளுக்கான பர்னிச்சர் வகைகளையும் இந்தத் தொழிற்சாலைகள் செய்து அளிக்கின்றன. இருதய நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிர்ச்சிக்குட்படாமல், சாய்ந்த வண்ணமே 'எக்ஸ்ரே' (X-ray) எடுப்பதற்கு ஏற்ப திருத்தியமைக்கப்பட்ட பௌளர் (Fowler) கட்டில் ஒன்றையும் டான்சி உருவாக்கி யுள்ளது.

மர பர்னிச்சர் உற்பத்திக்காக டான்சியின் தொழிற்சாலைகள்



வள்ளுவர் கோட்டத்தின் அரங்கத்தில் 'டான்சி' நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள இருக்கைகள்.

பரவலாக கிண்டி, கிருஷ்ணகிரி, கடலூர், சேலம், மன்னார்குடி, மதுரை, புதுக்கோட்டை, திருநெல்வேலி, பத்தமடை, பொள்ளாச்சி ஆகிய பத்து இடங்களில் செயல்பட்டு வருகின்றன. தரத்தால் உயர்ந்த இந்தத் தொழிற்சாலைகளின் பொருள்கள் பொது மக்களைப் பெரிதும் கவர்ந்து மாநில முழுவதும் நன்கு அறிமுகமாகியிருக்கின்றன. உறுதிக்கும் எழிலுக்கும் எடுத்துக் காட்டான மரச்சாமான்கள் இவை. தமிழகத்தில் பெரும்பான்மையான பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் டான்சி மர பர்னிச்சர் வகைகள் உபயோகப்படுத்தப் படுகின்றன என்பது கண்கூடு.

கிண்டி, அம்பத்தூர், ஈரோடு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள டான்சியின் கருவிக் கூடங்களில் (Tool Rooms) கிண்டி கூடம் அனைத்து இந்தியாவிலும் நன்கு அறிமுகமாகியிருக்கின்றது. பாரத விண்வெளி ஆராய்ச்சி அமைப்பிற்குப் பல கருவிகளை இவை செய்து அளித்துள்ளன.

கிண்டி, காட்பாடி, தஞ்சாவூர் திருநெல்வேலி, ஈரோடு ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் வார்ப்படத் தொழிற்சாலைகள், குடிநீர் வாரியம், வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்களுக்கும், இன்னும் தனியார் துறை நிறுவனங்களுக்கும் இரும்பு வார்ப்படக் குழாய்களையும், பிற வார்ப்படப் பொருள்களையும் செய்து அளிக்கின்றன.

விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் டான்சி உற்ற தோழன் என்பதனை மக்கள் நன்கு அறிவர். கலப்பை, இழுவை (Trailer) போன்ற பலவகை விவசாயத் தேவைகளை திருச்சியில் இயங்கி வரும் விவசாயக் கருவிகள் தொழிற்சாலை (Farm implement Unit) உற்பத்தி செய்கிறது. விவசாயிகளுக்கு மிகவும் தேவையான, பூச்சிகளைக் கட்டுப்படுத்த உதவும் உபகரணங்கள் (Pest Control) கும்பகோணம் டான்சி தொழிற்சாலையில் (Equipments) உற்பத்தி செய்யப்படுகின்றன.



தோல் துறையில் டான்சி பெரும் சாதனைகள் புரிந்திருக்கின்றன. வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள விண்ணமங்கலம் என்ற சிற்றூரில் இயங்கிவரும் தோல்



பதனிடும் தொழிற்சாலை ('TANSI' Tannery) பலவகை தோல்களை (Finished leathers) அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அனைத்துலகிற்கும் நன்கு அறிமுகமாகியிருக்கின்றது. இதே ஊரில் இயங்கிவரும்

டான்சியின் ஆட்டு உரோமத் தொழிற்சாலையின் (Wool Processing Centre) உற்பத்தி அனைத்துமே அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.





அம்பத்தூரில் அமைந்துள்ள 'டான்சி' கருவிக்கூடத்தில் (Tool Room) ஒரு பகுதி.

தோல் துறையில் இயங்கி வரும் மற்ற மூன்று தொழிற்சாலைகளில் இரண்டு சென்னை பெரம்பூரிலும், மற்றொன்று பல்லவபுரத்திலும் இயங்கி வருகின்றன. இவைகள் காலணிகள், (Foot Wear) கையுறைகள் (Gloves) தோலினாலான இன்ன பிற பொருள்களை உற்பத்தி செய்கின்றன. பெரம்பூர் தொழிற்சாலை சில நாட்களுக்கு முன்பு ஏற்றுமதி ஆணை (Export Order) ஒன்றைப் பெற்று அதற்கான உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழக மக்களுக்கு மற்றொரு மகிழ்ச்சி தரும் செய்தி, 'மோபெட்' இரு சக்கர மோட்டார் சைக்கிள்களை 'டான்சி' உற்பத்தி செய்ய முனைந்திருப்பது. 'டான்சி மோபெட்' விலை மலிவானது. பராமரிப்புச் செலவு குறைவானது. 'டான்சி மோபெட்' வண்டிகளைத் தருவித்து அளிப்பதற்குப் பதிவு செய்து கொண்ட பொதுமக்கள், தொடர்ந்து தங்கள் நல் ஆதரவை இந்த நிறுவனத்திற்கு அளிப்பார்கள் என நம்புகிறேன்.



முன் கூறிய பிரிவுகளில் அடங்காது இன்னும் பத்துத் தொழிற்சாலைகள் பலவகைப்பட்ட உற்பத்திகளுக்காக இயங்கி வருகின்றன. இவைகளில் எட்டு தொழிற்சாலைகள் கிண்டியிலேயே அமைந்துள்ளன. கண்ணாடி உபகரணங்கள் தொழிற்சாலை, (Scientific Glass Works) கல்லூரிகள், பள்ளிகள், பிறதொழில் நிறுவனங்களுக்குத் தேவையான கண்ணாடி உபகரணங்களை உற்பத்தி செய்கிறது. தகடு அழுத்தப்பட்டறை (Sheet Pressing Works) அழுத்தப்பட்ட உபகரணங்களை பிற தொழிலகங்களுக்குச் செய்து கொடுக்கிறது. இவை தவிர கிண்டியிலுள்ள மற்ற தொழிற்சாலைகள் டான்சி கொல்லுலை (Forging Works), இயந்திர இயல் தொழிற்சாலை (Machine Shop) அழுத்த அச்சு வார்ப்படத் தொழிற்சாலை (Peessure Die Castings) மின் கம்பித் தொழிற்சாலை (Enamelled Wires Factory) மின் கருவிகள் பழுது பார்க்கும் தொழிற்சாலை (Electrical Works), டான்சி அச்சகம் ('Tansi' Press) ஆகியவை ஆகும்.

கோவையில் அமைந்துள்ள டான்சி கொல்லுலை, மின் வெப்பத்தால் எஃகுப் பொருள்களை சரிநிலைப் படுத்தும் சாதனங்களையும் பெற்றிருக்கிறது. திண்டுக்கல்லில் உள்ள பூட்டுத் தொழிற்சாலை ரயில் பெட்டித் தொழிற்சாலைக்குத் தேவையான சிறப்புப் பூட்டுக்களை உற்பத்தி செய்வதுடன், நகராட்சிகளுக்கும் பால் வள நிறுவனத்திற்கும் எஃகு விற்பனைச் சாவடிகளைத் (Steel Bunks) தயார் செய்கிறது.

டான்சியில் தயார் செய்யப்படும் பொருள்கள் ஆறு விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன. இவைகளில் மூன்று, சென்னை ஜார்ஜ் டவுன்,

புத்துணர்வு பெற்ற

புதுமை மிகு நாடு—1975-76

# மின் உற்பத்தியில் புதிய சாதனை

- 79,764 மில்லியன் யூனிட் மின் சக்தி உற்பத்தி ஒரு புதிய சாதனை. நாள்தோறும் 260 மில்லியன் யூனிட் உற்பத்தியாகிறது.

- 25 புதிய மின் திட்டங்கள் மூலம் 1,800 மெ. வா. மின்சக்தி சேர்க்கப்பட்டது. இவற்றில் 20 திட்டங்கள் 1975 செப்டம்பருக்கும் 1976 மார்ச்சுக்கும் இடைப்பட்ட காலத்தில் நிறுவப்பட்டவை.

- நடப்பு ஆண்டில், 20,50,000 ஹெக்டர் நிலம் புதிதாகப் பாசன வசதி பெறும்.

- புதிதாக 6,356 கிராமங்கள் மின்வசதி பெற்றன. இதைச் சேர்ந்த மொத்தம் 1,74,079 கிராமங்கள் மின் வசதி பெற்றுள்ளன. 1,40,000 பம்பு செட்டுகளும் மின் வசதி பெற்றுள்ளன.

davp 76/89




**வள்ளுவர் கோட்டத்தில் உள்ள திருக்குறள் ஆராய்ச்சி நிலையத்தின் எழில்மிகு கதவுகள் 'டான்சி'யால் உருவாக்கப்பட்டவையே!**

அண்ணாசாலை, ராயப்பேட்டை ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. எஞ்சிய மூன்று மதுரை, கோவை, திருச்சி ஆகிய நகரங்களில் அமைந்திருக்கின்றன.

இனிய வாழ்வு மலர்ந்திட பாரதப் பிரதமரால் அறிவிக்கப்பட்டுள்ள இருபது அம்சத் திட்டங்கள் இனிதே செயல்பட 'டான்சி' தன்னாலியன்ற முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.



**'டான்சி'யால் உருவாக்கப்பட்டுள்ள 'மோபெட்' மோட்டார் சைக்கிள்.**

நிறுவனத்தின் செலவுகளில் சிக்கனம் கடைப்பிடித்து, உற்பத்தி செய்யப்படும் பொருள்களில் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலத்தடி நீரைப் பயன்படுத்தும் திட்டத்திற்காக குடிநீர் வாரியத்திக்காக 'டான்சி' இரும்பு வார்ப்படக் குழாய்களைத் தயார் செய்து அளிக்கிறது. முடுக்கி விடப்பட்டுள்ள மின்சாரத் திட்டங்களுக்காக 'டான்சி' மின்வாரியத்திற்குப் பாதை உபகரணங்களையும், இன்ன பிற பொருள்களையும் உற்பத்தி செய்கிறது. தொழிலாளர்கள் அன்றாட நிர்வாகத்தில் பெரும் பங்குகொள்ளும் பொருட்டு இந்நிறுவனத்தின் ஒவ்வொரு தொழிற்கூடத்திலும் கூட்டு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் குழுக்களில் தொழிற்சாலை மட்டத்தில் நிர்வாகத்தில் பொறுப்பிலுள்ளோர் மற்றும் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர். இக்குழுக்களின் முக்கிய அலுவல்கள்:

1. தொழிலாளிகள் சுமுகமாகப் பணியினை மேற்கொள்ள ஏதுவாகும் சூழ்நிலைகளைப் பெருக்குதல்.

2. தொழிற்கூடங்களின் உற்பத்தி அளவு மற்றும் திறன் இவைகளில் முன்னேற்றம் காணுதல்.

3. பொதுவாக நிருவாகத்துடன் தொழிலாளர்கள் தொடர்பு எளிதாக்கப்படுதல் ஆகியவைகளாகும்.

தொழிற்சாலையில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல் இந்நிறுவனத்தின் எல்லாத் தொழிற்கூடங்களிலுமே இக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

மற்றொரு அம்சமான பயிற்சித் திட்டம் இந்நிறுவனத்தில் செவ்வனே நடைபெறுகிறது. எல்லாத் தொழிற்கூடங்களிலும் உள்ள பயிற்சி இடங்களைச் சேர்த்து தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கான இடங்கள் மொத்தம் 298, பொறியியல் பட்டதாரிகள் பயிற்சி இடங்கள் 28, 'டிப்ளோமா' பெற்றவர்களுக்கு பயிற்சி இடங்கள் 30. மற்றும் அலுவலக வேலை சம்பந்தமான பயிற்சி இடங்கள் 13 ஆகும். இவைகளில் தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கான இடங்கள் எல்லாமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மற்ற இடங்கள் சமீபத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவைகளுக்கும் துரிதமாக பயிற்சியாளர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

அவசர நிலைமை அகில இந்தியாவிலும் அறிவிக்கப்பட்ட பிறகு, நாடு பலதுறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளது என்பதனை அனைவரும் நன்கு அறிவோம். அரசினரின் அரிய உதவிகளாலும், அறிவுரைகளாலும் சீரிய முறையில் செயல்பட்டு வரும் 'டான்சி' நிறுவனத்திற்குப் பொதுமக்களும் தொடர்ந்து தங்களது நல் ஆதரவை நல்க வேண்டும் என வேண்டுகின்றேன்.

(நன்றி: சென்னை வானொலி நிலையம்).



# காமாலை

டாக்டர்
எம். எஸ். ராமச்சந்திரன்,
எம்.டி.,
ரீடர், மருந்தியல் துறை,
ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி,
சென்னை.

**சென்னையைப்** போன்ற பெரிய நகரங்களில் அடிக்கடி தோன்றி, பலரையும் பீடிக்கும் தொற்று நோய்களுக்குள் காமாலையும் ( Jaundice ) ஒன்றாகும். பல சமயங்களில் பெருவாரியான அளவில் (Epidemic form) இது மக்களை வாட்டுவதும் உண்டு. இவ்வாறு இந்நோய் தோன்றியவுடன் மக்கள் குடிதண்ணீரைக்கொதிக்க வைத்துக் குடிக்க வேண்டுமென்றும், சுகாதார முறைகளைக் கைக்கொள்ள வேண்டுமென்றும், நகர நோய்த் தடுப்பு அதிகாரிகள் செய்தித்தாள்களில் அறிக்கை விடுவதைப் பலரும் பார்த்திருப்பர்.

காமாலை என்றால் என்ன? அதன் இயல்புகள் யாவை? அது எவ்வாறு நம்மைப் பீடிக்கிறது என்பன போன்ற சில அடிப்படைகளைத் தெரிந்து கொள்வதும், இதனை வராமல் தடுப்பது எவ்வாறு, வந்தபின் அதனை எவ்வாறு போக்கிக் கொள்ள வேண்டும் என்பன பற்றி அறிந்து கொள்வதும் நல்லது.

நம் உடம்பினுள் இரத்தத்தில் கலந்துள்ள பித்தநீர் (Bile) இருக்க வேண்டிய அளவில் மிகுந்துவிடுமானால் காமாலை நோய் என்று அந்த நிலையைக் குறிக்கிறோம்.

### நோயின் அறிகுறிகள்

இந்த நோய் வந்தால் ஓரளவு ஜுரமும், உணவைக் கண்டாலே வெறுத்து ஒதுக்குகின்ற நிலையும், சிகரெட் முதலானவற்றை ஒதுக்குகின்ற நிலையும் ஏற்படும். அடிக்கடி வாந்தி எடுப்பதும், சில சமயங்களில் வயிற்றுப் போக்கும் ஏற்படும். இவையே இந்நோயின் இயல்புகளாகும்.

### பரவும் முறை

இந்த நோய் ஒருவரிடமிருந்து மற்றவர்கட்குப் பரவுவதற்கு மூலகாரணமாக உள்ளது ஒரு வகை 'வைரஸ்' என்று கூறப்படும் உயிர் அணுவாகும். நோய் உடையவர்களுடன் ஒட்டி உறவாடும்போது இது தொற்றுகிறது. தொற்றப்பட்ட உணவு, தண்ணீர், பால், ஷெல்மீன் இவற்றின் மூலமாக இது பரவுகிறது. நோயுற்றவர்களுடைய மலம், சிறுநீர் முதலியவற்றில் உள்ள இந்தநோயின் மூல காரணமான 'வைரஸ்' அங்கு, இங்கு என்னாமல் எங்கும் நிறைந்திருக்கும். ஈயின் மூலம் முன்னர்க்கூறிய உணவு, தண்ணீர் முதலியவற்றில் தொற்றியபிறகு அவற்றை உட்கொள்ளும் அனைவருக்கும் ஒட்டிக் கொள்கிறது.

கொள்ளை நோயாக இந்த நோய் பரவுவதற்கு வாய்ப்பாக உள்ள இடங்கள், பல இடங்களிலிருந்து வரும் பலரும் கூடும் இடங்களாகிய பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள் முதலியவைகளாகும். குறிப்பாக சென்னையைப் போன்ற பெரிய நகரத்தில் அதிக மக்கள் கூட்டமும், இடநெருக்கடியும், சுகாதாரக் குறைவும் உள்ள (திருவல்லிக்கேணி, இராயப்பேட்டை, ஜார்ஜ் டவுன் முதலிய) பகுதிகளில் இது கொள்ளை நோய் போல் பரவுகிறது.

ஈக்களைப் போல, காமாலையின் 'வைரசைப்' பரப்ப உதவுகின்ற மற்றொன்று எலிகளாகும். நம் நாட்டிலும், வீடுகளிலும் எலிகள் இல்லாத இடத்தைப் பார்ப்பது அரிது. சாக்கடை வசதி குறைவான இடங்களிலும் வீடுகளிலும் வாழும் எலிகள் நாம் பயன்படுத்தும் உணவு, நீர் முதலியவற்றில் தம் கழிப்புப் பொருளாகிய பிழுக்கை முதலியவற்றைக் கலப்பதாலும் இந்நோய் பரவுகிறது. ஈ, எலி போன்ற உயிர்ப்பிராணிகளால் இந்நோய் பரவுவது ஒரு புறமிருக்க, நோயுற்றவர்கட்குப் போடும் ஊசிகள், மருந்தேற்றி (Syringes), இரத்த பரிமாறல்கள் (Blood transfusions) இவற்றின் மூலமும் இந்நோயின் வைரஸ் தொற்றிப் பரவுகின்றன. எனவே மனிதர்களுடைய கவனக்குறைவாலும், மருந்தேற்றும் ஊசி முதலியனவற்றைத் தக்கமுறையில் சுத்தம் செய்யாமையினாலும் இந்நோய் பரவுகிறது என்பதனை அறியலாம்.

### காமாலை வகைகள்

மக்களில் பலரும் நம்புவது போல 'காமாலைக்காரனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாகத் தெரிவதில்லை'. பல்வேறு நோய்களுக்குக்கூட காமாலை வெளித் தெரியும் ஓர் அடையாளம் வருவதுண்டு. பொதுவாகக் காமாலை மூன்று வகைப்படும். அதிகம் காணப்படும் வகை 'பாக்டீரியா', வைரஸ், அமீபா முதலியவற்றின் மூலம் வருவது.

இரண்டாவது வகை 'பித்த நீர்ச்சுரப்பி' எனப்படும் 'கால் பிளாடரில்' கற்கள். 'ரவுண்ட் வோர்ம்ஸ்', அரிதாகத் தோன்றும் புற்றுநோய் (கான்ஸர்) முதலியவற்றால் பித்தநீர் வருவது தடைப்படுவதால் காமாலை தோன்றலாம்.

'மலேரியா, பாம்புக்கடி முதலியவற்றின் காரணமாக இரத்தத்தின் பல்வேறு உறுப்புக்கள் முறிந்து போவதாலும், சில சமயங்களில் தவறான இரத்தம் உடம்பில் ஏற்றப்படுவதாலும் மூன்றாவது வகைக் காமாலை ஏற்படலாம்.

இந்நோய் பாதித்த 3 முதல் 7 நாட்களுக்குப் பிறகு காமாலையின் அறிகுறிகள் கண்கள், நகங்கள் ஆகிய பகுதிகளில் காணப்படும். காமாலையின் அறிகுறிகள் கண்ணுக்குத் தெரிவதற்கு முன்பேகூட சிறுநீரைச் சோதிப்பதின் மூலம் இந்நோயால் பாதிக்கப் பெற்றுள்ளதை அறிந்து கொள்ளலாம். இந்நோயின் சிறப்பு என்னவென்றால் ஒரு குறிப்பிட்ட கால அளவு இருந்து மறைந்து விடுவதாகும். இதனை 'Self limiting' என்று கூறுவார்கள். நோய் பாதித்த வேகத்திற்கேற்ப 2 முதல் 6 வாரங்களில் இது தானே குணமாகிவிடும். ஆனால் 'லாகிரிப்' பொருட்களைப் பயன்படுத்தி அவற்றுக்கு அடிமை ஆனவர்கள், ஊட்டமான உணவு உட்கொள்ள முடியாதவர்கள், மது அருந்துபவர்கள், கர்ப்பமான மகளிர் ஆகியவர்களை இந்நோய் பாதித்தால், இதிலிருந்து விடுபட நாட்கள் அதிகமாகும்.

### தடுப்பு முறைகள்

''வந்தபின் காப்பதைவிட வராமல் தடுப்பதே சிறந்தது'' என்ற பழமொழி மற்ற நோய்களைவிட காமாலைக்குத்தான் அதிகம் பொருந்தும். நோயுற்றவர்களின் மலம், சிறுநீர் ஆகியவற்றை அப்புறப்படுத்தித் துப்புரவாக்கியபின் கிருமிக்கொல்லி மருந்துகளாகிய 'டெட்டால்' ஆகியவற்றால் அந்த இடத்தைத் தூய்மைப்படுத்த வேண்டும். உணவுப்பண்டங்களில் நோயைப் பரப்பும் ஈ முதலியன உட்காராமல் மூடிவைத்துப் பாதுகாப்பதுடன், குடிக்கும் தண்ணீரையும் நன்கு காய்ச்சி ஆற வைத்துக் குடிக்க வேண்டும். சாக்கடை கழுவாய் நீர் முதலியன ஒழுக்கல் இல்லாமல் இணைக்கப்பட வேண்டும். நோயுற்றவர்களைக் கவனித்துக் கொள்பவர், கைகளைக் கழுவிச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். நோயுற்றவர்கள் பயன்படுத்தும் 'தர்மா மீட்டர்' உணவு உட்கொள்ளும் தட்டுகள் நீர் முதலிய அருந்தும் தம்ளர் முதலியவற்றைத் தனியாக வைப்பது நலம்.

இந்த நோய் கொள்ளை நோயாகப் பரவியுள்ள இடங்களில் பள்ளிக்கூடம் செல்லும் சிறுவர் சிறுமிகளுக்கும் தடுப்பு ஊசி போடலாம். இது அதிக விலையுள்ளதாயினும் ஆறுமாத காலத்திற்கு நோய் வராமல் தடுக்கும்.

இந்த நோய் தானே ஓரளவு வளர்ந்து இறுதியில் மறைந்து போகும். ஆகையால் நோய் இரண்டு முதல் நான்கு வாரத்திற்குள் நீங்கிவிடும். நோயுற்ற நேரத்தில் முழு ஓய்வு கொள்ள வேண்டும். லாகிரிப் பழக்கம், மதுபானப் பழக்கம் உடையவர்களுக்கு இன்னும் கொஞ்சம் அதிக நாட்கள் இது நீடிக்கும். இந்நோயுற்றவர்கள் கொழுப்புச் சத்துள்ள உணவை உட்கொள்ளக் கூடாது என்பதெல்லாம் பாட்டி கதையாகும். நல்ல புரதச் சத்துள்ள உணவை (பால், தயிர், பருப்பு), 'குளுகோஸ்', வைட்டமின் முதலியவற்றுடன் கொள்ள வேண்டும். உணவு முறையில் எவ்வித மாற்றமும் தேவையில்லை என்பது இன்றைய விஞ்ஞான மருத்துவம் கண்டுள்ள உண்மையாகும்.

## தமிழ்நாட்டின் குழந்தைகளுக்கு இரண்டு இலட்சம் ரூபாய்!

*தமிழ்நாட்டில், ஊட்டச் சத்து இன்மை, வைட்டமின் 'ஏ' குறைவு ஆகியவற்றின் காரணமாகப் பார்வையை இழக்கும் அபாயத்தில் இருப்பதாகக் கூறப்படும் குழந்தைகளுக்கு உடனடியாக உதவி புரிவதற்காக, பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி அவர்கள், பிரதம மந்திரியின் நிவாரண நிதியிலிருந்து 2 இலட்சம் ரூபாயை அனுப்பியுள்ளார்.*



மிகக் கொடுமையான மஞ்சள் காமாலை நோய் வந்தால் சில பேர் நினைவு இழந்துபோகக்கூடும். அம்மாதிரிச் சமயங்களில் இரத்தம் மாற்றும் சிகிச்சை அளிக்க வேண்டும்.

### இரத்தம் மாற்றும் சிகிச்சை முறை

இரத்தம் மாற்றுதல் என்பதாவது நோயாளியின் கெட்ட இரத்தத்தை அப்புறப்படுத்தி விட்டு அவர் 'குரூப்'புக்குத் தகுந்த மாதிரி புது ரத்தத்தை உடம்பில் 6-10 பாட்டில் செலுத்துவதாகும். சில சமயங்களில் உயிரைக் காப்பாற்றும் முறையாக, இது இருந்து வருகிறது.

கை வைத்திய முறை என்று பல்வேறு வைத்தியங்கள் செய்யப்படுகின்றன. அவை உடலுக்குத் தீமை விளைவிக்கும். ஆகையால் அவற்றை உட்கொள்ளக் கூடாது. இவற்றில் பல வைத்தியங்கள் 'கல்லீரலுக்கு' (Liver) தீமை உண்டாக்கும். 'வைரஸ்' காரணமாக வரும் காமாலை அஞ்சத் தகுந்த நோயன்று. சத்துள்ள உணவும், ஓய்வும் இருந்தால் இதிலிருந்து நலம் பெற்றுவிடலாம்.

(நன்றி: சென்னை வானொலி நிலையம்)

# குழந்தைக்குத் தேவை சத்தான உணவு
# பயிருக்குத் தேவை விஜய்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் சத்துணவைப்போலவே பயிர்களும் நன்கு வளர்ந்து முழுப் பலனையும் தர தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அவசியம்.

ஆனால் நெற்பயிருக்கு தழைச்சத்தைத்தரும் யூரியாவை மட்டும் இட்டால போதுமானது எனக் கருதக்கூடும். அவ்வாறு யூரியாமட்டும் இட்டால் பயிர்கள் பூச்சிகளால தாக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மைகெட்டு விளைச்சலும் குறையும்.

தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களை இடுவதுதான் லாபகரமானது என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன: —

நெல் (ஏக்கருக்கு)

| உரம் | சாகுபடி செலவு ரூ. | விளைச்சல் (மூட்டை 75 கிலோ) | வருவாய் (1 மூட்டை 60 ரூ. விகிதம்) |
|---|---|---|---|
| 40 கிலோ தழைச்சத்து மட்டும் | 1040 | 18 | 1080 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து | 1180 | 23 | 1380 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல்சத்து | 1215 | 30 | 1800 |

இவ்வாறு மூன்று சத்துக்களையும் இடும் போது கூடுதல் செலவு ரூ. 175க்கு அதிக வருவாய் ரூ. 720 கிடைக்கிறது.

அதிக வருவாய் தரும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை சமச்சீர் அளவில் கொண்டது விஜய் 17-17-17. இத்துடன் விஜய் யூரியாவையும்.உங்கள் நெற்பயிருக்கு உபயோகித்து அதிகப்பயன் பெறுங்கள்.

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், திருச்சி 620 017






MFL-1162

# மானாவாரி மணிலா மகசூல் பெருக்கிடுவோம்!



**க**டந்த சில நாட்களாகத் தமிழ்நாட்டில் கடலை எண்ணெய் விலை ஏறிவந்துள்ளது! கடந்த கோடைப் பருவத்தில் இறைவை மணிலா உற்பத்தி குறைந்து விட்டதனால்தான், கடலை எண்ணெய் விலை ஏறிவிட்டது என்று சில வியாபாரிகள் கூறிவருகிறார்கள். இக்கூற்று, முற்றிலும் தவறானதாகும்.

தமிழ்நாட்டில் 1976-ஆம் ஆண்டின் கோடைப் பருவத்தில் 2.69 இலட்சம் எக்டேர் பரப்பில் மணிலா சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்பது புள்ளி விவரத் துறையின் முன்மதிப்பீட்டிலிருந்து தெரிய வருகிறது. ஆனால் 1975-ஆம் ஆண்டின் கோடைப் பருவத்தில் தமிழ்நாட்டில் 2.36 இலட்சம் எக்டேர் பரப்பில் மட்டுமே மணிலா சாகுபடி செய்யப்பட்டிருந்தது. எனவே, கடந்த கோடைப்பருவத்தில் 16.1 சத அளவுக்கு மணிலா சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது என்பது தெளிவாகிறது.

மேலும், மணிலாவில் நடத்தப்பட்ட பயிர் மதிப்பீடு ஆய்வு (Crop estimation survey) மூலம், 1976-ஆம் ஆண்டின் கோடைப் பருவத்தில் தமிழ்நாட்டில் 4.15 இலட்சம் டன்மணிலா உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. 1975-ஆம் ஆண்டில் அதே பருவத்தில் 2.96 இலட்சம் டன் மணிலா மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளதால், 1976-ஆம் ஆண்டின் கோடைப் பருவத்தில் மணிலா உற்பத்தி 40 சத அளவுக்கு உயர்ந்துள்ளதுஎன்பதும் தெளிவாகிறது. எனவே கடந்த கோடைப் பருவத்தில் மணிலா உற்பத்தி குறைந்து விட்டது என்று கூறுவது முற்றிலும் தவறானதாகும்.

தற்பொழுது நிலவும் கடலை எண்ணெய்யின் விலை ஏற்றத்தை தடுத்திட, தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஆயினும், நாட்டு மக்கள் அனைவருக்கும் அன்றாடம் இன்றியமையாது தேவைப்படும் கடலை எண்ணெய்யின் விலையைக் குறைக்க, மணிலா மற்றும் கடலை எண்ணெய் வியாபாரிகள் பெருந்தன்மையுடன் முன்வர வேண்டியது நெருக்கடி நிலை நிலவுகின்ற இந்நேரத்தில் அவர்களுடைய கடமையாகும்.

அதுபோலவே, கடலை எண்ணெய் விலையைக் குறைத்திட முயலும் தமிழ்நாடு அரசுக்கு, நல் ஒத்துழைப்பை நல்கும் வகையில் இருப்பில் உள்ள மணிலாவை விற்பனைக்குக் கொடுத்து உதவுவதுடன், இந்த மானாவாரி பருவத்தில் மணிலா உற்பத்தியைப் பெருக்கித் தருவது தமிழக உழவர் பெருமக்களுடைய தலையாய கடமையாகும். ஏனெனில் நாட்டு மக்களின் நல்வாழ்வே உழவர்களின் கைகளில்தான் உள்ளது. இதனால்தான் திருவள்ளுவர்,

**''சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை''**

என்று கூறியுள்ளார்.

ஊட்டச்சத்துணவு ஆராய்ச்சியின்படி வயதுவந்த ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 28.3 கிராம் (1 அவுன்சு) தாவர எண்ணெய் (Vegetable Oil )தேவைப்படுகிறது. இந்த அளவுக்கு தாவர எண்ணெய் கிடைக்க வேண்டுமானால், நாம் மணிலா உற்பத்தியை உடனடியாகப் பெருக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

**இக்கடமையை-நெருக்கடி நிலை நிலவுகின்ற இந்நேரத்திலே** - மனமுவந்து செய்வது தமிழக உழவர் பெருமக்களுடைய தலையாய கடமையாகும். இக்கடமையைச் சரியாகச் செய்யாவிட்டால், கடலை எண்ணெய் உற்பத்திக்குக் காரணமான மணிலாவை உற்பத்தி செய்கின்ற உழவர்களுக்கே கடலை எண்ணெய் கிடைப்பது அரிதாகிவிடும் அபாயநிலை ஏற்படலாம்! எனவே, மானாவாரி மணிலா உற்பத்தியைப் பெருக்குவது, உழவர்கள் வீட்டிற்கும் நாட்டிற்கும் செய்யும் நற்பணியாகும்!

குறிப்பாக மானாவாரி, மணிலாவைப் பொறுத்தவரையில் எதிர்பார்க்கும் அளவுக்கு உற்பத்தி பெருகவில்லை. இதற்கு முக்கிய காரணம் கடந்த சில ஆண்டுகளாகப் பருவ மழை பொய்த்துவிடுவதேயாகும். இதன் காரணமாகவே, பெரும்பாலான உழவர் பெருமக்கள் மானாவாரி மணிலாவில் ஏக்கருக்கு 10 மூட்டைகள் (ஒவ்வொன்றும் 40 கிலோ கொண்டது) கூட விளைவிக்க முடியவில்லை. ஆனால் மானாவாரி மணிலா சாகுபடியின் நுட்பங்களை அறிந்து, சாகுபடி செய்தால் வறட்சி வாட்டினாலும், மானாவாரிமணிலா உற்பத்தியைப் பெருக்க முடியும்.

வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை (Package of practices ) மேற்கொண்டு மணிலா சாகுபடி செய்தால் மானாவாரி மணிலாவிலும், ஏக்கருக்கு 20 மூட்டை (ஒவ்வொன்றும் 40 கிலோ கொண்டது) அளவுக்குக் குறையாமல் விளைவிக்க முடியும் என்பது பல்வேறு இடங்களில் பல உழவர் பெருமக்களின் வயல்களில் நடைபெற்ற பரிசோதனைகளிலிருந்து தெளிவாகியுள்ளது. ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு மானாவாரி மணிலா சாகுபடி செய்தால், சாதாரண முறையில் சாகுபடி செய்யப்படும் மணிலாவிலிருந்து கிடைக்கும் மகசூலைவிட ஏக்கருக்கு 10 மூட்டை மணிலாவை அதிகமாக உற்பத்தி செய்ய முடியும். அதாவது தற்போதுள்ள மானாவாரி மணிலா உற்பத்தியை குறைந்தது 2 மடங்காகப் பெருக்கிடலாம்.

இந்த அடிப்படையில் கணக்கிட்டால் தமிழ் நாட்டில் சராசரியாகச் சாகுபடி செய்யப்படும் 21 இலட்சம் ஏக்கர் மானுவாரி மணிலாவிலிருந்தும் ஒருமித்த் செய்நேர்த்தி முறைகளை மேற்கொள்வதன் மூலம் 2 கோடியே 10 இலட்சம் மூட்டை அல்லது 8 இலட்சத்து 40 ஆயிரம் டன் மணிலா அதிகமாக விளைவிக்க முடியும்!

இவ்வாறு மானுவாரி மணிலா உற்பத்தி பெருகினால் உழவர் பெருமக்களின் வருவாய் பெருகுவதுடன், கடலை பிண்ணாக்கு, கடலை எண்ணெய் விலையும் கணிசமாகக் குறையும். மேலும், அதிகமாக உற்பத்தியாகும் கடலை எண்ணெய்யைக் கொண்டு உள்நாட்டுத் தேவையை ஈடு செய்வதுடன், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியையும் ஈட்டலாம்! எனவே, மானுவாரி மணிலாச் சாகுபடி செய்யவிருக்கும் உழவர் பெருமக்கள், ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு, மானுவாரி மணிலா பயிரிட்டு வீட்டிற்கும், நாட்டிற்கும் நற்பணி செய்ய வேண்டும் என்பதற்காகத் 'தமிழரசு' இதழின் சார்பாக பின்கண்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை உழவர் பெருமக்களுக்கு அன்புடன் படைத்துள்ளதுடன் அவைகளைப் படித்துப் பயன்படுத்தி பயன் பெறுமாறு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம்.

## ஒருமித்த செய்நேர்த்தி முறைகள்

**விதைக்கும் பருவம்**: மானுவாரி மணிலா விதைக்கும் பருவம் பருவ மழையைப் பொறுத்தே அமைகிறது. பொதுவாகப் பருவமழை பெய்யும் காலத்திற்கு ஏற்ப ஜூன் முதல் ஆகஸ்ட் வரையான காலத்தில் மானுவாரி மணிலா விதைக்கலாம். ஆயினும் ஆடி (ஜூலை-ஆகஸ்ட்) மாத விதைப்பு நல்ல மகசூலைத் தரும்.

### ஏற்ற இரகங்கள்

மானுவாரி மணிலா பயிரிட விரும்புகின்றவர்கள் தங்கள் தேவைக்கும், விருப்பத்திற்கும் பகுதிக்கும் ஏற்ப கொடி மணிலா இரகங்களையோ அல்லது கொத்து (குத்து) மணிலா இரகங்களையோ பயிரிடலாம். கொடி மணிலா இரகங்கள் அதிக வயதுடையவையாதலின், அவைகளை அதிக நாட்கள் பருவமழை பெய்யும் பகுதிகளில் மட்டுமே பயிரிடுவது சிறந்தது. கொத்து மணிலா இரகங்கள் குறுகிய கால வயதுடையவையாதலின், அவைகளை குறிப்பாகக் குறுகிய காலத்திற்கு மட்டுமே பருவ மழை பெய்யும் பகுதிகளிலும், பொதுவாக எல்லா இடங்களிலும் பயிரிடலாம். உங்களுக்கு ஏற்ற இரகங்களைப் பின்கண்ட அட்டவணையில் இருந்து தேர்தெடுத்துக் கொள்ளுங்கள்.

| மணிலா வகையும் இரகத்தின் பெயரும் | வயது நாட்கள் |
|---|---|
| கொடி வகை (Spreading Variety) | |
| 1. டி.எம்.வி. 1 | 135 |
| 2. டி.எம்.வி. 3 | 135 |
| கொத்து வகை (Bunch Variety) | |
| 1. டி.எம்.வி. 2 | 105 |
| 2. டி.எம்.வி. 7 | 105 |
| 3. பி.ஓ.எல் 1 | 105 |
| 4. பி.ஓ.எல். 2 | 105 |
| அதிகம் படராதது (Semi-spreading) | |
| 1. டி.எம்.வி. 10 | 125 |

மேற்கூறிய இரகங்களில் 'டி.எம்.வி.7', 'பி.ஓ.எல். 2' ஆகியவை அதிக மகசூல் தரக்கூடியவைகளாகும்.

### ஏற்ற மண்

மணல் கலந்த வண்டல் மண், செம்மண் அல்லது கருவண்டல் மண் போன்ற மிருதுவான மண்ணே மானுவாரி மணிலாச் சாகுபடிக்குச் சிறந்தது.

### நிலம் தயாரித்தல்

மானுவாரி மணிலா மகசூலைப் பெருக்குவதற்கு நிலத்தை நன்கு உழுது பண்படுத்த வேண்டும். மணிலாச் செடிகள் நன்றாக வேர்விட்டு வளரவும், விழுதுகள் தடையின்றி மண்ணிற்குள் சென்று நிலக்கடலைகள் உருவாகவும், 6 அங்குல ஆழம் வரை நிலத்தை புழுதியாகும்படி உழவேண்டும். நிலம் நன்கு புழுதியாக ஆக இரும்புக் கலப்பையால் 4 முதல் 6 தடவை நன்கு உழவேண்டும். ஆழமாய் உழுவதைத் தவிர்க்க வேண்டும்.

### அடியுரமிடுதல்

விதைப்பதற்கு 15 நாட்களுக்கு முன்பு, கடைசி உழவில் ஏக்கருக்கு பின்கண்ட அளவு உரங்களை அடியுரமாக இட வேண்டும்.

தொழு எரு:—

பத்து வண்டி (5 டன்) இடவேண்டும். தொழு எரு கிடைக்கா விட்டால் 10 வண்டி (5 டன்) கலவை எரு (கம்போஸ்ட்) இடலாம்.

இரசாயன உரம்:—

தழைச்சத்து—4 கிலோ.
மணிச்சத்து—8 கிலோ.
சாம்பல் சத்து—12 கிலோ.

மேற்கூறிய அளவு சத்துக்கள் அளிக்க ஏக்கருக்குக் கீழ்க்கண்ட அளவு இரசாயன உரங்களை இட வேண்டும்.

அமோனியம் சல்பேட்—20 கிலோ.
சூப்பர் பாஸ்பேட்—50 கிலோ.
மியூரியேட் ஆப் பொட்டாஷ்-20 கிலோ.



டி.எம்.வி. 2

அமோனியம் சல்பேட் 20 கிலோ இடுவதற்குப் பதிலாக 9 கிலோ யூரியா இடலாம்.

மேற்கூறியவாறு உரமிடத் தனித்தனி இரசாயன உரங்கள் கிடைக்கா விட்டால், 7-ஆம் எண் கலப்பு உரத்தில் (4:8:12) ஏக்கருக்கு 100 கிலோ அடியுரமாக இடலாம்.

அல்லது

23 கிலோ 17:17:17 கூட்டு உரம், 25 கிலோ சூப்பர் பாஸ்பேட், 13 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை இடலாம்.

அல்லது

18 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட்டையும், 2 கிலோ யூரியாவையும், 20 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் சேர்த்து அடியுரமாக இடலாம். இதுவே மிகவும் குறைந்த செலவில் சிக்கனமாக உரமிடும் முறையாகும்!

இவ்வாறு இரசாயன உரமிட்ட 15 நாட்களுக்குப் பிறகு, மழை பெய்து விதைப்பதற்கு முன்னர் ஏக்கருக்கு 'போராக்ஸ்' எனப்படும் வெண்காரம் 4 கிலோ இட்டு, உழுதுவிட வேண்டும்.

'போராக்ஸ்' நிலக்கடலைச் செடியின் வளர்ச்சிக்கும், தரமான நிலக்கடலை உருவாவதற்கும், பருப்பு நன்கு முதிர்வதற்கும் உதவுகிறது. 'போராக்ஸ்' போடுவதால் 15 முதல் 20 சதம் வரை மணிலாவின் மகசூல் அதிகரிக்கும். மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 'போராக்ஸ்' இட்டால் போதுமானது!

ஆண்டுதோறும் தொடர்ந்து மணிலா சாகுபடி செய்வதால், மண்ணிலுள்ள சுண்ணாம்புச் சத்து குறைந்து விடக்கூடும்! இதனால் மகசூல் குறைந்துவிடும்! இக்குறையைத் தவிர்க்க 'ஜிப்சம்' இடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. விதைத்த 40-ஆம் நாள் இரண்டாம் முறை களையெடுக்கும் பொழுது, ஏக்கருக்கு 80 கிலோ 'ஜிப்சம்' தூவி, பிறகு களை எடுக்கவும். இதனால் மணிலா மகசூல் பெருகும்.

### நுண்ணுயிர் கலத்தல்

மணிலாச் செடியின் வேரில் முடிச்சுகள் (Root Nodules) காணப்படும்! அம் முடிச்சுகளில் 'ரைசோபியம்' என்னும் நுண்ணுயிர்கள் உள்ளன. அவைகளின் உதவியால் வேர் முடிச்சுக்கள் காற்றிலுள்ள தழைச்சத்தை இழுத்துக்கொண்டு செடிகளுக்குப் பயன்படும்படி செய்கின்றன. எனவே, மணிலாச் செடிகளில் அதிக அளவு வேர் முடிச்சு உண்டாக ஏக்கருக்கு 3 குடுவை நுண்ணுயிர்களை 10 கூடை மணல் அல்லது மரத்தூளுடன் கலந்து விதைப்பதற்கு முன்பு நிலத்தில் தூவுதல் சிறந்தது.



### விதையளவு

கொடி மணிலாவை விட கொத்துமணிலாவை நெருக்கமாக விதைக்க வேண்டுமாதலின், கொத்து மணிலாவிற்கு அதிக அளவு விதைப்பருப்புகளை (உடையாதது) விதைக்க வேண்டும். வகைக்கும், இரகத்திற்கும் ஏற்ப, பின்கண்ட அளவிற்கு விதைக்க வேண்டும்.

| இரகம் | ஏக்கருக்கு தேவைப்படும் விதை அளவு (கிலோவில்) |
|---|---|
| டி.எம்.வி. 1 | 45 |
| டி.எம்.வி. 2 | 45 |
| டி.எம்.வி. 3 | 50 |
| டி.எம்.வி. 7 | 55 |
| டி.எம்.வி. 10 | 45 |
| பி.ஓ.எல். 1 | 60 |
| பி.ஓ.எல். 2 | 48 |

### விதையுடன் மருந்து கலத்தல்

விதைப்பதற்கு முன்பு விதைப் பருப்புக்களுடன் 'கேப்டான்' அல்லது 'டீ.எம்.டீ.டி.' என்ற மருந்தை 1 கிலோ விதைக்கு 2.5 கிராம் மருந்து வீதம் கலந்து 6 மணி நேரம் வைத்திருந்து பிறகு விதைக்கவும்.

### இடைவெளி

கொடி மணிலா இரகங்களுக்கு வரிசைக்கு வரிசை 9 அங்குலமும், செடிக்குச் செடி 9 அங்குலமும் இடைவெளி இருக்குமாறு விதைக்க வேண்டும்.

கொத்து மணிலா இரகங்களுக்கு வரிசைக்கு வரிசை 6 அங்குலமும் செடிக்குச் செடி 6 அங்குலமும் இடைவெளி இருக்குமாறு விதைக்க வேண்டும்.

### விதைப்பு

ஏரின் பின்னல் விதைப்பருப்புகளை மேற்கூறியவாறு இடைவெளியிலும், 1.5 முதல் 2 அங்குல ஆழத்திலும் போட வேண்டும். மேற்கூறிய இடைவெளியில் விதைக்காமல், பெரும் இடைவெளி விட்டு விதைத்தால் பயிரின் அடர்த்திக் குறைந்து மகசூல் குறைந்துவிடும்! ஆகவே, மானாவாரி மணிலாவில் நிறைந்த மகசூல் பெறக் குறிப்பிட்ட இடைவெளியில் விதைக்க வேண்டும். ஏரின் பின்னல் விதைகளைப் போட்ட பிறகு, விதைகள் மண்ணில் மறைக்கப்படுவதற்குப் பச்சைக் கிளைகளை வெட்டிப் படலமாகக் கட்டிக் கொண்டு அல்லது மூங்கில் படலின் மேல் கற்களை வைத்துப் பளு ஏற்படுத்திக் கொண்டு நிலத்தின் மேல் இழுத்துச் செல்ல வேண்டும். இல்லையெல் விதைப் பருப்புகள் காக்கை, கருடன், குருவி போன்ற பறவைகளுக்கு இரையாகிவிடும்!

### கலப்புப் பயிர்

மணிலா விதைகளை விதைக்கும்பொழுது சாலுக்குச்சால் 6 முதல் 8 அடி வரை இடைவெளி விட்டு, ஏக்கருக்கு 2 கிலோ 'எஸ்.ஏ. 1 துவரை' அல்லது 1 கிலோ 'டி.எம்.வி. 2 ஆமணக்கு, அல்லது 1 கிலோ 'கே. 1 சூரியகாந்தி' விதைகளை விதைப்பதால் கூடுதல் இலாபம் பெறலாம்!



களை எடுத்தலும் 'ஜிப்சம்' இடுதலும்.

மானாவாரி மணிலாவில் நல்ல மகசூல் காண களை எடுத்தல் மிகவும் இன்றியமையாதது! விதைத்த 20-ஆம் நாள் முதல் முறையும், விதைத்த 40-ஆம் நாள் இரண்டாவது முறையும், களைக் கொட்டால் கொத்தி விட்டுக் களைகளை அகற்ற வேண்டும். இரண்டாவது களை எடுப்பிற்குப் பிறகு களைக்கொட்டால் களை எடுக்கக் கூடாது! அப்படிச் செய்தால், விழுதுகளைப் பாதிக்கும். எனவே, அதன் பின் தோன்றும் பெரிய களைகளைக் கைகளால் எடுத்து விட வேண்டும்.

கொத்து மணிலாவிற்கு இரண்டாவது களை எடுக்கும்போது மண் அணைக்க வேண்டும்.

நன்கு காய்ந்த நிலத்திலும், அதிக ஈரம் உள்ள நிலத்திலும் களை எடுக்கக் கூடாது!

## பயிர்ப் பாதுகாப்பு

மானாவாரி மணிலாவில் முக்கியமாக 'சிகப்புக் கம்பளிப் பூச்சி', 'சுருள் பூச்சி', 'அசுவணி' ஆகிய பூச்சிகளும், 'டிக்கா' இலைப்புள்ளி நோயும் தோன்றக்கூடும்.

### 1. சிவப்புக் கம்பளிப் பூச்சி

மானாவாரி மணிலாவை அதிகம் தாக்குவது சிவப்புக் கம்பளிப் பூச்சியே! மழை பெய்த பிறகு இப் புழுக்கள் தோன்றக் கூடும்!

கோவை மாவட்டத்தில் வைகாசி முதல் ஆவணி வரை தோன்றக்கூடும்! மற்ற மாவட்டங்களில் ஆனி முதல் ஐப்பசி வரை தோன்றக்கூடும்! இதன் தாய்ப் பூச்சிகள் (வண்ணாத்திப் பூச்சிகள்) மழை பெய்த 3-ம் நாள் இரவு, கூட்டுப் புழுவிலிருந்து தோன்றும். அப்பூச்சிகளை இரவில் 'பெட்ரோமாக்ஸ்' விளக்கு வைத்துப் பிடித்து அழித்து விடலாம். இப்பூச்சிகளை அழிக்காவிடில், அவை முட்டையிட்டு பிறகு அம் முட்டைகளில் இருந்து சிவப்புக் கம்பளிப் பூச்சிகள் தோன்றி மணிலாவை அழிக்கும். சிவப்புக் கம்பளிப் புழுக்கள் அழிக்க ஏக்கருக்கு பின்கண்ட அளவில் மருந்து தெளிக்கலாம்.

1. 'என்ட்ரின்' 0.45 சதவீதம் (400 மில்லி லிட்டர் மருந்து, 200 லிட்டர் தண்ணீர்) அல்லது

2. 'பாரத்தியான்' 0.05 சதவீதம் (200 மில்லி லிட்டர் மருந்து 200 லிட்டர் தண்ணீர்) அல்லது

3. 'நுவான்' (டி.டி.வி.பி.) 0.1. சதவீதம் (200 மில்லி லிட்டர் மருந்து, 200 லிட்டர் தண்ணீர்) அல்லது,

4. 'ஹீலியோடாக்ஸ்'—1500 மில்லி லிட்டர் 200 லிட்டர் தண்ணீர்.

5. 'பி.எச்.சி.' 10 சதவீதம் தூள்—ஏக்கருக்கு 10 கிலோ இளம் புழுக்களை மட்டுமே அழிக்க ஏற்றது.

6. 'தயோடான்'—500 மில்லி லிட்டர், 200 லிட்டர் தண்ணீர்—முதிர்ந்த புழுக்களை அழிக்க வல்லது.

### 2 சுருள் பூச்சி

இவை வறட்சியான காலங்களில் தோன்றும். இளம் இலைகளைத் தின்பதுடன், இலைகளை மடக்கிச் சேதம் விளைவிக்கின்றன. இவைகளை அழிக்கப் பின் கண்டவாறு மருந்து தெளிக்க வேண்டும்.

1. 'பாரத்தியான்' 0.05 சதவீதம் ஏக்கருக்கு (200 மில்லி லிட்டர் மருந்து, 200 லிட்டர் தண்ணீர்) அல்லது

2. 'பெனிட்ரோதியான்' 0.05 சதவீதம் (200 மி.லி. மருந்து 200 லிட்டர் தண்ணீர்) அல்லது

3. 'டேக்ஸோபின்'+'டி.டி.டீ'+'டைமேதோட்' (1500 மில்லி லிட்டர் மருந்து 200 லிட்டர் தண்ணீர்) அல்லது

4. 'பெனிட்ரோதியான்' 2சதவீதம் தூள்—ஏக்கருக்கு 10 கிலோ.

5. 'டி.டி.டீ.' 5 சதத்தூள்—ஏக்கருக்கு 10 கிலோ.

### 3. அசுவணி

இவை நுண்ணிய கறுப்புப் பூச்சிகள்: இலைகளில் காணப்படும்; இலைகளின் சாற்றை உறிஞ்சி செடிகளை வாடச் செய்யும். இவைகளைப் பின் கண்டவாறு அழிக்கலாம்.

1. 'கார்போஃபினோதியான்' (டிரைதியான்) 0.06 சதவீதம் (600 மி.லி. 200 லிட்டர் தண்ணீர்) அல்லது,

2. 'மீதெயல் டெமிடாடன்' (மொடாசிஸ்டாக்ஸ்) 25 சதவீதம் (200 மி.லி. மருந்து 200 லிட்டர் தண்ணீர்) அல்லது,

3. 'தயோமிடான்' (எகடின்) 0.25 சதவிகிதம் (200 மி.லி. மருந்து 200 லிட்டர் தண்ணீர்) அல்லது,

4. 'டைமதோட்' (ரோகார்) 0.03 சதவிகிதம் (200 மி.லி. மருந்து 200 லிட்டர் தண்ணீர்) அல்லது.

5. 'ஃபாஸ் ஃபாமிடான்' 0.5 சதவீதம் (டைமக்ரான்) (150 மி.லி. மருந்து, 300 லிட்டர் தண்ணீர்) அல்லது,

6. 'ஃபார்மோதியான்' (ஏன்தியோ) 0.05 சதவிகிதம் (400 மில்லி மருந்து 200 லிட்டர் தண்ணீர்) அல்லது,

7. 'வாமிடோதியான்' 0.06 சதவிகிதம் (200 மி.லி. (மருந்து 200 லிட்டர் தண்ணீர்) அல்லது,

8. 'பாஸேலோன்' 0.06 சதவிகிதம் (200 மி.லி. மருந்து 200 லிட்டர் தண்ணீர்) தெளிக்க வேண்டும்.

**மருந்து தெளித்தல்:** கையால் இயக்கும் மருந்து தெளிக்கும் கருவி (Hand operated Sprayer) உபயோகிக்கும்போது மேலே கூறியுள்ள அளவு நீர் தேவைப்படுகிறது. விசைக் கருவி (Power Sprayer) உபயோகிக்கும்போது முன்னால் கூறிய நீரின் அளவுகளை 40 சதவிகிதமாகக் குறைத்துக் கொள்ளவும். ஆனால் மருந்தின் அளவைக் குறைக்கக்கூடாது!

''டிக்கா'' என்னும் இலைப்புள்ளி நோய் காணப்படும் இடங்களில் 1 கிலோ தாமிரக் கலவை மருந்தை ஏனைய மருந்துடன் கலந்து விதைத்த 20-25 நாட்களில் முதல் முறையும், விதைத்த 40-45 நாட்களில் மறுமுறையும் தெளிக்கவும்.

காலையில் 9 மணிக்குள்ளாகவும், மாலையில் 4 மணிக்கு மேற்பட்டும் மருந்து தெளித்தல் சிறந்தது.

மண்ணில் கரையான், வெள்ளைப்புழு, ஏனைய பூச்சிப்புழுக்கள் காணப்பட்டால் 'அல்டிரின்', 'டைஅல்டிரின்', 'ஹெப்டோக்ளோர்' போன்ற மருந்துகளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் உழவில் போடலாம்.

### அறுவடையும் மகசூலும்

கடலைத் தோலின் உள்பாகம் கறுப்பு நிறமாகவும், பருப்பின் மேலுள்ள தோல் சிவப்பு நிறமாகவும் மாறிய பிறகு மணிலாவை அறுவடை செய்வதே சிறந்தது.

மேற்கூறிய முறைகளில் சாகுபடி செய்தால், ஏக்கருக்குப் பின்கண்ட அளவு மகசூல் கிடைக்கும்.

| இரகம் | மகசூல் (மூட்டைகள்) |
|---|---|
| டி.எம்.வி. 1 | 15—20 |
| டி.எம்.வி. 3 | 18—22 |
| டி.எம்.வி. 10 | 20—25 |
| டி.எம்.வி. 2 | 15—20 |
| டி.எம்.வி. 7 | 20—25 |
| பி.ஓ.எல். 1 | 18—22 |
| பி.ஓ.எல். 2 | 20—25 |

(1 மூட்டை—40 கிலோ)

எனவே, மானாவாரி மணிலாச் சாகுபடி செய்யவிருக்கும் தமிழக உழவர் பெருமக்கள் அனைவரையும், மேற்கண்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு மகசூலைப் பெருக்கிப் பெரும் இலாபம் பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

—R. மாணிக்கம்

## உழவர் பெருமக்களுக்கு மின்சார வாரியம் அளிக்கும் இரு சலுகைகள்!

தமிழ்நாட்டில் பரவலாக வறட்சி நிலவுவதாலும், பருவமழை பொய்த்துள்ளதாலும், தமிழ்நாடு மின்சார வாரியம் உழவர்களுக்கு இரு சிறப்புச் சலுகைகளை அளித்துள்ளது.

நடப்பு மின்சார உபயோகக் கட்டணங்களில் ஒரு பகுதியாக, ஒரு மாதத்திற்கு ஒரு குதிரைச் சக்திக்கு ரூ. 2.50 நிர்ணயக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஒரு மாதத்திற்கு 50 யூனிட்டும், அதற்குக் குறைவாகவும் வேளாண்மைப் பணிகளுக்காக மின்சாரத்தைப் பயன்படுத்தும் உழவர்களைப் பொறுத்தவரையில், இந்த நிர்ணயக் கட்டணம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பணிகளுக்காக மின்சாரத்தைப் பயன்படுத்தும் உழவர்கள் மூன்று மாத மின்சார உபயோக அளவின் அடிப்படையில் பிணை வைப்புத் தொகையை (Additional Security Deposit) செலுத்த வேண்டும். இதுவும் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள வறட்சி நிலைமை மாறிய பிறகு, ஒத்தி வைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டணங்களை வசூலிப்பது பற்றி பரிசீலிக்கப்படும் என மின்சார வாரியம் அறிவித்துள்ளது.

# "எடப்பாடியில் வேளாண்மைச் செம்மல்கள்"



திரு. பாப்பி ரெட்டியார்



திரு. ஜே. சண்முகம்,

சேலம் மாவட்டத்திலுள்ள எடப்பாடி ஒன்றியத்தைச் சார்ந்த பூலம்பட்டி கிராம வேளாண் வீரர் திரு. ஜே. சண்முகம், 1973—'74 ஆண்டுக்கான மாநில நெல் விளைச்சல் பரிசினைப் பெற்றவர். ஒரு ஏக்கருக்கு 4,148 கிலோ கிராம் 'ஐ. ஆர். 8' நெல்லினை விளைவித்துக் காட்டிய இவரை **''வேளாண்மைச் செம்மல்''** என்ற பட்டம் நாடி வந்ததில் வியப்பில்லை!

இதே ஊரைச் சார்ந்த திரு. பாப்பி ரெட்டியார் வேளாண்மைத் துறையில் மற்றொரு செயல் வீரர் ஆவார். இவருக்கும் **''வேளாண்மைச் செம்மல்''** என்ற பட்டம் அளிக்கப்பட்டுள்ளது. 1974—'75, 1975—'76 ஆண்டுகளில் அகில இந்தியப்பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொண்ட இவருடைய வெற்றிப் பட்டியல் இதோ :

*1968—'69*-ஆம் ஆண்டு மாவட்ட அளவுப் போட்டியில் முதல் பரிசு — விளைச்சல் : 4,229 கிலோ கிராம்.

*1970—'71*-ஆம் ஆண்டு மாநில அளவுப் போட்டியில் இரண்டாம் பரிசு—விளைச்சல் : 3,642 கிலோ கிராம்.

*1971—'72*-ஆம் ஆண்டு மாநில அளவுப் போட்டியில் முதல் பரிசு—விளைச்சல் : 4,280 கிலோ கிராம்.

*1972—'73*-ஆம் ஆண்டு மாநிலப் போட்டியில் முதல் பரிசு—விளைச்சல் : 4,375 கிலோ கிராம்.

திருமதி லட்சுமி



# எலச்சிப்பாளையம் மகளிர் மன்றத்தின் மகத்தான பணிகள்!

*1973—74*-ஆம் ஆண்டில் எலச்சிப்பாளையம் மகளிர் மன்றம் மாவட்ட அளவில்சிறந்த மகளிர் மன்றமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூபாய் 400 பரிசளிக்கப்பட்டது. அப்பரிசுப் பணத்தில் இரண்டு அம்பர் இராட்டைகள் வாங்கப்பட்டன. 25 உறுப்பினர்களைக் கொண்ட இம்மன்றத்தில் தலைவி திருமதி லட்சுமி அவர்களும், கன்வீனர் திருமதி டி. தனலெட்சுமி அவர்களும் மன்றத்தின்வளர்ச்சியில் மிக்க கருத்துடையவர்களாகப் பணி புரிகின்றனர்.

திருமதி டி. தனலெட்சுமி



# வீட்டுக்கு இரண்டு-நாட்டுக்கு இருபது!

''நிலமற்றவர்களுக்கு நிலங்களையும் வீட்டு மனைகளையும் வழங்கும் ஏற்பாடு இன்னும் துரிதமாக்கப்படும். அரிசனங்களுக்கு இன்னும் வசதியாக உள்ள புது மாதிரியான வீடுகள் கட்டித்தரப்படும். இவ்வாண்டில் இன்னும் அதிகக் குழந்தைகள், பள்ளிகளில் சேர்க்கப்படுவர். வீட்டு வசதி, உணவுக் கட்டணம் சற்று குறைக்கப்படும். அதேபோல புத்தகங்கள், பேனா, பென்சில் விலைகளும் மலிவாக இருக்கும்.''

இவ்வாறு காஞ்சிபுரத்தில் நடந்த இருபது அம்சத் திட்டப் பலமுனை விளக்க விழாவைத் துவக்கி வைத்து, ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

செங்கற்பட்டுமாவட்டஇருபது அம்சத் திட்டப் பலமுனை விளக்க விழா ஜூன் திங்கள் 27 முதல் 30 முடிய நான்கு நாட்கள் மிகச் சிறப்பாக நடந்தது.

முதல் நாள் காலை, செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களின் சார்பில் 20 அலங்கார வண்டிகள் கொண்ட பெரிய ஊர்வலம் நடந்தது. ஒவ்வொரு அலங்கார வண்டியும் இருபது அம்சத்தின் ஒவ்வொரு அம்சத்தை விளக்குவதாக இருந்தது.

பிறகு, அண்ணா கலையரங்கில் நடந்த விழாவுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. டி. கே. ஏ. திவான் முகமது அவர்கள்தலைமை வகித்தார். அவர் பேசுகையில்,

''இந்த விழாவின் நோக்கம் இருபது அம்சத் திட்டங்களைப் பாமர மக்களிடம் விளக்குவதும், அதன் பலன் என்ன என்பதைத் தெரியப்படுத்துவதும் ஆகும்'' என்றார்.

விழாவைத் துவக்கி வைத்து ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்:

''உணவுத் தானியங்களின் விலைவாசி நிலவரம் தற்போது திருப்திகரமாக உள்ளது. விலைகள் உயருமானால், அரசு தனது கையிருப்புப் பொருட்களை வெளிமார்க்கெட்டில் விடுவித்து விலை உயர்வைக் கட்டுப்படுத்தும். ஓட்டல் பண்டங்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள விலை நியாயமானதேயாகும்.

''எல்லா நெசவாளர்களையும், கைத்தறித் தொழில்களையும் கூட்டுறவின் கீழ்க் கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளது.

''அண்மையில் அறிவிக்கப்பட்ட பள்ளி இறுதி வகுப்புத் தேர்வுகளில் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த சுமார் 580 மாணவர்கள் 75 சதவிகிதத்துக்கும் கூடுதலான மதிப்பெண்கள் பெற்றுத் தேறியுள்ளனர். இவர்களுக்குப் புது ஊக்கத் திட்டத்தின் கீழ் மேற்படிப்புக்கான வசதிகள் செய்து தரப்படும்.''



ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடன் வழங்கினார்.

விழாவில், நிலமற்ற ஏழைகள் 100 பேருக்கு குடிமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. செங்கை மாவட்டத்தில் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் 541 மதிப்பெண்கள் பெற்று முதலாவதாகத் தேறிய ஜெயந்தி என்ற மாணவிக்குப் பதக்கம் வழங்கப்பட்டது. சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்குக் கடன்களும், அனாதைக் குழந்தைகளுக்கு இலவசச் சீருடையும், அரிசன நலத் துறைச் சார்பில் 6 ஏழைப் பெண்களுக்குத் தையல் இயந்திரங்களும் வழங்கப் பெற்றன.

மனநிலை தளர்ச்சியுற்றோருக்காக சமூக சேவை நிறுவனம் — கில்டு ஆஃப் சர்வீஸ் நடத்தும் பள்ளியையும், கருத்தடைத்திட்ட தீவிர இயக்கத்தையும், சிறு சேமிப்புத் தீவிர இயக்கத்தையும் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் துவக்கி வைத்தார்.

கலை அரங்கத்துக்கு முன்புறம் பல்வேறு காட்சி அரங்குகள் மக்களைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றைத் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் பார்வையிட்டார்.

இரண்டாம் நாள் நடந்த விழாவில் செய்தி, மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. என். கிருஷ்ணமூர்த்தி, ஐ.ஏ.எஸ்; அவர்கள் கலந்து கொண்டு இருபது அம்சத் திட்ட நோக்கத்தினை விளக்கினார்.

விழாவையொட்டி சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள், கவியரங்கம், கருத்தரங்கு முதலியன நடந்தன. இந்த நிகழ்ச்சிகளைத் திரளான மக்கள் நாள்தோறும் வந்து கண்டு களித்தனர்.

'வீட்டுக்கு இரண்டு— நாட்டுக்கு இருபது' என்பதைச் சொல்லாமல் சொல்லும் அரிய விழாவாக இந்த இருபதம்சத் திட்டப் பலமுனை விளக்க விழா அமைந்து, அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது என்றால் அது மிகையல்ல.

—பி.வி.ஜி.

# படமும் செய்தியும்



தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் எல்லா வகையான செயல் முறைகளுக்கும் தலைமைச் செயலகப் பணியாளர்கள் அனைவரும் மனப் பூர்வமான ஒத்துழைப்பை நல்குவதாக உறுதி மொழி அளித்த மனுவைத் தலைமைச் செய லகப் பணியாளர்கள் சங்கத்தின் அலுவலகப் பணியாளர்கள், தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்களிடம் 2-7-'76 அன்று அளித்தனர்.





பிரதம மந்திரியின் 20 அம்சப் பொருளா தாரத் திட்டத்தின்கீழ் டி.பி. ஜெயின் கல் லூரி மாணவர்கள் சைக்கிள் வாங்குவதற்கும், அக்கல்லூரியில் புத்தக வங்கி அமைப்பதற்கும் 'இந்தியன் பாங்கு' அளித்த கடன் உதவியை 2-7-'76 அன்று தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் வழங்கி னார்.



தமிழ்நாடு பீங்கான் தொழில் நிறுவனத் தின் (TACEL) கலையழகுமிக்க, பயன்மிகு பீங்கான் பொருட்கள் கண்காட்சியைத் தமிழ் நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் 3-7-'76-அன்று சென்னை இராஜாஜி அரங்கில் துவக்கி வைத் துப் பார்வையிட்டார்.



தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 3-7-'76 அன்று 'எஸ்.ஐ.இ.டி.' கல்லூரியைப் பார்வை யிட்டார்.

உடல் ஊனமுற்றவர்களுக்கும், கைவினைஞர்களுக்கும் ''பாங்க் ஆப் பரோடா'' அளித்த கடன் உதவியைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 3-7-'76-ல் 'எஸ்.ஐ.இ.டி.' கல்லூரியில் வழங்கினார்.





தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள். 5-7-'76-ல் கோவை மாவட்டத்தில் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டார்.



கோவை மாவட்டச் சுற்றுப்பயணத்தின் போது வயதான மூதாட்டிக்கு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் உதவிப்பணம் வழங்கினார்.



ஆளுநர் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள் தாளவாடியில் 5-7-'76 அன்று, கொத்தடிமையினின்று மீட்கப்பட்டுள்ள, கை ஊனமடைந்த பெண்ணுக்குப் புடவை வழங்கினார்



பாராளுமன்ற மக்கள் அவையின் தலைவர் திரு பி. ஆர். பகத் அவர்கள் தலைமையில், ஜகார்த்தா செல்லும் இந்தியப் பாராளுமன்றக் குழுவைத் தமிழ்நாடு அரசின் சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்கள் 6-7-'76 அன்று மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வரவேற்றார்.

சென்னை நகரக் காவற்படைப் பிரிவில் பணியாற்றி, 55-வயது அடைந்து ஓய்வுபெற்ற காவலர்களுக்கு சென்னை இராஜரத்தினம் ஸ்டேடியத்தில் 9-7-'76-ல் விடையனுப்பு அணிவகுப்பு மரியாதை நடத்தப்பெற்றது. அதையொட்டி நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு காவல்துறைத் தலைமை அலுவலர் திரு. இ. எல். ஸ்ட்ரேசி அவர்கள், ஓய்வு பெற்ற காவலர்களுக்கு வயது முதிர்வு ஓய்வூதிய ஆவணம் வழங்கினார்.



'வார்னிஷ்' குடித்து உயிரிழந்த 121 பேர்களின் குடும்பங்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் குடும்பம் ஒன்றுக்கு ரூபாய் 1,000 வீதம் வழங்கத் தமிழ்நாடு ஆளுநர் திரு மோஹன்லால் சுகாதியா அவர்கள் ஆணையிட்டார். முதற்கட்டமாக 11 குடும்பங்களுக்கு ஆளுநர் அவர்களின் துணைவியார் திருமதி சுகாதியா அவர்கள் 7-7-'76-ல் உதவிப்பணம் வழங்கினார்.

ஒரு விதவைக்கு உதவிப்பணம் வழங்குவதை படத்தில் காணலாம்.







வள்ளுவர் கோட்டத்தில் ஜூலை 9, 10, 11 ஆகிய 3 நாட்களில் "திருக்குறள் கருத்தரங்கு" நடைபெற்றதையொட்டி, மறைமலை அடிகள் நூலகத்தினரால் திருக்குறள் பற்றிய புத்தகக் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. அக்கண்காட்சியைத் தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள், 9.7.'76 அன்று வெகு ஆர்வத்துடன் பார்வையிட்டார்.





தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களும், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனமும் சேர்ந்து வள்ளுவர் கோட்டத்தில் நடத்திய திருக்குறள் கருத்தரங்கைத் தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன் லால் சுகாதியா அவர்கள் 9.7.'76 அன்று துவக்கி வைத்து உரையாற்றினார்.



தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன் லால் சுகாதியா அவர்கள் 9.7.'76 அன்று வள்ளுவர் கோட்டத்தில் திருக்குறள் கருத்தரங்கைத் துவக்கி வைக்க வந்தபோது, தென்னங்கன்று ஒன்றை நட்டு, தண்ணீர் ஊற்றினார்.

# நெடுஞ்சாலை - ஊரகப் பணித் துறையின் வளர்ச்சி

**திரு. சி. வி. பத்மனுபன்,**
**பி.இ., எப்.ஐ.இ.**
தலைமைப் பொறியாளர்,
நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை,
தமிழ்நாடு அரசு.

ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கும், சமுதாய ஒருமைப்பாட்டிற்கும், மறுமலர்ச்சிக்கும் சாலை அமைப்பே அடித்தளமாக அமைகின்றது. சிற்றூர்களில் விளையும் பொருட்களையும், நாட்டின் தேவைக்கான அத்தியாவசியப் பண்டங்களையும் நகரங்களுக்குக் கொண்டு செல்ல நல்லதோர் சாலையமைப்பு இன்றியமையாததாகும். இதனைக் கருத்திற்கொண்டு, நமது பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் உருவாக்கிய 20 அம்சங்கள் கொண்ட இணைந்ததோர் பொருளாதாரத் திட்டத்திலே தங்கு தடையேதுமின்றி சாலைப் போக்குவரத்து அமைந்திட வழி வகுத்தமை இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

தமிழ்நாட்டில் 1946-ஆம் ஆண்டு, சாலைகளின் மேம்பாட்டைப் பேணிக்காத்திட நெடுஞ்சாலைத்துறை உருவாக்கப்பட்டது. தற்போது தமிழ்நாட்டில் உள்ள சாலைகளின் மொத்த நீளம் 82,184 கி.மீ. இதில் நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறையின் பராமரிப்பின்கீழ் 29,248 கி.மீ. நீளச் சாலைகளும், மற்றவை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பிலும் உள்ளன.

இச்சாலை மேம்பாட்டுப் பணிகள் யாவும் மாநில அரசு நிதியிலிருந்து மேற்கொள்ளும் திட்டங்கள் மூலமாகவும், மத்திய அரசின் நிதி உதவியுடன் மேற்கொள்ளும் திட்டங்கள் மூலமாகவும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

### முக்கிய பாலங்கள்

மாநில அரசுத் திட்டங்களின் கீழ் அரசுச் சாலைகள், பிற சாலைகள், இவற்றின் முன்னேற்றப்பணிகளும் தற்போதுள்ள இருப்புப்பாதைக் கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்கள் அல்லது சுரங்கப் பாதைகள் அமைத்தல், கரும்பு ஆலைகளுக்குச் செல்ல, சாலை வசதி செய்து தரல், பெருநகர் சாலை மேம்பாடு செய்தல், பேருந்து தடச் சாலைகளை அரசு வசம் மேற்கொள்ளல் போன்றவை இடம் பெறுகின்றன. அவற்றில் முக்கியமானவை சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறேன்.

1. சென்னையில் ஜெமினி அருகே ரூ. 66 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள வனப்புமிகு மேம்பாலம்.

2. நெல்லையில் செங்கோட்டைச் சாலையில் ''திருவள்ளுவர்'' பெயரில் ரூ. 47 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள எழில்மிகு இரண்டடுக்குப் பாலம்.

3. கோவையில் அவினாசிச் சாலையில் ரூ. 53.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள மூன்றடுக்குப் பாலம்.

4. திருமானூரில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, தஞ்சை திருச்சி மாவட்டங்களை இணைக்கும் வண்ணம் ரூ. 65.70 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட பாலம்.

5. வேலூருக்கும்காட்பாடிக்கும் இடையே குறுக்கிடும் பாலாற்றில் ரூ. 69 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட பாலம்.

6. மதுரையில் மீனாட்சி நூற்பாலை அருகில் ரூ. 32 இலட்சம் செலவிலும், சுப்பிரமணியபுரத்தில் ரூ. 36 இலட்சம் மதிப்பிலும் அமைக்கப்பட்டுள்ள இரு மேம்பாலங்கள்.

**கோயம்புத்தூர் அவினாசிச் சாலையில் அமைக்கப்பட்டுள்ள மூன்றடுக்குப்பாலம்.**





திருநெல்வேலி செங்கோட்டைச் சாலையில் கட்டப்பட்டுள்ள ''திருவள்ளுவர்'' பாலம்.

7. கும்பகோணத்தில் ரூ. 16.50 இலட்சம் செலவிலும், மாயூரத்தில் ரூ. 49 இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டுள்ள இரு மேம்பாலங்கள்.

இவை தவிர சென்னையில், அண்ணாசாலையில் ஒரு சுரங்கப் பாதையும், மத்திய ரயில் நிலையம் அருகில் ஒரு சுரங்கப் பாதையும், காமராஜர் சாலையில் 'லைட் ஹவுஸ்' அருகில் ஒரு சுரங்கப் பாதையும், மாநகராட்சிக் கட்டடம் எதிரில் பூங்கா ரயில் நிலையம் அருகில் அமைக்கப்பட்டுள்ள சுரங்கப் பாதையும், அடையாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள திரு. வி. க. பாலமும் மாநில அரசு திட்டத்தின் கீழ், சென்னை நகரில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க சாலை வளர்ச்சிப் பணிகளாகும்.

மேலும் ''ஸ்பிக்'' (SPIC) என வழங்கும் தூத்துக்குடி இரசாயன உரத் தொழிற்சாலைக்கு உதவும் வண்ணம் ரூ. 112 இலட்சம் மதிப்பளவில் சாலை மேம்பாட்டுப் பணிகளும், சேலம் உருக்காலை அமைப்புக்கென ரூ. 104 இலட்சம் மதிப்பில் 50 சதவிகிதம் மத்திய அரசின் நிதி உதவியோடு சூரமங்கலம்-தாரமங்கலம் சாலை மேம்பாட்டுப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

திருச்சியில், வற்றாத காவிரியில் ரூ. 102.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள வனப்புமிகு காவிரி ஆற்றுப் பாலத்தை சமீபத்தில் மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு. கே. பிரமானந்தரெட்டி அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள்.

இவையன்றி சென்னை நகரில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே 'பைகிராப்ட்ஸ்' சாலை, 'சேமியர்ஸ்' சாலை, 'எட்வர்ட் எலியட்ஸ்' சாலை ஆகிய இடங்களில் உள்ள குறுகலான பழைய பாலங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு, போக்குவரத்திற்கு உகந்ததாக விரிவாக்கப்பட்டுள்ளன. மற்றும் வாலாஜா சாலையில் வருவாய்த்துறை அலுவலகக் கட்டிடத்திற்கு (எழிலகம்) அருகிலும் ஒரு பால வேலை முடியும் தறுவாயில் உள்ளது.

#### சுரங்கப் பாதைகள்

''காமராஜர் சாலையில்'' கண்ணகி சிலை அருகில், 'பைகிராப்ட்ஸ்' சாலை சந்திப்பில் புதிதாக ஒரு சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் சாந்தி திரையரங்கு அருகிலும், ஆயிரம் விளக்குப் பகுதியிலும் ஆக இரு இடங்களில் பாத சாரிகளுக்கெனச் சுரங்கப் பாதைகள் அமைத்திட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவ்வேலைகள் நடப்பு ஆண்டில் துவக்கப்பட இருக்கின்றன. மற்றும் அண்ணா சாலையில் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அருகிலும் விரைவில் ஒரு சுரங்கப்பாதை அமைக்கப்படவிருக்கிறது. அண்ணாசாலையில் ஆயுள் ஈட்டுறுதிக் காப்பகக் கட்டிடத்திற்கு அருகிலும், பூவிருந்தவல்லி சாலையில் 'தாசப்பிரகாஷ்' உணவு விடுதி அருகிலும், கீழ்ப்பாக்கம் மருத்துவமனை அருகிலும் சுரங்கப்பாதைகள் அமைத்திடவும், 'வால்டாக்ஸ்' சாலையில் இரயில்வே அலுவலகத்திற்கு அருகிலும், 'வால்டாக்ஸ்' நாடக அரங்கு அருகிலும் நடை மேம்பாலங்கள் அமைத்திடவும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவை தவிர மத்திய அரசின் உறுதுணையோடு உலக வங்கியின் ரூ. 5 கோடி கடனுதவியுடன் ''இந்து நாளிதழ்'', ''சபையர்'' திரையரங்கு, காவல்துறை போக்குவரத்து உதவி ஆணையர் அலுவலகம் இவற்றின் அருகில் நடந்து செல்வோருக்கான சுரங்க வழிகள் அமைப்பதற்கான திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. மேலும், சென்னை மாநகராட்சியின் சாலை மேம்பாட்டுப் பணிகளாக ஆறு இடங்களில் நடந்து செல்வோருக்கான நடைபாலங்கள் அல்லது சுரங்க வழிகள் அமைப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நுங்கம்பாக்கம் புகைவண்டி நிலையம் அருகில் வாகனங்கள் செல்லும் வகையில் ஒரு சுரங்கப் பாதையும், வட சென்னை வைத்தியநாத முதலி தெருவில் ஒரு மேம்பாலமும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

#### மேம்பாலங்கள்

இன்னும் பிற பணிகளாக, சென்னை மாநகரில் உள்ள இருப்புப் பாதை கடவுகளைக் கடக்க 8 இடங்களில் மேம்பாலங்கள் அல்லது சுரங்கப்பாதைகள் அமைத்திடும் பணிகளும் உலக வங்கியின் உதவியுடன் செயலாற்றப்படவிருக்கின்றன.

இனி, சிற்றூர்களுக்கான சாலை வளர்ச்சிப் பணிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறேன்.

#### சிற்றூர்களில் சாலை வளர்ச்சி

மக்கள் தொகை 1,500-ம் அதற்குமேலும் உள்ள பல சிற்றூர்கள் பெருநகரங்களின் தொடர்பின்றி இருந்திட்ட நிலையதனைப் போக்கிடும் வண்ணம் அரசுச் சாலைகளுடன் சிற்றூர்களை இணைத்திடவும், இருக்கின்ற சாலைகளைத் தரம் உயர்த்தி மேம்பாடு செய்திடவும் ''ஊரகச் சாலை வளர்ச்சித் திட்டம்'' செயலாற்றப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ், இதுகாறும் சுமார் 1,164 சிற்றூர்கள் பயனடைந்துள்ளன. 2,879 கி.மீ. நீளமுள்ள சாலைகள் அமைக்கப்பட்டும், மேம்பாடு செய்யப்பட்டும் உள்ளன. இதனால், மேலும் இடையிலுள்ள 1,456 சிற்றூர்களும் பயனடைந்துள்ளன. இதற்காக இதுநாள் வரை செலவு செய்யப்பட்ட தொகை 1,219 இலட்ச ரூபாய் ஆகும்.



சென்னையில், ஜெமினி அருகே கட்டப் பட்டுள்ள எழில்மிகு மேம்பாலம்.

இதைத் தவிர, சாலை வசதி யற்ற சிற்றூர்களுக்கு சாலை அமைத்துத் தரும் ''கடும் விரைவுத் திட்டமும், அரிசன குடியிருப்புக்களிலிருந்து இடுகாட்டிற்குச் செல்ல சாலை வசதி செய்து தரும் திட்டமும் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### வறட்சி நிவாரணத்தின் கீழ் சாலை அமைப்பு

இவையன்றி தமிழகத்தில் ஏற்பட்ட கடுமையான வறட்சியினால் இன்னலுற்ற மக்களின் துயர் துடைக்கும் முகத்தான் புதிய சாலைகள் அமைத்துத் துயருறும் மக்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பினை அளிக்கும் வண்ணம் நடப்பு ஆண்டில் வறட்சிப் பகுதிகளில் சாலை அமைக்க, தமிழ்நாடுஅரசு ரூபாய் 160 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

### வணிக வளர்ச்சி இணைப்புச் சாலைகள்

நான்காவது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் மத்திய அரசு, வணிக வளர்ச்சி-இணைப்புச் சாலைகளுக்கான பணிகளில் 10 அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டதில் காவிரிப் பாசனப் பகுதிகளுக்கான அபிவிருத்தித் திட்டம் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டது.

தஞ்சை மாவட்டத்தில் ஒரு பகுதியும், முசிறி, குளித்தலை, திருச்சி, லால்குடி, ஆகிய திருச்சி மாவட்டப் பகுதிகளும், தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம் வட்டமும் இத்திட்டத்தினால் பயனடைந்த பகுதிகளாகும்

### கரும்பாலைப் பகுதிகளில் சாலை வளர்ச்சி

தமிழகத்தில் மட்டும் பதினாறு கரும்பாலைகள் உள்ளன. இந்த ஆலைகளில் பல, கூட்டுறவுத்துறையின் கீழும், சில, தனியார் துறையின் கீழும் இயங்கி வருகின்றன. இந்த ஆலைகளுக்குத் தேவையான கரும்பைக் குறைந்த செலவில் எடுத்துச் செல்லும் பொருட்டு,

கரும்பு அதிகமாக விளையும் இடங்களில் இருந்து ஆலைகள் உள்ள இடங்களுக்கு, சாலை அமைத்தும், அபிவிருத்தி செய்தும் தர வேண்டியது அவசியமெனக் கருதி, இது காறும் 320 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் அமைக்கப்பட்டும், மேம்படுத்தப்பட்டும் அரசின் பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆண்டு மேற்படி திட்டப் பணிகளுக்காக அரசு ரூ. 75 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

### ஊராட்சி சாலைகளின் தரம் உயர்ந்தது!

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பிலுள்ள சாலைகளில் பேருந்துகள் செல்லும் சாலைகளின் தரத்தை உயர்த்த வேண்டியது அவசியமெனக் கருதி, நமது அரசு. தனது பராமரிப்பிற்கு சுமார் 4,940 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை மேற்கொண்டுள்ளது. இதே போன்று நகராட்சிகளின் பராமரிப்பிலுள்ள சாலைகளிலும் இது வரை சுமார் 120 கிலோ மீட்டர் நீளமுள்ள பேருந்து வழித்தடச் சாலைகளை அரசின் பராமரிப்பிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



வேலூருக்கும்-காட்பாடிக்கும் இடையில் பாலாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம்.

மலைப் பகுதியிலே வாழ்கின்ற பிற்பட்ட மக்களின் நலனைப் பெருக்கவும், சுற்றுலாப் பயணிகளைக் கவரவும் நீலகிரி மாவட்டத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் சாலை அமைத்திடவும், மேம்படுத்தவும் மத்திய அரசு முன் வந்து நிதி உதவி செய்யும் ஒரு திட்டத்தை இவ்வாண்டு முடிக்க ஏற்பாடு நடந்து வருகிறது.

முன் சொன்னவாறு தமிழ்நாட்டில் சாலைகளை மேம்படுத்தி வருவதோடல்லாமல், மத்திய அரசினுடைய முழு நிதி உதவியுடன் தமிழ்நாட்டிலுள்ள 1,852 கிலோ மீட்டர் நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் அனைத்தும் சீரான முறையில் பயன்தரத்தக்க வகையில் அமைந்திட தனியானதொரு பிரிவாக தேசிய நெடுஞ்சாலைத் துறை உருவாக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றது.

இத்துறையானது தேசிய நெடுஞ்சாலைகளின் வளர்ச்சியோடு, மற்றும் பல சாலைகளையும் ''மத்திய சாலை வளர்ச்சி நிதி'' யின் மூலம் மேற்கொள்ள வேண்டியபணிகளையும் எடுத்துச் செயலாற்றி வருகின்றது.

**ஒருமைப்பாட்டை வளர்க்கும் பாலம்!**

இவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் குறிப்பிட வேண்டிய முக்கிய பணி தேசிய ஒருமைப்பாட்டினை வளர்க்கும் வகையில் அமைந்து வரும் இராமேஸ்வரம் கடற்பாலமாகும். இதற்குப் பாம்பன் பாலம் என்னும் பெயர். அனைத்திந்திய முக்கியத்துவம் வாய்ந்த ஆலயத்தினைக் கொண்ட இராமேஸ்வரம் தீவையும், தமிழ்நாட்டின் முக்கிய நிலப் பரப்பையும் இணைத்திடும் வண்ணம் பாம்பன் நீர்ச்சந்தியின் குறுக்காக இப்பாலம் பாங்குற எழுப்பப்படுகிறது. பாரதத்திலேயே இப்பாலம்தான் கடலின் மத்தியில் அமைக்கப்படும் முதல் இயங்கும் பாலமாகும். இப்பாலம் அமைப்பதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 5.32 கோடி ஆகும். 1978-ஆம் ஆண்டிற்குள் இப்பாலத்தைக்கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக மத்திய அரசு, நெடுஞ்சாலைத் துறையில் மாநில அரசு மூலம் தனிப் பிரிவு ஒன்றை அமைத்துள்ளது. இப்பிரிவு இப்பால வேலையை நிறைவேற்றுவதோடு அண்டை மாநிலங்களைத் தமிழகத்துடன் இணைப்பதற்கான சாலை வசதிகளை ''பொருளாதார பல மாநில முக்கியத்துவ திட்டத்தின்கீழ்'' மத்திய அரசின் முழு நிதி கடன் உதவியுடன் மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் மத்திய அரசு 2 கோடியே 61 இலட்சம் ரூபாய் மதிப்பில் கிழக்குக் கடற்கரைச் சாலை அமைப்பில் 40 பாலங்களை நிறுவ வழிவகுத்துள்ளது.



மதுரை சுப்பிரமணியபுரம் பாலம்.

பலதரப்பட்ட நவீன சாலைகள் ஏற்படுவதால் போக்குவரத்து சுலபமாகவும் பொருளாதார வளர்ச்சி குறைந்த செலவிலும் கூடி வர ஏதுவாகிறது. இந்த வகையில் சாலைகள் வளர, போக்குவரத்து வளருகிறது. அதனால் வாணிபம் பெருகி அரசுக்கு வருவாய் அதிகரிக்கிறது. இதனால் சாலைகளுக்கு மேலும் அதிக நிதி ஒதுக்க வழி உண்டாகிறது. இந்த வகையில் சாலைகளும் போக்குவரத்துத் துறையும் ஒன்றை ஒன்று பேணி வளர்ப்பது தெளிவாகும்.

இவ்வாறு தமிழகம் சாலை வளர்ச்சிப் பணிகளில் தன்னிறைவு காண இந்தியத் துணைக்கண்டத்தில் மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடியாக விளங்குகிறது.

(சென்னை வானொலியில் 4-7-'76 அன்று 'வளரும் தமிழகம்' என்ற தலைப்பில் ஆற்றிய உரையின் தொகுப்பு.)

## தமிழ்நாடு சட்டமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டம்

தமிழ்நாடு சட்டமன்ற ஆலோசனைக் குழுவின் இரண்டாவது கூட்டம் வருகிற ஆகஸ்ட் மாதம் 2-ஆம் தேதி டில்லியில் நடைபெறும். மத்திய உள்துறை அமைச்சர் திரு. கே. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் இக்கூட்டத்துக் குத் தலைமை வகிப்பார். குழுவின் முதலாவது கூட்டம் சென்ற மே மாதம் முதல் தேதியன்று சென்னையில் நடைபெற்றது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் சேர்ந்த 60 உறுப்பினர்கள் இக்குழு உறுப்பினர்களாக உள்ளனர்.




## ஒவ்வொரு மாட்டிலிருந்தும் வருடத்திற்கு ரூ.500/-க்கு மேல் அதிகப்படி சம்பாதியுங்கள்...

## பூன்-ஓ-மில்க்® கிற்கு நாளொன்றுக்கு 20 பைசா செலவிடுங்கள்

**கொழுப்பு மிக்க மிருதியான பாலுக்கும், கூடுதலான லாபத்திற்கும் பூன்-ஓ-மில்க்**

- **பூன்-ஓ-மில்க்கில்.** ஃபேட்டி மாறுபாட்டு விகிதத்தை அதிகமாக்கி, ஹார்மோனற்ற கெலெக்டோகோக்காகச் செயலாற்றி இதன் பயனாக பால் கறவையை 10% அதிகமாக்கும் அயோடினேடெட் கேஸ்ஸீன் அடங்கியுள்ளது.
- **பூன்-ஓ-மில்க்கில்.** விரைவில் ஆவியாகும் ஆஸிட்ஸ்களும்—அஸிடேட்டுகளும், பூட்ரிக் ஆஸிடும் அடங்கியுள்ளன; இவை வெண்ணைச்சத்தை 15% அதிகமாக்குகின்றன என்பது ரேடியோ ஐஸோடோபிக் சோதனைகள் மூலம் நிரூபணமாகியுள்ளது.
- **பூன்-ஓ-மில்க்கில்.** மாடுகளை ஆரோக்கியமாக வைத்திருந்து, பால் ஜுரத்தைக் கட்டுப்படுத்தும் கால்ஷியம், ஃபாஸ்ஃபரஸ் மற்றும் வைட்டமின் 'டி'யின் பூஸ்டர் டோஸும் அடங்கியுள்ளன.
- **பூன்-ஓ-மில்க்கில்.** சிறு அளவுகளில் தேவைப் படும், இன்றியமையாத தாதுப் பொருள்கள் எல்லாம் சிறந்த விகிதங்களில் அடங்கியுள்ளன. இவை மாடுகளின் சினைத் திறனை மேம்படுத்துகின்றன.

**பூன்-ஓ-மில்க் மூலம் உங்களுக்கு ஒவ்வொரு மாட்டிலிருந்தும் வருடத்திற்கு ரூ. 500/-க்கு மேல் அதிகப்படி லாபம் கிடைக்கிறது.**

- தினமும் ஒருவேளை தீவனத்துடன் 15 கிராம் **பூன்-ஓ-மில்க்** கலந்து கொடுங்கள்
- ஒவ்வொரு மாட்டிற்கும் தினமும் 1 கிலோ கிராம் அதிகப்படி தீவனம் கொடுங்கள்



**பூன்-ஓ-மில்க் கெடுதலற்றது பயன்மிக்கது**

கறவைமாடுகளுக்கு **பூன்-ஓ-மில்க்** ஒரு விதமான கெடுதலுமற்றது என்பதைப் பிரபலமான மிருக வைத்தியர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

1 கிலோ மற்றும் 450 கிராம் பாக்கட்டுகளில் கிடைக்கிறது.

**பூன்-ஓ-மில்க் உங்கள் மாடுகளுக்கு ஒரு வரப் பிரசாதம் உங்கள் லாபத்திற்கு ஒரு ஊந்துகோல்**

**பூன்-ஓ-மில்க்—கால் நடைத் தீவனத் துணை உணவு.**
ஆராய்ச்சியின் அடிப்படையில் தயாரிப்பவர்கள்:
ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் ப்ரை. லிட்., த.பெ. எண். 9417, பம்பாய் 400 093

*விநியோகஸ்தர்கள்* இன்டோமாக் கார்ப்பரேஷன், 3, கொல்லன் பட்டறைத் தெரு, கீழவெளிவீதி, மதுரை-1 நடராஜ் ஏஜென்ஸிஸ், 34, கடைவீதி, கோபிச்செட்டிபாளையம், கோயம்புத்தூர் மாவட்டம். தண்ணீர்மலை ஏஜென்ஸி, 41-எ, கிரி ரோடு, தி. நகர், சென்னை-17.

Grant/I TM

மாணவர் அரங்கம்



# கற்பூர வரலாறு

சிறுவன் சிகாமணியும் அவன் தந்தை அருட்பிரகாசரும் சாமி சந்நிதிக்குள் அடியெடுத்து வைப்பதற்கும், கற்பூர ஆரத்தி நடைபெறுவதற்கும் சரியாக இருந்தது.

கற்பூர ஆரத்தியைப் பார்த்த அருட்பிரகாசர் பக்தியுடன் கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

கற்பூர ஆரத்தியின் ஒளியில் மூலவரின் உருவம் தெளிவாகத் தெரிந்தது மட்டுமல்ல, கற்பூரத்தின் மணம் அங்கிருந்த அனைவரின் மனத்திலும் ஒருவகை பக்தி உணர்வை உருவாக்கிக் கொண்டிருந்தது. அநேகர் மெய் மறந்து துதித்தனர்.

கற்பூரத்தின் மணம் சிறுவன் சிகாமணியையும் கவர்ந்தது. சாதாரண வெள்ளைப் படிவத்திற்கு அவ்வளவு ஆற்றல் எப்படி ஏற்படுகிறது என்று வியந்த சிகாமணி, கற்பூரம் எவ்வாறு கிடைக்கிறது என்று சிந்திக்கத் தொடங்கினான். அப்பாவிடம் கேட்கலாம் என நினைத்தான். அங்கேயே கேட்டால் அப்பா கோபித்துக் கொள்ளக்கூடும் என்று அவனுக்குத் தோன்றியது. அதனால் தரிசனம் முடித்துவிட்டு, வீட்டுக்குத் திரும்பும் வழியில் கேட்டுக்கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தான்.

தரிசனம் முடிந்தது; வீட்டை நோக்கி நடைபோட்டனர் அப்பாவும் மகனும்.

மகன் சிகாமணி, தன் சந்தேகத்தை வினாவாக்கித் தந்தையிடம் தொடுத்தான்.

''அப்பா! மனத்தைக் கவரும் மணமிக்க கற்பூரம் எங்கேயிருந்து கிடைக்கிறது?''

''சிகாமணி! கற்பூரம் ஒருவகை மரத்திலிருந்து தயாராகிறது!''

''ஆச்சரியமாக இருக்கிறதே! அந்த மரத்தின் பெயர் என்ன அப்பா?''

''தாவர இனத்தில் லாரசியா குடும்பம் என ஒன்று உள்ளது. அதைச் சேர்ந்த சின்ன மோமம் கம்பூரா என்று சொல்லப்படும் பெரிய மரத்திலிருந்து கற்பூரம் கிடைக்கிறது.''

''நமது மாவட்டத்தில் அந்த மரம் இருக்கிறதா அப்பா?''

''நமது மாவட்டத்தில் கிடையாது; நமது மாநிலத்தில் நீலகிரியிலும், நமது நாட்டில் டேராடூன், சகரன்பூர், கல்கத்தா ஆகிய பகுதிகளிலும் கற்பூரமரம் வளர்கிறது.'' இது சீனா, ஜப்பான், தைவான் முதலிய நாடுகளில் தான் முதன் முதலில் தோன்றியது. அங்கெல்லாம் இது காலங்காலமாகப் பயிரிடப்பட்டு வருகிறது. அங்கு, கற்பூரத் தயாரிப்பு ஒரு முக்கியத் தொழிலாகவும் நடைபெற்று வருகிறது''

''இந்த மரம் எவ்வளவு உயரம் வளரும் அப்பா?''

''இது சுமார் 30 மீட்டர் உயரம், 2 மீட்டர் அகலம் வளரும். 60 டிகிரி முதல் 100 டிகிரி வரை மழை பெய்யும் பகுதியில் இது நல்ல முறையில் வளர்ச்சி பெறுகிறது!''

''அப்பா! இந்த மரம் விதைகளின் மூலம் தானே வளர்கிறது?''

''விதைகளின் மூலமாக மட்டுமல்ல, கணுக்களை நடுவதன் மூலமாகவும் இது வளர்கிறது.''

''கற்பூர மரத்தில் பூ உண்டா? காய் உண்டா?''

# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

**ரூ. 20½ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட
11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.

''காயும் கிடையாது! கனியும் விளையாது! சில என்சைம்களின் உதவியினால், செடிகளில் உள்ள எண்ணெய் செல்களில் படிகின்ற படிவம்தான் கற்பூரம் எனப்படுகிறது. இந்த எண்ணெய் செல்கள் ஏறக்குறைய செடிகளின் எல்லா பாகங்களிலும் பரவியுள்ளன. எண்ணெய் செல்கள் செடிகளின் இளம் பருவத்திலேயே உற்பத்தி ஆகிவிடுகின்றன. மஞ்சள் நிற எண்ணெய்யால் நிறைக்கப்படுகின்றன. சிறிது காலம் கழித்து, எண்ணெய்ப் பசை ஆவியாகி வெண்மையான, திடமான கற்பூரம் உருவாகிவிடுகிறது. இலைகள் நீராவி முறையில் வடிகட்டுவதன் மூலமும் கற்பூரப் படிவம் கிடைக்கிறது.''

''அப்பா, செடிகளின் எந்தப் பாகத்திலிருந்து கற்பூரம் அதிக அளவில் கிடைக்கிறது?''

''வேர்ப்பகுதியில்தான் கற்பூரப் படிவம் மிக அதிக அளவில் படிகிறது.''

''அதிகமான கற்பூரம் கிடைப்பதற்கு நல்ல தரமான செடிகளின் விதைகளைத் தானே விதைக்க வேண்டும்!''

''அப்படி இல்லை! உயர்ந்த உற்பத்தியைத் தருகின்ற மரங்களின் விதைகள் உயர்ந்த விளைச்சலைத் தரும் செடிகளை உருவாக்கும் என்று உறுதியாகச் சொல்லிவிட முடியாது!''

''வியப்பாக இருக்கிறதே அப்பா!''

''அதுமட்டுமல்ல சிகாமணி'' நிழல் மிகுந்த பகுதியில் காணப்படும் செடிகள், குறைந்த அளவு கற்பூரத்தையும் திறந்த வெளிப் பகுதியில் வளர்ந்துள்ள செடிகள், அதிக அளவு கற்பூரத்தையும் தருகின்றன-முதிர்ந்த இலைகளைவிட, இளம் இலைகள்தான் அதிக கற்பூரத்தைத் தம்மிடம் கொண்டுள்ளன.''

''பொதுவாக, கற்பூரம் தரும் மரங்கள் எந்த வயதைச் சார்ந்தவையாக இருக்கும்?''

''முன்பெல்லாம் 60 வயது நிறைந்த மரங்களிலிருந்தே கற்பூரம் எடுக்கப்பட்டு வந்தது. இந்த நவீன காலத்தில் 4 அல்லது 5 வயது நிரம்பிய மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.''

''நமது இந்தியாவில் எந்த மாநிலத்தில் கற்பூரம் அதிக உற்பத்தியாகிறது அப்பா!''

''கேரள மாநிலத்தில் கொச்சிப் பகுதியில் உள்ள ஒரு ரகம், மற்



**கற்பூர மரக்கிளை**

றெல்லாப் பகுதிகளிலும் உள்ள ரகங்களையும் விட அதிக அளவு கற்பூரத்தை உற்பத்தி செய்கிறது. பொதுவாக, கற்பூர உற்பத்தி, இலையின் மொத்த எடையில் 1 சதவீதமாகத்தான் இருக்கிறது.''

''அப்பா! கற்பூரம் ஆலயத்தில் ஆரத்திக்கு மட்டும்தான் பயன்படுத்தப்படுகிறதா? வேறு வகையிலும் பயன்படுத்தப்படுவது உண்டா?''

''கற்பூரம் ஆலயத்தில் மட்டுமல்ல, பல்வேறு வகைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. விருந்துக்கு மெருகேற்றும் பாயசம் முதல், மருந்துக்கு இனமாகத் திகழும் மாத்திரை தயாரிப்பு வரை, கற்பூரம் பயன்படுத்தப்படுகிறது. கற்பூரம் சிறந்த நச்சுத்தடை ஆற்றல் (Anti Septic) கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது! சில சமயங்களில் மயக்க மருந்தாகவும் பயன்படுகிறது. கடும் ஜுரம் ஏற்பட்டு, தன்னுணர்வை இழக்கின்றவர்களுக்கு உணர்வு ஊட்ட இது பயன்படுத்தப்படுகிறது.

''பல்வேறு வகையான இரத்த ஓட்டக் கோளாறுகளையும் இருதய நோய்களையும் குணப்படுத்துவதற்கு கற்பூரம் ஆலிவ் எண்ணெயுடன் கலக்கப் பெற்று ஊசி மருந்தாக உடலுக்குள் செலுத்தப்படுகிறது. உடல் எரிச்சல் ஏற்படும்போது தோலில் தடவுவதற்கேற்ற புறமருந்தாகவும் பயன்படுகிறது.

''அப்பா! சாதாரண கற்பூரத்திற்கு இவ்வளவு சிறப்பு இருக்கின்றதா?''

''ஆமாம் சிகாமணி! கற்பூரம் பல சிறப்புக்களைக் கொண்டுள்ளது. அது தன்னை அழித்துக் கொண்டு, பிறருக்கு மணம் தரும் குணமும் கொண்டது. மனிதர்கள், தமக்குக் கேடு வந்தாலும் கூட அதைப் பொறுத்துக் கொண்டு பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற தத்துவத்திற்கு அடையாளச் சின்னமாகத் திகழ்கிறது கற்பூரம்!''

''அப்பா! செயற்கை முறையில் ரேயான், டெர்லின் போன்ற துணிகள் தயாரிக்கப்படுகின்றனவே, அவற்றைப் போல, கற்பூரமும் தயாரிக்கப்படுவது உண்டா!''

''சரியான கேள்வி கேட்டாய் சிகாமணி! இயற்கையில் கிடைத்து வரும் கற்பூரம் மனித இனத்தின் முழுத் தேவையையும் பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாக இல்லை. அதனால் இரசாயன முறையில் துணிகள் தயாரிக்கப்படுவதைப் போலவே, கற்பூரமும் செயற்கை முறையில்-இரசாயன முறையில் தயாரிக்கப்படுகிறது! ஆனால் இந்த இரசாயனத் தயாரிப்பு அவ்வளவு சுத்தமானதாக இல்லை; இதன் செயல் திறனும் குறைவு!''

''அப்பா! செயற்கைக் கற்பூரம் எதற்குப் பயன்படுத்தப்படுகிறது?''

''செலுலாய்டு, பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிப்பில் செயற்கைக் கற்பூரம் மிகுதியான அளவில் பயன்படுத்தப்படுகிறது! இந்தப் பொருள்களுக்கெல்லாம் இயற்கைக் கற்பூரத்தைப் பயன்படுத்தினால், கற்பூரத்திற்குப் பஞ்சமே ஏற்பட்டுவிடும்!''

சிகாமணியின் தந்தை சொல்லி முடிப்பதற்கும் அவர்கள் வீட்டை நெருங்குவதற்கும் சரியாக இருந்தது. சிகாமணி, மகிழ்ச்சியுடன் வீட்டுக்குள் நுழைந்தான். ''கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை'' என்று நண்பர்கள் இனி மேல் தன்னைக் கேலி செய்தால் ''கற்பூர வாசனை மட்டுமல்ல-வரலாறே தெரியும்'' என்று பதில் சொல்லிவிடலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டுவிட்டது!

— எஸ். சண்முகசுந்தரம்


காதி கிராப்ட்
ஏராளமான சத்து
என்னிடம் உண்டு
தாராளமாய்
என்னைப் பயன்
படுத்துவீர் - "பனை"
இனிமைக்குப் பனஞ்சீனி,
பனை வெல்லம், பனங்கற்
கண்டு, சாக்லெட்கள்;
ஜாம், பழரசங்கள்.
குளிர்ச்சிக்குப் பதநீர்,
பாம்ஓ குளிர்பானங்கள்
எழிலுக்குப் பனை ஓலைப்
பொருட்கள்.
பதநீர்
JAM
துப்புரவிற்குப் பனம்
தும்பு பிரஷ்கள். தரமான
மலிவான, இவை
வாங்கிடத் தமிழக
மெங்கும் 180 காதி
கிராப்ட்.
காதி கிராப்ட்
தமிழ்நாடு கதர்,
கிராமத் தொழில்வாரியம்,
'குறளகம்',
எஸ்ப்ளனேடு,
சென்னை-600 001
KK/380 TAM

# நெருக்கடி நிலையில் தேசிய மாணவர் படையின் பங்கு

—o○o—

தேசிய மாணவர் படை இளைஞர்களிடையே தலைமைத் தன்மை, ஒழுக்கம், சகோதரத்துவம், விளையாட்டு உணர்வு, சேவையின் மகத்துவம் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கான பணியில் இனி ஈடுபடும். தேசிய நெருக்கடி நிலைமை உள்ள இச்சூழ்நிலையில் நாட்டுக்கு உதவ, கட்டுப்பாடு உணர்வுடன் கூடிய பயிற்சி பெற்ற ஆள் பலம் கொண்ட படையை ஏற்படுத்துவதைத் தனது குறிக்கோளாகக் கொண்டிருக்கும். அதிகாரிகள் போன்று திறம் படைத்தவர்களாக விளங்கும் விதத்தில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். அதன் மூலம் இராணுவ சேவையில் கமிஷன் அந்தஸ்துப் பெறமுடியும்.

தேசிய மாணவர் படையின் 21வது மாநிலப் பிரதிநிதிகள் மாநாடு புது தில்லியில் 17-4-'76 அன்று நடைபெற்றபோது தலைமை வகித்த பாதுகாப்பு அமைச்சகச் செயலாளர் திரு. டி. ஆர். கோஹிலி, தேசிய மாணவர் படையின் குறிக்கோள்களில் கொண்டுவரப்பட்டுள்ள புதிய மாற்றங்களைத் தெரிவித்தார்.

இம்மாநாட்டிற்குப் பாதுகாப்பு அமைச்சர் திரு பன்சிலால், சிறப்புச் செய்திவிடுத்தார். அதில் அவர், மாநிலங்களில் தேசிய மாணவர் படையுடன் சமூக சேவைத் திட்டங்களை ஒருங்கிணைத்துத் செயல்படுத்துவதன் அவசியம், தேசிய மாணவர் படையின் தலைமை அதிகாரியின் அதிகாரங்களைத் தேசிய மாணவர் படையின் மாநில இயக்குனர்களுக்கு அளிப்பது, துப்பாக்கி சுடுவதில் பயிற்சி பெறுவதற்கான இடவசதி, தேசிய மாணவர் படைப் பிரிவுச் சிப்பந்திகளுக்கு வீட்டு வசதி எங்கெங்கு இல்லையோ அப்பகுதிகளில் நிலம் ஒதுக்கீடு செய்து வீட்டு வசதி அளிப்பது போன்றவை குறித்து எடுத்துக் கூறினர்.

தேசிய மாணவர் படை, சமூக சேவையில் மேலும் அதிகமாக ஈடுபடும். பயிற்சி முகாம் நடைபெறும் போது சம்பந்தப்பட்ட மாநில அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்துத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் உதவும். இத்தகைய பயிற்சிக் களங்களின் காலம், ஒரு வாரம் நீட்டிக்கப்படும் எனத் தெரிகிறது. தண்ணீரில் சறுக்கு விளையாட்டு, பனிக்கட்டி மலை மீது ஏறுவது போன்றவற்றிலும் பயிற்சி வகுப்புகளை நடத்த வேண்டும் என்று இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

தேசிய மாணவர் படையின், இளநிலைப் பிரிவில் உள்ளவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து 7 இலட்சமாகவே இருக்கும். முதுநிலைப் பிரிவில் உள்ளவர்களின் எண்ணிக்கை படிப்படியாக 4 இலட்சத்திற்குக் குறைக்கப்படும். அரசு ஏற்றுக் கொண்டு இம்மாநாட்டில் அறிவிக்கப்பட்ட மஹாஜன் குழுவின் மற்றொரு பரிந்துரை, தேசிய மாணவர் படையில் கமிஷன் அந்தஸ்துப் பெற்ற அதிகாரிகளுக்கும் 'காடட்' பயிற்சியாளர்களுக்கும் நீண்ட சேவைக்கான பதக்கங்களையும் ரிப்பன்களையும் வழங்கும் முறையைக் கொண்டு வர வேண்டும் என்பதுதான். இந்தப் பதக்கங்களும் ரிப்பன்களும் 5 ஆண்டு, 10 ஆண்டு, 15 ஆண்டு சேவைக்குப் பிறகு அளிக்கப்படும்.

தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்களுக்கு முதுநிலைப் பிரிவிலும் இளநிலைப் பிரிவிலும் இரண்டு வருட காலப் பயிற்சி அளிக்கப்படும். முதுநிலைப் பிரிவு காடட்டுகளில், இராணுவ சேவை புரிய விரும்புவோர்க்கு மேலும் ஓர் ஆண்டுக் காலப் பயிற்சி அளிக்கப்படும். தேசிய மாணவர் படையில் நிரந்தர இராணுவ அதிகாரிகளை வேலைக்கமர்த்தும் போது அதிகக் கவனம் செலுத்தப்படும். பகுதி நேர அதிகாரிகளுக்கு அளிக்கப்படும் கௌரவ ஊதியத் தொகை அதிகரிக்கப்படும். அவர்கள் 15 வருட காலமோ அல்லது 45 வயது வரையோ, இவற்றில் எது முன்னதாக நிகழ்கிறதோ அது வரை இச்சேவை புரியலாம்.

## மாணவர்க்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி

நடப்புக் கல்வியாண்டில் உதவி தேவைப்படும் கல்லூரி மாணவர்களுக்குக் கல்வி கற்கும்போதே சம்பாதிக்கவும் வகை செய்யும் திட்டத்தை தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷன் கொண்டு வருகிறது.

பிரதமர் அவர்களின் 20 அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியான இந்தத் திட்டம், மாணவரிடை தொழில் முயற்சி, தன்னம்பிக்கை, தேசிய வளர்ச்சியில் பங்கு கொண்டுள்ள உணர்ச்சி ஆகியவைகளை ஊட்டும்.

இந்தத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு நடப்புக் கல்வியாண்டில் தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷன் மில்களின் "ஷோ ரூம்"களில் தினசரி 2 மணி நேரத்துக்குப் பகுதி நேர வேலையும், கோடை விடுமுறையில் முழுநேர வேலையும் அளிக்கப்படும். பகுதி நேர வேலைக்கு தினசரி ரூ. 5 ஊதியம் கொடுக்கப்படும்.

மற்றொரு திட்டத்தின் கீழ், மாணவர்கள், ரொக்க டிபாசிட் உத்தரவாதத்துக்கு உட்பட்டு, தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷன் துணிகளை குறிப்பிட்ட சில்லறைக் கடையிலிருந்து எடுத்துக் கொண்டு போய் வீடு வீடாக விற்கலாம். துணிகளின் மாதிரிகள் மாணவர்களுக்குத் தரப்படும். அவைகளைக் காட்டி ஆர்டர்கள் பெற்று மறுநாள் பட்டுவாடா செய்யலாம்.

மாணவர்கள் செய்யும் விற்பனையில் 8 முதல் 10 சதவிகிதம் கமிஷன் பெறுவர். மாணவர்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து ஒரு பல்கலைக் கழகம் அல்லது கல்லூரி விடுதியில் விற்பனைக் கடைகள் திறந்து நடத்தலாம்.

# மக்கள் விழிப்பே மலேரியா ஒழிப்பு!




சில நாட்களாகச் சென்னை நகரில் மலேரியா என்று பத்திரிகைகளில் பரபரப்பூட்டும் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன! அரசினர் மருத்துவமனைகளில் மலேரியா நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கவென்று தனி ஏற்பாடுகள் நடந்த வண்ணமிருக்கின்றன!

இம் மலேரியா நோய் சில ஆண்டுகளுக்கு முன்பே, நம் நாட்டிலிருந்து அறவே ஒழிக்கப்பட்டிருந்தும், திரும்பத் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. இது சென்னையில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தின் பல பாகங்களிலும், திரும்பவும் தோன்ற ஆரம்பித்துள்ளது! மலேரியாவை அறவே ஒழிக்க முடியும். எப்படி? அது பொதுமக்களின் கையில்தான் உள்ளது! எனவே, மலேரியாவைப் பற்றிப் பொது மக்கள் அனைவரும் தெரிந்து கொள்வது கடமையாகும்.

### மலேரியாக் காய்ச்சலின் அறிகுறிகள்

மலேரியா காய்ச்சல் ஒரு கொடியநோய். இதன் அறிகுறிகள் கடுமையான குளிர்காய்ச்சல், வியர்த்துக் கொட்டுதல், தலை, கை, கால், முதுகு வலி ஆகியவை. குறிப்பிட்ட நேரங்களில் காய்ச்சல் விட்டு விட்டு வரும். ஒரு நாள் விட்டு ஒரு நாள், இரண்டு நாட்களுக்கு ஒரு முறை அல்லது நான்கு நாட்களுக்கு ஒரு முறை வருவதும் உண்டு. சிலருக்குக் காய்ச்சல் தொடர்ந்து இருப்பதும் உண்டு.

இது நம் உடல் நலனைக் கெடுக்கின்றது; உழைப்பை வீணாக்குகிறது ; வேலைத் திறனைக் குறைக்கிறது. இவற்றின் விளைவாக நாட்டின் பொருளாதார நிலையும் உற்பத்தித் திறனும் பாதிக்கப்படுகின்றன.

### நோய் பரவும் முறை

'மலேரியா' எனப்படும் முறைக் காய்ச்சல் ஒரு நுண்ணிய உயிரணுவினால் வருவது. 'அனாபிலிஸ்' என்ற ஒரு வகைக் கொசு மலேரியா நோயாளியைக் கடித்து விட்டு, நம்மைக் கடித்தால்—நோயாளியின் உடலில் இருந்து நோய்க் கிருமி நம் இரத்தத்தில் கலக்கிறது ; மலேரியா காய்ச்சல் வருகிறது.

### கொசுக்களை ஒழிக்கும் முறை

மலேரியா காய்ச்சலைப் பரப்பும் 'அனாபிலிஸ்' என்னும் பெண் கொசுக்களை ஒழிக்க வீட்டினுள்ளும், மாட்டுத் தொழுவத்திலும் டி. டி. டீ. (D. D. T.) மருந்து தெளிக்க வேண்டும். கொசுக்கள், தேங்கிய நீரில் உற்பத்தியாவதால், நீர் பாய்ந்தோடுவதற்கு ஏற்ற வகையில் கால்வாய்களை வெட்டி வழி செய்ய வேண்டும். கொசு உற்பத்தியைத் தடுக்க எண்ணெய் தெளிக்கலாம். ''பாரிஸ் கிரீன்'' தூவினால் கொசுப் புழுக்கள் இறந்து விடும். நீர் தேங்கிய இடங்களில் மண்கொட்டி நிரப்பலாம். நீர் நிலைகளில் 'கம்பூசியா' மீன்களை விடலாம்.

கொசுக் கடியைத் தடுக்க கொசு வலை உபயோகப்படுத்துவது மிகவும் நல்லது. வீடுகளில் கதவுகள், சன்னல்கள் ஆகியவற்றில் கொசு உள்ளே போகாத வண்ணம் கம்பி வலைகளைப் பொருத்தலாம்.

### இரத்தப் பரிசோதனை செய்து கொள்ளுங்கள்

காய்ச்சல் வந்தால், எந்த விதக் காய்ச்சலானாலும், இரத்தப் பரிசோதனை செய்து கொள்வது மிகவும் அவசியமாகும். ஏனென்றால், இப்பொழுது எங்கு பார்த்தாலும் மலேரியா நோய் காணப்படுகிறது.

ஒரு துளி இரத்தம் எடுத்தால் போதும், அதை உருப்பெருக்கியால் (Microscope) பார்த்தால் மலேரியா கிருமிகள் (Parasite) உள்ளனவா என்று தெரியும்.

### நல்வாழ்வுப் பணியாளர்கள் ஆற்றும் பணிகள்

மலேரியாவை ஒழிக்க, சென்னை நகரில் தற்போது நல்வாழ்வுப் பணியாளர்கள் பின்வருமாறு பணியாற்றுகிறார்கள் :

1. நல்வாழ்வுப் பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று காய்ச்சலைப் பற்றிக்கேட்டு அறிந்து கொள்கிறார்கள்.

2. அதன்பின் அவர்கள், வீட்டிலேயே எல்லாவிதக் காய்ச்சலுக்கும் இரத்தம் எடுத்து பரிசோதிக்கிறார்கள்.

3. காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனைகளுக்கு வரும் எல்லா நோயாளிகளிடமிருந்தும் இரத்தம்எடுத்து பரிசோதிக்கிறார்கள்.

4. மலேரியா நோய் கண்டவர்களின் மண்ணீரல் (Spleen) பருத்திருக்கும், சுகாதார அதிகாரிகள் அவற்றைப் பரிசோதித்து அறிகிறார்கள்.

5. மலேரியாவைப் பரப்பும் கொசுக்களைக் கண்டறிய வீடுகளுக்குச் சென்றுகொசுக்களைப் பிடித்துப்பரிசோதனை செய்கிறார்கள். இது அந்தப் பகுதியில் உள்ள கொசுக்களின் வகைகளைக் கண்டறிந்து தடுப்பு நடவடிக்கை எடுக்க உதவும்.

6. மலேரியாக் காய்ச்சல் என்று அறிந்ததும் வீட்டிற்கே சென்று மலேரியா பணியாளர்கள் நோயாளிகளுக்குத் தொடர்ந்து 5 நாட்களுக்கு மாத்திரை கொடுக்கிறார்கள்.

7. நீர்த் தேக்கங்களில் எல்லாம், ஊழியர்கள் கொசு மருந்து தெளிக்கிறார்கள்.

8. நீர்த் தேக்கங்களில்தான் கொசு உற்பத்தியாகிறது. அங்கே சுகாதார அதிகாரிகள் சென்று பரிசோதனைக்காக மாதிரி (Sample) எடுக்கிறார்கள்.

9. விசைக் கருவிகள் மூலமும் கொசு ஒழிப்புப் பணி செய்கிறார்கள்.

10. மலேரியா உள்ள பகுதிகளில் வீடு தோறும் சென்று எல்லா இடங்களிலும் 'டி.டி.டீ' மருந்து தெளிக்கிறார்கள்.



11. சென்னை நகரில் பெரும்பாலும் வீடுகளில் மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டி உள்ளது. (Over head tank) இங்குதான் பெரும் அளவில் இந்தக் கொசுக்கள் உற்பத்தி ஆகின்றன. இவைகளில் 'கம்பூசியா' என்னும் சிறிய மீன்களை விடுகிறார்கள். அவை கொசுப் புழுக்களை உட்கொண்டு கொசு உற்பத்தியைத் தடுக்கின்றன.

12. தற்போது சென்னை நகரில் பெருவாரியாக மலேரியா பரவி வருகிறது. ஆகையால் உங்களுக்கோ, உங்கள் வீட்டில் யாருக்கேனும் காய்ச்சல் கண்டால், உடனே அருகிலுள்ள மருத்துவமனைக்குப் போய் இரத்தப் பரிசோதனை செய்து கொள்ளுங்கள். ஏனெனில், அது மலேரியாவாக இருக்கலாம்.

**மலேரியா காய்ச்சலிலிருந்து விடுபட:...**

காய்ச்சல் வந்தவர்கள் தவறாமல் மருந்து உட்கொள்ள வேண்டும். அப்போது தான் நோயிலிருந்து நலம் பெறமுடியும். இதன் மூலம் மற்றவர்களுக்கும் நோய் பரவாமலிருக்க வழி செய்ய முடியும்.



உங்கள் வீடு தேடி நலப் பணியாளர், 'டி.டி.டீ' முதலான மருந்து தெளிக்க வரும் போது, வீட்டிலுள்ள பொருட்களை அப்புறப் படுத்திக் கொடுத்து, அவர்கள் தங்கள் கடமையைச் செய்ய ஒத்துழைப்புத்தர வேண்டும்.

நீர் தேங்கிய இடங்களில் கொசுஒழிப்பு மருந்திட அனுமதியுங்கள்.

தற்போது சென்னை நகரில், மலேரியா ஒழிப்புப் பிரசாரம் தீவிரமாக நடந்து வருகிறது. பலவிதமான துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், சினிமா சிலேடுகள், அலங்கார வண்டிகள் முதலான விளம்பரச் சாதனங்களைப் பயன்படுத்தி பிரசாரம் நடந்து வருகிறது.

இந்நற்பணிக்கு உங்கள் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். மக்கள் விழிப்பே மலேரியா ஒழிப்பு!


வளமான
வாழ்விற்கு....
நாடு நலம் பெற
வீடு வளம் பெற
அரிய பெரிய திட்டங்கள்
அரசு நிதம் தீட்டுகிறது.
திட்டங்களின் இனிய பலன்
எட்டிடவே எல்லோர்க்கும்
அளவான குடும்பம்
அமைவதுதான் சிறப்பாகும்!
பிறந்ததைக் காப்போம்!
பிறப்பதைத் தவிர்ப்போம்!!
சாமி
குடும்ப நலத்துறை
தமிழ்நாடு அரசு.



# குடியரசுத் தலைவர் ஆட்சியில் தமிழ்நாட்டில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்!

—டாக்டர் பா. சின்னதுரை
கூடுதல் இயக்குநர்,
கால்நடை வளர்ப்புத் துறை,
தமிழ்நாடு.

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் என்பது இன்றைய சமுதாயத்தில் பின் தங்கிய சமூகத்தினர் என்று கருதப்படும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகளின் நலன்களைக் கருதி, குடியரசுத் தலைவரின் ஆட்சியில் மிக முக்கியத்துவம் கொடுத்து, கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், வருமானத்தையும் உயர்த்தி, நல்ல குடி மக்களாக - தங்கள் தேவையை, தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும்.

விவசாயத்திலிருந்து மட்டுமே சிறு விவசாயிகளுக்குப் போதிய வருமானம் கிடைக்காது. ஆகவே அவர்களின் வருமானத்தையும், வாழ்க்கை தரத்தையும் உயர்த்த, பால் பண்ணைகள், ஆடு, கோழி, பன்றி வளர்த்தல் போன்ற உப தொழில்களில் ஆர்வம் காட்டினால் அவர்களின் வருமானத்தை அதிகரித்து, சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு இந்தச் சிறு விவசாயிகளின் மேம்பாட்டுத் திட்டம், ரூ. 5 கோடி நிதி உதவியுடன் மிகப் பெரிய அளவில் தமிழகத்தில் முதல்கட்டமாக 8 மாவட்டங்களில் 15 செயல் திட்ட முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

**கன்று வளர்க்கும் மானியத் திட்டத்தின் கீழ் :**

1976 முதல் 1979 வரையில் உள்ள, 3 ஆண்டுக் காலத்தில் நல்ல தரமான கன்றுகளுக்கு ரூ. 800 முதல் ரூ. 1,066 வரை நிதி உதவி வழங்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் 5,000 பேர் வீதம் சேலம், மதுரை, தஞ்சை, திருச்சி, கோவை ஆகிய 5 மாவட்டங்களிலும் 25,000 சிறு விவசாயிகள் ரூ. 2.15 கோடி நிதி உதவி பெற்றுப் பலன் அடைவர்.

ஆடு வளர்க்கும் திட்டத்தின் கீழ் இதே போன்று 20 பெட்டை ஆடுகளும், 1 கிடா ஆடும் கொண்ட ஒரு சிறிய ஆட்டுப் பண்ணைக்கு (ஒரு யூனிட்டுக்கு) ரூ. 750 முதல் ரூ. 1,000 வரை நிதி உதவி அளிக்கப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 3,000 பேர் வீதம் சேலம், வட ஆர்க்காடு, திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் சுமார் 9,000 சிறு விவசாயிகள் ரூ.83.25 இலட்சம் நிதி உதவி அடைவர்.

பன்றி வளர்ப்பதில் நல்ல இலாபமிருப்பதால் 3 பெண் பன்றிகள் கொண்ட ஒரு சிறிய யூனிட்டுக்கு ரூ. 425 முதல் ரூ. 570 வரை மானியம் கொடுக்கப்படுகிறது. பன்றி வளர்ப்போர் ஒவ்வொரு மாவட்டத்திலும் 1,500 பேர் வீதம், மதுரை, தென் ஆர்க்காடு,




வட ஆர்க்காடு ஆகிய 3 மாவட்டங்களிலும் சுமார் 4,500 குடும்பங்கள் ரூ. 7.89 இலட்சம் நிதி உதவி அடைய வாய்ப்புண்டு.

கோழி வளர்ப்பது மிகச் சிறந்த உப தொழிலாக இருப்பதால் 50 முட்டை இடும் கோழிகள் கொண்ட சிறிய கோழிப் பண்ணைக்கு ரூ. 666 முதல் ரூ. 888 வரை மானியம் அடையலாம். கோழி வளர்ப்போர் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து 3,000 பேர் வீதம், சேலம், மதுரை, தென் ஆர்க்காடு, திருநெல்வேலி ஆகிய 4 மாவட்டங்களிலும் சுமார் 12,000 பேர் ரூ. 98.56 இலட்சம் நிதி உதவி அடைந்து பலனடையலாம்.

இவ்வரிய திட்டத்தில் 50,500 சிறு விவசாயிகள் பலன் அடைய முடிகிறது. வேலை வாய்ப்பு குறைவாக உள்ள இந்த நேரத்தில் இத்திட்டம் சிறு விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை நிச்சயமாக உயர்த்தி நல்ல பலனை அளிக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் இத்திட்டத்தை நல்ல முறையில் மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேன்.


# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.
## சேலம்-1.

**தபால் பை எண். 171** — **தொலைபேசி எண்: 2402**

**கிளைகள் :** நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணுபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாய்க்கன் பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

**சொந்த நிதி ரூ. 327 லட்சம்.** — **நடைமுறை மூலதனம் 1711 லட்சம்.**

### வட்டிவிகித அட்டவணை

**கால் டெபாசிட்டுகள் :**

ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்) $3\frac{1}{4}\%$

ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) $3\frac{1}{2}\%$

**சிசன் டெபாசிட்டுகள்:** ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும்

15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் 3%

46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் $3\frac{1}{2}\%$

**பிக்செட் டெபாசிட்டுகள் :** ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

1. 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் 6%
2. 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் $6\frac{1}{2}\%$
3. 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் $7\frac{1}{2}\%$
4. 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் $8\frac{1}{2}\%$
5. 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் $9\frac{1}{2}\%$
6. 61 மாதத்திற்கும் அதற்குமேலும் $10\frac{1}{2}\%$

**சேமிப்புக் கணக்கு 6%**

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.




# ஒருமைப்பாட்டுக்கு ஓர் உல்லாசத்தலம்

அருவி என்றதும் நம் நினைவுக்கு வருவது குற்றாலமாகும்.

தென்றல் இசைபாட, தேனருவி தாளம்போட என்றென்றும் இனிய சுகம் தருகின்ற குற்றாலம், தமிழ்நாட்டிற்கே பெருமை சேர்க்கும் திருத்தலமாகும்.

கோடையின் வாடையே இல்லாத திருக்குற்றாலம், திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசியிலிருந்து மேற்கே மூன்றரை மைல் தொலைவிலுள்ளது. இது மேற்கு மலைத் தொடரின் தென் கிளையின் மேல் சுமார் 500 அடி உயரத்தில் அமையப் பெற்றுள்ளது.

ஜூன் திங்கள் முதல் செப்டம்பர் திங்கள் வரை இங்கு மக்கள் திரளாக வருகின்றனர். இதுவே குற்றாலத்தின் சிறப்புக் காலமாகும். (SAARAL SEASON) இந்தக் காலத்தில் இலேசான மழையும் சிறு தூறலும் இங்கே அடிக்கடி பெய்வது, சுற்றுலாப் பயணிகளுக்கு இதமாக இருக்கும்.

திருக்குற்றாலம் மலைவளமும், நீர்வளமும் மிகுந்த எழில்மிகு நகராகும். கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தூட்டும் இயற்கைக் காட்சிகள் நமக்கு இன்பத்தை வாரி வழங்குவனவாகும். சிறப்புக் காலத்தில் திருக்குற்றாலம் குளுமையாகத் திகழும். இந்நகரில் சூழ்ந்துள்ள காற்று அந்நகரின் 10 மைல் தொலைவில் உள்ள காற்றை விட 10 டிகிரி குறைவாக இருக்கும்.

சிற்றாறு (சித்ராநதி) குற்றால மலையைக் கடந்து சமநிலத்தை அடைவதற்கு முன் பல அருவிகளாக விழுந்து ஒன்று சேர்கின்றது. இது 200 அடி உயரத்தில் உள்ள காட்டிலிருந்து கீழே விழுந்து சமவெளியை அடைகிறது. இதை 'வேத அருவி' என்றும் கூறுவர்.

இந்த அருவியின் இடையில் உள்ள ஒரு பாறை, அருவியைத் தடுக்கின்றது; இப்பாறையில் நீர் மோதித் தெறித்ததன் காரணமாகப் பள்ளம் ஏற்பட்டு, அதில் அருவி பாய்ந்து பொங்கி எழுவது கடல் பொங்குவதுபோல் காட்சியளிக்கிறது. அதனால் இது 'பொங்குமாங்கடல்' எனப்பெயர் பெற்றது. இதிலிருந்து விழும் அருவியே 'குற்றால அருவி' யாகும்.

பொங்குமாங் கடலிலிருந்து சுமார் 2 மைல் தொலைவில் 'சண்பக அருவி' சல சலக்கிறது. இதனருகில் சண்பகாதேவி என்னும் காளி கோயில் ஒன்றும் இருக்கிறது. இதற்கு மேல் இரண்டு மைல் தொலைவில் இருப்பதுதான் 'தேனருவி'.

குற்றாலநாதர் கோயிலுக்குத் தென்மேற்கில் 'ஐந்தருவி' என்னும் அழகிய அருவி காட்சி தருகின்றது. இவை ஐந்தும் தனித் தனியே 30 அடி தூரத்திலிருந்து விழுகின்றன.

குற்றால அருவி மனத்துக்கு மட்டும் இன்பம் பயப்பதல்ல; அது உடல் நலத்துக்கும் உறுதுணையாய் இருக்கிறது.

சுற்றுப் புறச் சூழ்நிலை, இனிய மென்காற்று, சுத்தமான அருவி நீர்-இவை மனித உடலுக்கும் உள்ளத்துக்கும் புத்துணர்ச்சியையும், புதுத்தெம்பையும் உண்டாக்குகின்றன.

அழகிய மலைகளிலே உள்ள அரிய மூலிகைகளைத் தொட்டுத் துள்ளிக்கீழே இனிய நாதத்துடன் வீழும் அருவியில் மருந்துச் சக்தி இருப்பது இயல்புதானே? அது மட்டுமன்று, அருவியிலே தாதுப் பொருள்களும் இழைந்திருக்கின்றனவாம். இத்தகு தனித்தன்மை பெற்ற குற்றால அருவியில் குளிப்பதால் உடல் நலம் பெறும் என்பதில் ஐயமென்ன?

'திங்கள் முடி சூடுமலை தென்றல் விளையாடுமலை' யில் மா, பலா, கமுகு, ஏலம், கிராம்பு போன்றவை மிகுதியாக விளைகின்றன. இவையின்றிக் கண்ணைக் கவரும் பன்னிற மலர்க்கூட்டங்களுக்கும் அங்கே குறைவில்லை.

ஜூன் முதல் செப்டம்பர் வரையுள்ள சிறப்புக் காலங்களில் தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் வந்தவண்ணமிருக்கின்றனர். இவர்களெல்லாம் தங்கி இருந்து மகிழ்வதற்கு ஏற்ற இருப்பிடங்களுக்கும் இங்கே குறைவில்லை. அவை:

1. இந்திய பாணியில் நவீன உணவு விடுதிகள்.

2. தனியாரின் அடுக்கு மாடி மற்றும் தனி இல்லங்கள்.

3. பேரூராட்சியின் ஓய்வு இல்லங்கள்.

4. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் சுற்றுலா மாளிகை.

5. வனத்துறையின் ஓய்வு இல்லம்.

6. குற்றாலநாதர் கோயிலுக்குச் சொந்தமான மர வீடுகள், அறைகள்.

7. இலட்சுமி புரத்திலுள்ள பாண்டியன் லாட்ஜ்.

குற்றாலத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் சுற்றுலா மாளிகைகளைக் கட்டுவதற்குத் திட்டமிட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள் குற்றாலம் சென்றுவருவதற்கும் இது ஏற்பாடு செய்துள்ளது. ஒன்பது நாள் சுற்றுப்பயணத்தில் (9 days Package Tour) இதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பயணம் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமையன்று தொடங்குகிறது.

குற்றாலத்தைக் கண்டு களிப்பதற்குப் போக்குவரத்து வசதிகளும் இப்போது நிறைய உள்ளன. மதுரை திருவனந்தபுரம் வழித்தடத்தில் தென்காசி இரயில் நிலையம் முக்கியமான ஒரு இரயில் நிலையமாக அமைந்துள்ளது. மதுரை, திருநெல்வேலி, திருவனந்தபுரம் ஆகிய இடங்களிலிருந்தும் குற்றாலம் செல்லப் பேருந்து வசதிகள் உள்ளன. இவையன்றி உள்ளூரில் போக்குவரத்துக்கான பேருந்துகளும், வாடகைக் கார்களும் உள்ளன.

இந்தியாவிலுள்ள எல்லா மாநிலத்தவரையும் ஒன்று சேர்க்கும் ஒருமைப்பாட்டு உல்லாசத் தலமாகத் திருக்குற்றாலம் திகழ்கிறது என்று நாம் பெருமையோடு சொல்லிக் கொள்ளலாம்.

—பி. வி. கிரி



# பருத்திக்குச் சிக்கனப் பாசன முறை

—ஆர். கே. சிவனப்பன்,
பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்,
மண், நீர்ப்பாதுகாப்பு துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்—3.

தமிழகத்தின் தொழில் வளத்தையும், பொருளாதாரத்தையும் பெருக்கும் முக்கியப் பயிர்களில் பருத்தியும் ஒன்றாகும். தமிழ் நாட்டில் பருத்தி சுமார் 3.10 இலட்சம் எக்டர் நிலத்தில் பயிரிடப்படுகின்றது. அதில் 83,000 எக்டருக்கு, பெரும்பாலும் கிணற்று நீரால் பாசனம் செய்யப்படுகின்றது. மொத்தம் பயிரிடப்படும் பரப்பில் பாசனப் பருத்தி மூன்றில் ஒரு பங்கு இருப்பினும், மகசூலில் இது மூன்றில் இரண்டு பங்கு அளவு இருக்கின்றது. இந்த முக்கியப் பயிரின் உற்பத்தியைத் திருந்திய கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளாலும், உள்ளீடுகளை திறமையாகப் பயன்படுத்தியும் வெகுவாகப் பெருக்கலாம். நீர், பருத்தி உற்பத்திக்கு ஒரு முக்கியமான உள்ளீடு ஆகும். ஆனால், நீர், பொதுவாக தமிழ் நாட்டிலுள்ள, குறிப்பாக கோவை, சேலம் மாவட்டங்களில், ஓர் அரிய பொருளாகக் கருதும் காலம் வந்துவிட்டது. மற்றும் இதை ஆழக் கிணற்றில் இருந்து வெளியே கொண்டு வர ஆகும் செலவும் மிகவும் அதிகமாக உள்ளது. அவ்வாறு இருக்க, இந்த நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி எவ்வாறு அதிக மகசூலை எடுக்க முடியும் என தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடத்திய ஆராய்ச்சியின் முடிவுகளை வேளாண் குடி பெரு மக்களாகிய உங்களுக்குத் தெரிவிக்க ஆசைப்படுகின்றேன்.

**பாசன முறைகள் :**

பொதுவாக நம் மாநிலத்தில் பருத்திக்கு கீழ்க்கண்ட முறைகளில் நீர் பாய்ச்சப்படுகின்றது.

1. சால் முறை (Furrow)
2. பாத்தி முறை (Basin)
3. பரவல் பாசன முறை (Border)

மேலே கண்ட பல்வேறு பாசன முறைகளை ஒப்பிட்டுப் பார்த்து நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த எந்த முறைப் பாசனம் மிகவும் சிறந்தது எனக் கண்டுபிடிக்க 'எம். சி. யு. 5' பருத்தியில் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. இந்தப் பரிசோதனையில் நீண்ட சால், பரவல், சிறுசால், பாத்தி ஆகிய முறைகளை ஐந்து முறையாகப் பிரித்து பரிசோதிக்கப்பட்டது. இந்தப் பரிசோதனையில் சாலின் நீளம், பரவல் பாசனத்தின் அகலம், நீளம் முதலியவைகளை மண்ணின் நீர் எடுக்கும் தன்மை, நிலச் சரிவு, நீரின் அளவை முதலியவைகளைக் கணக்கில் கொண்டு நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி சால் 100 அடி (30 மீட்டர்) நீளமும், பரவல் முறையில் 100 அடி நீளமும், 10 அடி அகலமும் கொண்டதாகவும், பாத்தி, 20 அடிக்கு 10 அடி அகலம், குறுகிய சால் 20 அடி நீளம் கொண்டதாகவும் இருந்தது. எல்லா வயல்களுக்கும் நீர் ஒரே சீராகப் பாய்ச்சப்பட்டது. பிறகு பருத்தியின் மகசூலை நான்கு முறை, ஒரு வார இடைவெளியில் எடுத்துக் கணக்கிடப்பட்டது.

**நீளசால் பாசன முறையே சிறந்தது!**

இந்த ஆராய்ச்சிகளில் கண்டறிந்த முடிவின்படி பருத்தி விளைச்சல் எல்லாப். பாசன முறைகளிலும் ஒரே மாதிரி மகசூல் கொடுத்தது. ஆனால் நீர் உபயோகித்த அளவு, பாத்தி பாசனத்தை விட நீண்ட சால் பாசன முறையில் 30 சதவீதம் குறைவாகவே இருந்துள்ளது. அதாவது ஒரு குறிப்பிட்ட நீர் அளவில், பருத்தியின் உற்பத்தி நீண்ட சாலில் 18.1 கிலோ கிராமாகவும், சிறு சாலில் 16.5 கிலோ கிராம் ஆகவும், பாத்தியில் 12.2 கிலோ கிராமாகவும், பரவல் பாசனத்தில் 10.8 கிலோ கிராம் எனவும் இருந்துள்ளது. எனவே, நீள் சால் பாசன முறையை உபயோகித்து, பருத்திக்கு நீரை வெகுவாகச் சிக்கனப்படுத்த முடியும் என அறியப்பட்டது. மற்றும் இந்த முறையில் களையின் பாதிப்பும் மற்ற முறைப் பாசனத்தை விடக் குறைவாக இருந்தது. ஆகையால் 'எம். சி. யு.5' பருத்திக்கு நீள சால் பாசன முறையை உபயோகித்து நீரை மிச்சப்படுத்த முடியும்.

## கிணற்றுப் பாசனத்திற்கு ஏற்ற 2—வகைச்சால் பாசன முறை:

சால் பாசன முறையை உபயோகித்து இன்னும் தண்ணீரை எவ்வளவு சிக்கனமாகப் பயன் படுத்த முடியும் என மேற்கொண்டு ஆராய்ச்சி நடத்தப்பட்டது. அதில் கீழ்க்காணும் இரு முறைகள் கையாளப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டது.

1. சால் முறையில் ஒன்றுவிட்டு ஒரு சாலில் பாசனம் செய்தல்.

2. அதிக இடைவெளி விட்டு சால் அமைத்து, சாலின் இருபுறமும் பயிர் செய்தல்.

இவற்றில் முதன் முறையில், முதல் 2 பாசனத்தின்போது எல்லாச் சாலிலும், எப்போதும் தண்ணீர் பாய்ச்சுவது மாதிரி விட்டு கட்ட வேண்டும். ஆனால் அடுத்து வரும் பாசனத்தின்போது ஒரு சால் விட்டு ஒரு சாலில் தண்ணீர் கட்ட வேண்டும். இதைத் தொடர்ந்து கொடுக்கும் பாசனத்தின்போது, இதற்கு முன்னால் செய்த பாசனத்தின் போது நீர் கட்டப்பட்டாத சால்களில் மட்டும் தண்ணீர் கட்ட வேண்டும். இவ்வாறாக ஒவ்வொரு பாசனத்தின் போதும் ஒரு சால் விட்டு ஒரு சாலில் தண்ணீர் கொடுத்துப் பார்த்ததில், எல்லா சால்களிலும் எல்லாப் பாசனத்தின் போதும் நீர் கட்டியதன் மூலம் கிடைத்த மகசூலின் அளவே இதிலும் கிடைத்தது. ஆனால் தண்ணீர் சுமார் 30—40 சதவீதம் அளவு மிச்சப்படுத்த முடிந்தது. இந்த முறை மணற்பாங்கான நிலத்திற்கு மிகவும் ஏற்றது.

அடுத்த முறையில், (அதாவது அதிக இடைவெளி விட்டு சால் அமைத்து சாலின் இரு புறமும் பயிர் செய்யும் முறை), ஒரு சாலில் நீர் பாய்ச்சினால் அது இரண்டு வரிசையில் இருக்கும் பயிர்கட்கும் பயன்படும். மற்றும் சாலுக்குச் சால் அதிக இடைவெளி இருப்பதால், அதில் ஒரு குறுகிய கால பயிர் வகையைப் பயிரிட முடிகின்றது. உதாரணமாகச் சாலுக்குச் சால் 75 செ.மீ. இடைவெளி இருக்கும். ஒரு சாலில் ஒரே வரிசை பருத்தியை நட்டு நீர் பாய்ச்சுவது வழக்கம். இப்புதிய முறையில், சாலிற்குச் சால் 90 செ.மீ. தூரமும், சாலின் அகலம் 60 செ.மீ. ஆகவும் இருக்கும்படி போடப்பட்டது. சாலின் இருபக்கமும் இரு வரிசை பருத்தி நட்டு, நீர் பாய்ச்சப்பட்டது. ஆராய்ச்சியின் முடிவுப் படி விளைச்சலில் குறைவு இன்றி நீரில் 50 சதவீதம் வரை மிச்சப்படுத்த முடிந்தது. இத்துடன், சால்களுக்கு நடுவில் பயிரிடப்பட்ட பச்சைப் பயிரின் மூலமாக ஓரளவு மகசூலும் கிடைக்கப் பெற்றது. ஆகையால் கிணற்றுப் பாசனத்தில், நீரை மிச்சப்படுத்த மேற்கூறிய இரு முறைகளையும் கையாளலாம்.



சாதாரண பாசன முறைக்குத் தேவைப்படும் நீரில், மூன்றில் ஒரு பங்கே துளிநீர்ப்பாசன முறைக்குப் போதுமானது!

## தெளிநீர்ப் பாசன முறை:

பருத்திச் சாகுபடிக்கு மேற்பரப்புப் பாசனமுறைகளைத் தவிர, தெளி நீர்ப் பாசன முறையையும் பயன்படுத்தலாம். கோவையில் நடத்திய ஆராய்ச்சியின் முடிவுப் படி இம்முறைப் பாசனத்தில், மேற்பரப்பு முறையைக் காட்டிலும் 20-30 சதவீதம் அளவுக்கு நீரைக் குறைவாகப் பயன்படுத்தி, அதே மகசூலை எடுக்க முடியும் என அறியப்பட்டது. ஆனால் தெளிநீர் சாதன அமைப்பு நிறுவ, ஒரு எக்டருக்கு 5,000 முதல் 6,500 ரூபாய் வரை செலவு ஆகும்.

மேற்கூறிய பாசனத்தைக் காட்டிலும் மிகவும் சிக்கனமாக நீரை உபயோகித்து நல்ல மகசூல் எடுக்க, புதிய முறை ஒன்றைச் சமீப காலத்தில் கண்டுபிடிக்கப் பட்டு, அதை விரிவாகப் பயன் படுத்துகிறார்கள். அந்த முறையைச் சொட்டு நீர்ப் பாசனம் அல்லது துளி நீர்ப்பாசனம் என்பார்கள். இந்தப் பாசனம் உண்மையிலேயே பாசனக் கலையில் ஒரு முன்னேற்றமாகும்.

## துளி நீர்ப்பாசனம்:

இம் முறையில் செடிகட்குத் தேவையான நீரைத் தேவைப்படும் பொழுது வேரின் பக்கத்தில் கொடுக்க முடிகின்றது. இதில் தண்ணீரைக் குழாய் மூலம் எடுத்துச் சென்று ஒவ்வொரு செடியின் வேருக்கும், அதன் தேவைக்கேற்பக் கொடுக்கப்படுகிறது. இந்தப் பாசன முறையில் நீரின் தேவை சாதாரணமான பாசனமுறைக்கு ஆகும்நீரில் மூன்றில் ஒரு பங்கே ஆகும். ஆனால் பயிர் மகசூலில் மேற்பரப்பு பாசனத்தில் கிடைத்த அளவே கிடைக்கிறது. ஆனால் இப்பாசன முறையை அமைப்பதற்கு ஒரு எக்டேருக்கு சுமார் 10,000 ரூபாய் செலவு ஆகும். இந்த முதலீடு மேற்சொன்ன நீர்த் தேவை, மகசூல் முதலியவைகளைப் பார்க்கும் போது அதிகமல்லஎனக் கூறலாம்.

நீர் தட்டுப்பாடான இந்தக் காலத்தில், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த ஒவ்வொரு விவசாயியும் முயல வேண்டும். அப்பொழுதுதான், இருக்கும் தண்ணீரைக் கொண்டு அதிக பரப்பளவில் பயிர் விளைவித்து, மகசூல் பெருக்கத்திற்குத் தேவையான உணவு உற்பத்தியைச் செய்ய முடியும். மேற்சொன்ன முறைகளை, அவரவர்கட்கு ஏற்ற முறையில் நடைமுறையில் கொணர்ந்து நீரைச் சிக்கனமாக உபயோகித்து ஒவ்வொரு உழவர் பெருமகனும் வளம் பெறவும், அதன் மூலம் நாடு செழிக்கவும் வழி வகுக்க வேண்டும்.

# தொழிலாளர் நலங்காக்கும்

# தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம்



—எஸ். அருணசலம்,
மண்டல இயக்குநர்,
இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன்,
சென்னை.

**தொ**ழிலாளர் அரசாங்க இன்ஷியூரன்ஸ் திட்டம் சென்ற 24 ஆண்டுகளாக நமது நாட்டில் செயல்பட்டு வருகிறது. டெல்லி, கான்பூர் இரண்டு இடங்களிலும் 1952 பிப்ரவரி 24-ஆம் தேதி முதல் அமல் செய்யப்பட்டு, பின்னர் படிப்படியாக இத்திட்டம் ஏனைய இடங்களுக்கும் விரிவாக்கப்பட்டு, இன்று நம் நாட்டில் 18 மாநிலங்களில் 365 இடங்களில் 48 இலட்சம் தொழிலாளர்கள் இதன் பயன்களை அடைந்து வருகின்றனர். இன்ஷியூர் செய்யப்பட்ட தொழிலாளர்களும், அவர்களுடைய குடும்பத்தினருமாக 185 இலட்சம் நபர்கள் இத்திட்டத்தின் மருத்துவ வசதிகளைப் பெறுகின்றனர்.

தமிழ்நாடு, பாண்டிச்சேரி, உள்ளிட்ட தமிழ்நாடு மண்டலத்தில் 44 இடங்களில் 4 இலட்சம் தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டிருந்தனர். தமிழ்நாட்டில் 42 இடங்களில் 3,82,000 தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தின் பயன்களைச் சென்ற ஆண்டுவரை அனுபவித்து வந்தனர். சென்ற நவம்பர் மாதம் 30-ஆம் தேதி முதல், இத்திட்டத்தின் கீழ் வருவதற்கான ஊதிய உச்சவரம்பை உயர்த்தியதன் விளைவாக, மேலும் 80,000 ஊழியர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டனர். தொழிலாளர்களும், அவர்களுடைய குடும்பத்தினருமாக, தமிழ்நாட்டில் ஏறக்குறைய 18 இலட்சம் நபர்கள் இத்திட்டத்தின் கீழ் மருத்துவ வசதிகளைப் பெற்று வருகின்றனர்.

தனியாக மருந்தகங்களும், மருத்துவ மனைகளும் இத்திட்டத்தின் கீழ் செயல்படுகின்றன. சென்னை, கோவை, மதுரை ஆகிய முக்கிய நகரங்களில் தனி 'இ. எஸ். ஐ.' மருத்துவ மனைகள் இருக்கின்றன. சென்னை அசோக் நகரில் இரண்டாவது மருத்துவ மனை ஒன்று கட்டப்பட்டு வருகிறது. வேறு சில இடங்களில் இணைப்பு மருத்துவ மனைகளும் ( Annex ) மற்ற இடங்களில் அரசு மருத்துவ மனைகளில் இன்ஷியூர் செய்யப்பட்ட ஊழியர்களுக்கெனத் தனிப் படுக்கை வசதிகளும் இருக்கின்றன. இவ்வாறாக, தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் 1,597 படுக்கைகள் இருக்கின்றன. சென்னையில் இரண்டாவது மருத்துவ மனை செயல்படும்போது 500 படுக்கைகள் உபயோகத்துக்கு வரும். பாண்டிச்சேரியிலும் 50 படுக்கைகள் கொண்ட 'இ.எஸ். ஐ.' மருத்துவமனை ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இது இவ்வாண்டு இறுதிக்குள் உபயோகத்துக்கு வரும்.

மனைவி அல்லது கணவன், மைனர் பிள்ளைகள், பெண்கள், சார்ந்திருக்கும் பெற்றோர் ஓர் ஊழியரின் குடும்பத்தினராவர். தொழிலாளர்களுக்கும், அவர் குடும்பத்தினருக்கும் மருந்தகங்களில் வெளியிருப்புச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மருந்தகங்களிலேயே சிறுசோதனைக் கூடங்கள் உண்டு. விரிவான பரிசோதனை தேவைப்படுபவர்களை மருத்துவர்களே மருத்துவ வல்லுநரிடம் (Specialists) அனுப்பி, அவர்தம், ஆலோசனைப்படி மருத்துவம் செய்கின்றனர். தேவைப்பட்டால் நோயாளிகளை அவர்களுடைய வீடுகளிலேயே சென்று பார்க்கும் வசதியும் இத்திட்டத்தில் உண்டு. உள்ளிருப்புச் சிகிச்சை தேவைப்படுபவர்களை மருந்தக மருத்துவர்களே, மருத்துவ மனைகளில் சேர்க்க ஆவன செய்வர். மருந்தகங்களும், மருத்துவ மனைகளும் மாநில அரசால் நிர்வகிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் பணவசதிகளை அளிப்பதற்காக ஆங்காங்கு உள்ளூர் அலுவலகங்கள் (Local Offices) ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளை மேற்பார்வையிடுவதுடன், கட்டணங்களை வசூலிக்கவும், கணக்குகளை வைத்துக் கொள்ளவும், மாநில அரசுகளுடன் தொடர்புகொண்டு இத்திட்டத்தின் நடைமுறைக்கும், முன்னேற்றத்துக்கும் ஆவன செய்யவும், மண்டல அலுவலகம் (Regional Office) சென்னையில் இயங்குகிறது. இது, தமிழ்நாடு, பாண்டிச்சேரி மாநிலங்களில் இத்திட்டம் இயங்குவதற்கான பணிகளைக் கவனிக்கிறது.

நோய்க் காலத்திலும், தாய்மைப் பேறு பெறும் காலத்திலும் தற்காலிக, நிரந்தரகால ஊனங்களுக்கும், விபத்துக் காரணமாக இறந்துவிட்ட தொழிலாளியைச் சார்ந்தோருக்கும், இறந்த தொழிலாளியின் ஈமச்சடங்குக்காகவும் குறிப்பிட்ட பண உதவிகள் உள்ளூர் அலுவலகங்களில் வழங்கப்படுகின்றன. இவைகளில் நோய்க்கால, தாய்மைப் பேறுகால, தற்காலிக ஊனகால, ஈமச்சடங்குக்கான பணஉதவிகளை உள்ளூர் அலுவலகமே நிர்ணயம் செய்து வழங்குகிறது. நிரந்தரக்கால ஊன உதவியும், சார்ந்தோருக்கான பணஉதவியும் மண்டல அலுவலகத்தினால் நிர்ணயிக்கப்படுகின்றன.

தொழிலாளர்களுக்கு இன்றியமையாது தேவைப்படும் சமூகப் பாதுகாப்பு இத்திட்டத்தின் கீழ் கிடைக்கிறது. இதனால் ''சிரமமான காலங்களில் என்ன செய்வோம்'' என்ற கவலையில்லாமல், தொழிலாளர்கள் தம் வேலைகளில் முழுமூச்சுடன் ஈடுபட்டு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்குத் தேவையான உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபட முடிகிறது. இந்தத் திட்டத்தின் நிர்வாகத்தில், இத்திட்டத்தினால்

பயன் அடையும் தொழிலாளர்களும் ஈடுபடுத்தப்படுகின்றனர். தொழிலாளர் அரசாங்க இன்ஷியூரன்ஸ் கார்ப்பொரேஷன், அதன் நிலைக்குழு (Standing Committee) அதற்கு மருத்துவ விஷயங்களில் ஆலோசனை கூற ஏற்படுத்தப்பட்டிருக்கும் மருத்துவ நன்மைக் குழு (Medical Benefit Council) ஆகிய அகில இந்திய அமைப்புகளில் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கிறார்கள். அதேபோல மாநிலங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மண்டல வாரியங்களிலும் உள்ளூர் அளவில் இயங்கும் உள்ளூர்க் குழுக்களிலும் (Local Committees) தொழிலாளர் பிரதிநிதிகளுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நமது பாரதப் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தில் ஒன்றான 'நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கு' என்ற அம்சம் இங்கு கடைப்பிடிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்தின்கீழ் கொடுக்கப்படும் வசதிகள், சென்ற பல ஆண்டுகளில் மேலும் விரிவாக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஓராண்டில் 56 நாட்களுக்கு என்றிருந்த நோய்க்காலப் பணஉதவி, 21 குறிப்பிட்ட நோய்களுக்கு நீட்டிக்கப்பட்டு இவ்வாண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நீட்டிக்கப்பட்ட நோய்க்காலப் பணஉதவி சாதாரண நோய்காலப் பண உதவியைவிட 25 சதம் அதிகமாக ஆக்கப்பட்டிருக்கிறது. தாய்மைக் காலப் பண உதவியும் அதிகரிக்கப்பட்டு, இப்பொழுது குறைப் பிரசவத்துக்கும் அளிக்கப்படுகிறது. தாய் இறந்து, குழந்தை உயிருடன் இருந்தால், தாய்க்கு வேண்டிய முழுஉதவியும் குழந்தைக்காக, தாய் நியமிக்கும் நபரிடம் கொடுக்கப்படுகிறது.

ஊனகாலப் பண உதவி, நோய்க்கால உதவியை விட 25 சதம் அதிகமாக்கப்பட்டிருப்பதும் ஈமச்சடங்குக்கான பண உதவி ரூபாய் 100 அளிப்பதும், உறுப்பிழந்தவர்கட்குச் செயற்கை உறுப்புகள் பொருத்துவதும், விபத்துக் காரணமாக கண் பார்வை மங்கியவர்களுக்குக் கண்ணாடிகளும், கேட்கும் சக்தி இழந்தோருக்குக் கேட்கும் கருவியும், பற்களை இழந்தோருக்குச் செயற்கைப் பற்கள் பொருத்துவதும் இந்தத் திட்டத்தின் வளர்ச்சியைக் குறித்துக் காட்டும்.

ஒருபுறம் திட்டத்தில் முன்னேற்றங்களை எய்தி வருவதுடன் மறுபுறம் மேலும் அதிகத் தொழிலாளர்களையும், ஏனைய ஊழியர்களையும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கும் ஆவன செய்யப்பட்டு வருகிறது. திட்ட ஆரம்ப நாட்களில் மாத வருவாய் ரூ. 400/-ம் அதற்குக் குறைவாகவும் பெறும் ஊழியர்கள் மட்டுமே இத்திட்டத்தின் பயன்களை அடைந்தனர்.

1968-ல் இது ரூ. 500/- ஆக உயர்த்தப்பட்டது. அத்துடன் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுடன் கூட அதன் நிர்வாக ஊழியர்களுக்கும் கச்சாப் பொருள் வாங்கி, உற்பத்தியான பொருட்களை விற்பனை செய்யும் ஊழியர்களுக்கும், இத்திட்டம் விரிவாக்கப்பட்டது.

சென்ற ஆண்டு செய்யப்பட்ட திருத்தத்தின்படி அதிகப் பட்ச மாத வருவாய் ரூ. 500/- என்பது ரூ. 1,000/- ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் மேலும் 80,000 ஊழியர்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றனர்.

தொழிலாளர் அரசாங்க இன்ஷியூரன்ஸ் சட்டத்தின்படி, சம்பந்தப்பட்ட அரசு இத்திட்டத்தை ஏனைய தொழிலகங்கட்கும், வியாபாரக் கூடங்களுக்கும் மற்ற நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தலாம். இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் யோசனை கூறும் பொருட்டு பாரத அரசு தொலைநோக்குத் திட்டக் குழு (Perspective Planning Committee) ஒன்றை ஏற்படுத்தியது. அதன் சிபாரிசுகளின்படி இத்திட்டத்தைப் படிப்படியாக மற்ற நிறுவனங்களுக்கும், மலைத் தோட்டங்களுக்கும் அமல் செய்யப்படவேண்டும் என்ற கருத்தை மாநில அரசுகள் ஏற்றுக்கொண்டு அதற்கான காரியங்களை மேற்கொண்டிருக்கின்றன. இதன் அடிப்படையில் பாண்டிச்சேரி அரசு இத்திட்டத்தை ஏனைய நிறுவனங்களுக்கும் சென்ற 29-2-'76 முதல் விரிவுபடுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது விசை உபயோகித்து, 20 பேரும் அதற்கு மேலும் வேலை செய்யும் தொழிற்சாலைகளுக்கு மட்டும் தான் இத்திட்டம் விரிவாக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் விரைவிலேயே, ஏனைய சிறுவிசைத் தொழிற்சாலைகள், 20 பேருக்கு மேல் வேலைசெய்யும் விசை உபயோகிக்காத தொழிற்சாலைகள், கடைகள், மற்றும் நிறுவனங்கள், ஓட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள், சினிமா தியேட்டர்கள், போக்குவரத்து நிறுவனங்கள் உழைக்கும் பத்திரிகையாளர்கள் ஆகியோருக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான அரசிதழ் (Gazette) அறிவிப்பைத் தமிழக அரசு இவ்வாண்டு ஏப்ரல் மூன்றும் தேதி வெளியிட்டிருக்கிறது. வரும் அக்டோபர் மாதம் 3-ம் தேதிக்குப் பின், தமிழக அரசு முடிவு செய்யும் நாளிலிருந்து, குறிப்பிட்ட இடங்களில் உள்ள இத்தகைய நிறுவனங்களுக்கு இத்திட்டம் விரிவாக்கப்படும். இதற்கான பூர்வாங்க வேலைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. தமிழ்நாட்டில் சுமார் 1.5 இலட்சம் ஊழியர்கள் இத்துறைகளில் பணிபுரிகின்றனர்.

மக்கள் தொகைப் பெருக்கம் நம் நாட்டை எதிர்நோக்கியுள்ள மாபெரும் பிரச்சினையாக உள்ளது. நாட்டு நலனிலும், எதிர்காலச் சமுதாயத்தின் நலனிலும் அக்கறையுள்ள பலரும் குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை வலியுறுத்துகின்றனர். இந்தப் பணியில் தொழிலாளர் அரசாங்க இன்ஷியூரன்ஸ் கார்ப்பரேஷனும் ஈடுபட ஆரம்பித்துள்ளது. இதற்காக ஐக்கியநாடுகள்





உதவியுடன் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுபவர்களில் 20 சத வீதத்தினர் குடும்பக்கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. வரும் மூன்று ஆண்டுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். நாட்டில் உள்ள எல்லா 'இ.எஸ்.ஐ.' மருத்துவமனைகளிலும், மற்றும் மருந்தகங்களிலும் குடும்பக் கட்டுப்பாடு யூனிட்டுகள் நிறுவப்படும். இவ்வாண்டு 50 யூனிட்டுகள் ஒவ்வொன்றும் 25,000 நபர்களுக்கு மேல் ஈடுபடுத்தக்கூடியதாகவும், 1977-ல் 70 யூனிட்டுகள் ஒவ்வொன்றும் 10,000 முதல் 25,000 நபர்களை ஈடுபடுத்தக் கூடியதாகவும், 1978-ல் 100 யூனிட்டுகள் ஒவ்வொன்றும் 10,000 நபர்களுக்குக் குறைவாக ஈடுபடுத்தக்கூடியதாகவும் செயல்படத் துவங்கும். ஒவ்வொரு யூனிட்டும் மாதமொன்றுக்கு 30 குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைகளாவது செய்யும். தாய்-சேய் நலனும் பெரிதும் பேணிக் காக்கப்படும்.

தமிழ்நாட்டில் சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள 'இ. எஸ். ஐ.' மருத்துவ மனைகளில் குடும்பக்கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சைக்காக தலா 6 படுக்கைகள் ஒதுக்கப்படும். முதல் ஆண்டில் சென்னையில் ஐந்து மையங்களும், கோவை மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் முறையே ஒரு மையமும், மொத்தம் எட்டு மையங்களும், ஒவ்வொன்றும் 25,000 நபர்களுக்குப் பயனளிக்கும் வகையில் ஏற்படுத்தப்படும்.

இந்த இன்ஷியூரன்ஸ் திட்டத்துக்கான நிதி, தொழிலாளர், தொழிற்சாலை அதிபர் ஆகிய இருவரும் செலுத்தும் சந்தாவின் மூலம் கிடைக்கிறது. இச்சந்தாவைத் தொழிலாளர்களிடமிருந்து வசூலித்து, தமது பங்கையும் சேர்த்து, தொழிலதிபர்கள் 'இ.எஸ்.ஐ.' நிதியில் கட்டவேண்டும். அப்படிக் கட்டத் தவறுபவர் மேல் நடவடிக்கை எடுத்து, பணத்தை வசூல் செய்ய வேண்டியது மண்டல அலுவலகத்தின் பணியாகும். பல தொழிலக உரிமையாளர்கள் இவ்வாறு கட்டணம் செலுத்த வேண்டியதில் தவறிவிடுகிறார்கள். இக் கட்டணத்தை நிலவரி பாக்கியாக வசூல் செய்தும், தவறுபவர்கள் மீது 'கிரிமினல்' நடவடிக்கை எடுத்தும், மேற்கொண்டு அவர்கள் தவறாமல் இருக்கச் செய்வதும் அவசியமாகிறது.



சென்ற ஆண்டு செய்த திருத்தங்களின்படி 'பிராசிகியூஷன்' செய்யப்பட்ட தொழிலதிபருக்குச் சிறைத் தண்டனை அளிப்பது கட்டாயமாக்கப் பட்டிருக்கிறது. அத்துடன்கூட, கட்டத் தவறிய தொகையைப் போல இன்னொரு மடங்குவரை நட்ட ஈடாகப் போட்டு வசூல் செய்யவும் வகை செய்யப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களிடம் வசூல் செய்யும் தொகை பாதுகாப்பானது. அதைக்கட்டத் தவறுபவர் தண்டனைக்குள்ளாவார்கள் எனத் திருத்தப்பட்ட சட்டம் கூறுகிறது.

இம்மாநிலத்தில் நோய்க்காலப் பண உதவியைத் தவறான வழியில் பெறுவது என்ற ஒருநிலை இருந்து வந்தது. தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தம்., கதவடைப்பு, 'லே-ஆப்' என்று வந்தால் தொழிலாளர்கள் 'இ.எஸ்.ஐ.' மருந்தகங்களை அணுகி, நோய் இல்லாத போதும் அதற்கான சர்ட்டிபிகேட்டுகளைப் பெற்று நோய்க்கால பண உதவியைத் தவறாகப்பெற்று வந்தனர். நாட்டில் நெருக்கடி நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதன் பயனாகத் தொழிற்சாலைகள் மூடப்படாத ஒருநிலை உருவாகியிருப்பது இந்த நிலைமையைச் சீர்திருத்தியிருக்கிறது. நெருக்கடி நிலைமையின் சாதனைகளாக ஒழுங்கும், கட்டுப்பாடும் ஏற்பட்டிருக்கும் இன்றைய நிலையில் தொழிலாளர்கள் இத்திட்டத்தின் பயன்களைத் தவறாக உபயோகப்படுத்துவது நின்றிருப்பதும், 'இ. எஸ். ஐ.' கார்ப்பொரேஷன் அலுவலகங்கள் சீரான முறையில் செயல்படுவதும் வரவேற்கப்படக்கூடியதாக உள்ளது.

# கோ-ஆப்டெக்ஸ் மக்கள் விரும்பும் வகைகள்! நியாயமான விலைகள்!



கோ-ஆப்டெக்ஸ் சேலைகள்,

## அழகு மிளிரும் ஆரணங்குகள்!

ஆரணி, கும்பகோணம், காஞ்சிபுரம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம், மதுரை பருத்தி கைத்தறிச் சேலைகள், அச்சிட்ட சுங்கடி சேலைகள் மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்.



கோ-ஆப்டெக்ஸ்

## படுக்கை விரிப்புகள், மலர்ப் படுக்கைகள்!

நேர்த்தியான நெசவு கைத்தறிப் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள். உங்களுக்கு சொகுசு அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

## துவாலைகள், தூய்மையான துவாலைகள்!

சாதா, டர்கிஷ் வகைகள், மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் வகைகள். உங்களது சுகாதாரத்துக்கு இன்றியமையாதவை!



கோ-ஆப்டெக்ஸ்

## லுங்கிகள், வசதியானவை நீடித்துழைப்பவை!

உங்கள் விருப்பத்துக்குகந்த சாதா, கோடிட்ட அல்லது கட்டமிட்ட பல வகைகளில்.

மற்றும் கைத்தறிப் பருத்தி வகைகள், வேட்டிகள், உடுப்புகளுக்கான துணிகள், அலங்காரத் துணிவகைகள்—குடும்பத்தினர் அனைவருக்குமே உகந்த முழுதும் புதிய வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறியே வண்ணத்துப்பூச்சி

பதிவு எண். M. 8676



# வாழ்வு மலர
# வளம் பெருக
# 20 அம்சத்திட்டம்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.